பக்கங்கள்: இருபத்திரண்டு+IV=26

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 15 ஞாயிற்றுக்கிழமை (01.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 340

# தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்தியில் பங்கெடுக்க தனியார் துறைக்கு அழைப்பு

## 200 தொழிலதிபர்கள் கூடிய கருத்தரங்கில் வேண்டுதல்





கொழும்பு, நவம்பர்01

வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களின் அபிவிருத்தியில் பங்கெடுத்து, அவற்றை முன் னேற்றம் காணச் செய்வதற்கு உதவுமாறு நாட்டின் தொழில் அதிபர்களுக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

வடக்கு, கிழக்கில் வாய்ப்பாகவுள்ள வர்த்தக, கைத்தொழில் மற்றும் உட்கட்டுமான திட்டங்களில் மூலதனம் இடக்கூடிய வற்றை இனங்கண்டு அவற்றை செயற்படுத்துவதன் மூலம் தேசிய பொருளா தார வளர்ச்சிக்கு தொழில் அதிபர்கள் உதவ முடியும் என்று எடுத்துக் கூறப்பட்டுள்ளது. (22ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விரிவுபடுத்தி அரசியல் கட்சியாக பதிவுசெய்ய ஆலோசனை

### ரெலோ ஸ்ரீகாந்தா எம்.பி. தகவல்

கொழும்பு, நவ.1

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விரிவு படுத்தி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்வது குறித்து ஆராயப்பட உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா இத்த கவலைத் தெரிவித்தார்.

அக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ அமைப்பின் செயலாளர் பிர சன்னா இந்திரகுமார் விடுத்த கோரிக் கையை அடுத்து கூட்டமைப்பு அடுத்த வார நடுப்பகுதியில் கூடவுள்ளது.

கூட்டமைப்பின் செயற்பாடுகள், எதிர்கால (22ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

### நாளை

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக் கான தமிழ்மொழியும் இலக்கிய மும்-I,II, கணிதம்-II பாடங்களுக் கான மாதிரி வினாத்தாள்கள்.

## 1,239 பேர் நேற்று யாழ்.வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், நவ. 1

வவுனியாவில் இருந்து கரவெட்டி, பருத்தித்துறை, தீவகம் ஆகிய பகுதி களைச் சேர்ந்த 696 குடும்பங்களைச் சேர்ந்த 1,239 பேர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். (22ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மீளக்குடியமர்ந்த பகுதியில் கைக்குண்டு வெடித்து சிறுவர்கள் இருவர் காயம்

மட்டக்களப்பு, நவ.1

மட்டக்களப்பு மாவட்டம், ஊறுகாமம் பகு தியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைக்குண்டு ஒன்று வெடித்ததில் சிறுவர் கள் இருவர் பலத்த கரயமடைந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம் பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்திய பிரதேசத்தில், சிறுவர்கள் விளையாடிக் கொண் (22ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மஹிந்தவின் திருப்பதி விஜயத்துக்கு எதிராக தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

சென்னை, நவ.1

திருப்பதி வெங்கடேஸ்வரர் ஆலயத் துக்கு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ நேற்று வருகைதந்தமைக்கு எதிர்ப் புத் தெரிவித்து தியாகராஜநகரில் உள்ள திருப்பதி தேவஸ்தான அலுவலகம் முன் (22ஆம் பக்கம் பார்க்க)

## அகதி முகாம்களில் உள்ள மாணவர்களுக்கு வவுனியா நகர்ப்புறப் பாடசாலைகளில் மாலை நேர வகுப்புகள்

கொழும்பு, நவ. 1

வவுனியா நலன்புரி முகாம்களில் தங் கியுள்ள அடுத்த மாதம் க.பொ.த. சாதார ணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள சுமார் 6,280 மாணவர்களில் இதுவரை 3,500 பேருக்கு மேற்பட்டோர் அவர்களது கல்வி யைத் தொடரவென வவுனியா நகரப்புறப் (22ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரத்னசிறி இந்தியா பயணம்

கொழும்பு, நவ.01

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க மூன்று நாள் விஜயமாக நேற்று இந்தியா சென்றுள்ளார்.

இந்திய அரசு வழங்கிய நிலத்தில் இலங்கை அரசு அமைத்துள்ள மூன்று மாடி கள் கொண்ட பௌத்த யாத்திரிகள் விடுதியை பிரதமர் திறந்துவைக்க உள்ளார்.

## புலமைப் பரிசில் பரீட்சையில் முகாம் மாணவர்கள் 507 பேர் சித்தி

யாழ்ப்பாணம், நவ. 1

நலன்புரி நிலையங்களில் இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 5,473 பேரில் 507 பேர் சித்தியடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு வெளியான இப் (22ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் போரில் உளவு பார்த்த தொண்டு நிறுவனப் பணியாளர்களை நாடுகடத்த அரசாங்கம் முடிவு

கொழும்பு, நவ.1

வன்னியில் இடம்பெற்ற யுத்தம் தொடர் பான தகவல்களைத் திரட்டி உளவுப் பணி யில் ஈடுபட்டதாக சில சர்வதேச அரச சார் பற்ற நிறுவன ஊழியர்கள் நாடு கடத் தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச் சுறுத்தல் ஏற்படும் வகையில் செயற்பட்ட அவர்களை நாடு கடத்த அரசாங்கம் தீர்மா னித்துள்ளதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(22ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த றோட்டறிக் கழகத்தின் ஆளுநர் வி.டி.ஆர். ராஜன் யாழ். றோட்டறிக் கழகத்தின் உறுப்பினர்களால் வேம்படி மகளிர் கல்லூரியில் பாண்ட் இசையு டன் வரவேற்கப்பட்டு அழைத்துச்செல்லப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.



## இலங்கை அகதிகள் 78 பேரையும் அழைத்துச்செல்ல ஆஸிக்குக் காலக்கெடு

### வழங்கியிருப்பதாக இந்தோனேஷிய அமைச்சர் தகவல்

கொழும்பு, நவ.1

இந்தோனேஷியக் கடற்பரப்பிலுள்ள 78 இலங்கை அகதிகளை அங்கிருந்து அழைத் துச் செல்ல அவுஸ்திரேலியாவுக்கு ஒரு வாரகால அவகாசம் வழங்கியுள்ளதாக இந் (22ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையின் முதற் தர SINGER தொலைக்காட்சிகள் தற்போது விசேட சலுகைகளுடன் யாழ் மக்களுக்காக

www.singersl.com

எந்த மாதிரியிலுமாலான உங்கள் பழைய தொலைக்காட்சிக்கு விலைக்கழிவுடன் புத்தம் புதிய தொலைக்காட்சி

விசேட விலைக்கழிவு

திருப்தி இஸ்ரேல் பணத்தினை மீளப்பெறும் வாய்ப்பு

கிளைகள்: யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி

SINGER Plus

MORE BRANDS-MORE CHOICE

யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

நல்லூர் குறுக்குத்தெரு, நல்லூரடியில் சகல வசதிகளையும் கொண்ட பெரிய வீடு வாடகைக்கு உண்டு. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு : 0772462597, 0776283776

## வீடு விற்பனைக்கு

நாகலிங்கம் ரெறஸ், மூத்ததம்பி லேன் மானிப்பாய். என்னும் முகவரியில் அமைந்துள்ள 2 1/2 பரப்பு காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட புதிய வீடு விற்பனைக்கு உண்டு. (மானிப்பாய் வீதியில் இருந்து 100 மீற்றருக்கு உட்பட்ட தூரத்தில்)

தொடர்புகளுக்கு :- A.J சவுந்தரநாயகம் (சந்திரன்) நாகலிங்கம் ரெறஸ், மானிப்பாய்

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் நவ.01

யாழ். மாவட்ட ஒப்பந்தக்காரர்களுக்கான நிர்மாண ஒப்பந்த வேலை தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆனைப் பந்தியில் அமைந்துள்ள நிர்மாண ஒப்பந்த காரர்கள் சங்க அலுவலகத்தில் நடைபெற வுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கு சகல ஒப்பந்தகாரர்களையும் கலந்துகொள்ளு மாறு சங்கநிர்வாகம் அறிவித்துள்ளது.

(204)








றோட்டறிக் கழகத்தின் ஆளுநர் றோட்டேறியன் வி.டி.ஆர். ராஜன் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்து வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் கலந்து கொண்ட போது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் கொழும்பு றோட்டறிக் கழக மாவட்டச் செயலாளர் லியான் ஸ்ரீவர்த்தன, உதயன் நிர்வாக இயக்குநர் றோட்டேறியன் ஈ.சரவணபவன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் - றோட்டறி ஆளுநர் வி.டி.ஆர். ராஜன் உரையாற்றுவதையும் மேல்வரிசையிலும் - யாழ்.றோட்டறிக் கழகத் தலைவி திருமதி நீலலோஜினி தர்மகுலசிங்கம் தலைமையுரையாற்றுவதையும் , முன்னாள் தலைவர் அ.பஞ்சலிங்கம் வரவேற்புரையாற்றுவதையும் கலை நிகழ்ச்சிகளையும் நடுவரிசையிலும் - கலந்துகொண்ட றோட்டறிப் பிரமுகர்களையும், புதிதாக இணைந்த உறுப்பினர்களையும், மாணவ, மாணவிகளையும் கீழ்வரிசைப் படங்களிலும் காணலாம்.

(படங்கள்: ஓங்காரன், உமா)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

விரோதி வருடம் ஐப்பசி 16ஆம் நாள் (02.11.2009) திங்கட்கிழமை நண்பகல் 12. 05-01மணியளவில் மகரலக்கினமும் அச்சுவினி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

திருமதி.தர்மராசா சொர்ணமலர் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன்



குணசீலநாதன் (சீலன்) அவர்களுக்கும்





திருமதி.சுப்பிரமணியம் பரமேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி



சுகந்தினி (சுகந்தி) அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் (மணமகன் இல்லம்) கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: மணமகன் இல்லத்தில் 03.11.2009 அன்று மாலை 5.00 மணியளவில் வரவேற்புபசாரம் நடைபெறும்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி.தர்மராசா சொர்ணமலர்
சிந்துஜா லக்சுமி குமார் (சகோதரி மைத்துனர்),
நிலோஜன் (சகோதரன் -மலேசியா).
48/11, தேங்காய் மூலை, கொக்குவில் மேற்கு
கொக்குவில்.T.P: 0779185723

திருமதி.சுப்பிரமணியம் பரமேஸ்வரி
(பிளாக் வீதி, சங்கானை), குமார், வாணி
(சகோதரன், மைத்துனி) றஜனி, பாலன்
(சகோதரி, மைத்துனர்)

(இரு வீட்டார் அழைப்பு)

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுவரவும்.


# எம்.டீ.குணசேன

# புத்தக மலிவு விற்பனை

## இப்பொழுது நவம்பர் 01 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## இடம்: யாழ்.மத்திய கல்லூரி

## நேரம்: காலை 8.30 - மாலை 6 மணிவரை

எல்லாப் புத்தகங்களுக்கும் விசேட விலைக்கழிவு உண்டு.

தொடர்புகளுக்கு:
ரியாசி 0778208108
சுரேஷ் 0776574986

(சி/562039)


## சைவ சித்தாந்த பரீட்சைகள்

யாழ்., நவ.01

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் நடத்தப்படும் சைவ சித்தாந்த பிரவேச/பால/பண்டிதர் தேர்வு அடுத்த மாதம் 4,5,6 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று தேர்வுச் செயலாளர் இரா. செல்வவடிவேல் அறிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### பிலிப்பு பூமணி

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் புலோலி வடக்கு, ஊரியவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பு பூமணி நேற்று (31.10.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனி பிலிப்புவின் அன்பு மனைவியும், லோறன்ஸ் ஜீவா (கனடா), வீனஸ் ஜெயா (சுவிஸ்), வைலட்ராதா, றொசிந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும், மங்கிலிக்கா (கனடா), பாமா (சுவிஸ்), எமலின் ஆகியோரின் மாமியாரும், நிலோஜன், நீலு நிர்மிளா, நீனு, கமிஸ்ரன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (01.11.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் வழிபாடு நடைபெற்று கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
மருமகன் - எமலின்.


FedEx Express

உள்நாட்டு வெளிநாட்டு துரித பொதிகள் தபால்கள் சேவை

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்

இப்பொழுது வடமராட்சியிலும்

குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை

TCN EXPRESS
28, Nelsan Place, Colombo -06

46, ஆடியபாதம்,வீதி, திருநெல்வேலி. (ந.ப.நோ.சங்கம் முன்பாக)

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக நன்மதிப்பைத் தொடர்ந்தும் கட்டிக்காக்க யாழ்.பல்கலைக்கழக சமூகம் முன்வர வேண்டும்

மீண்டும் சமூகத்தின் கவனத்தைத் தன்பக்கம் ஈர்க்கத் தொடங்கியிருக்கிறது யாழ்.பல்கலைக்கழகம். அந்த ஈர்ப்புக்கு மிக முக்கிய காரணமாக அமைவது மருத்துவ பீட மாணவனொருவன் தற்கொலை செய்து கொண்டமைதான்.



இதற்கு பரீட்சையில் குறித்த மாணவன் ஒரு சில பாடங்களில் சித்தியடையத் தவறியமையால் மனமுடைந்து தனது வாழ்க்கையை முடித்துக் கொண்டதாகக் கூறப்படுகின்றது. ஒரு சில மாதங்களுக்கு முன்னர் தன்னுடைய பெறுபேறுகளை வேண்டுமென்றே குறைப்பதாகத் தெரிவித்து மருத்துவபீட வருகை விரிவுரையாளர் ஒருவரை மருத்துவபீட மாணவனொருவன் கத்தியால் குத்திய சம்பவமும் நடைபெற்றுள்ளது.


இவையெல்லாம் பரீட்சைகள் தொடர்பாகவும், பெறுபேறுகள் தொடர்பாகவும் பல்கலைக்கழக மாணவர்களிடையே தற்போது மேலெழுந்துள்ள எண்ண ஓட்டத்தையே வெளிப்படுத்துகின்றன. அதாவது பரீட்சைப் பெறுபேறுகள் எப்போதும் தமக்குச் சாதகமாகவே இருக்க வேண்டுமென்று மாணவர்கள் விரும்புகின்றனர். ஆயினும் இதற்கு எதிர்மறையான வகையில் பரீட்சை முடிவுகள் அமைந்தால் அதனைத் தாங்கிக்கொள்ளும் ஆற்றலற்றவர்களாகக் குறித்த பரீட்சைப் பெறுபேற்றோடு தமது வாழ்க்கையே அஸ்தமித்து விட்டதாக அர்த்தப்படுத்திக்கொண்டு தவறான முடிவுகளை எடுக்க முற்படுகின்றனர். அத்தோடு பரீட்சையின்போது தாம் சிறப்பாகச் செயற்பட்டதாகவும் எனினும் தம்மீது கொண்ட காழ்ப்புணர்வு காரணமாக விரிவுரையாளர்கள் தமது பரீட்சைப் பெறுபேற்றோடு விளையாடிவிட்டதாகவும் கற்பிதம் செய்துகொள்கின்றனர். இதனால் அவர்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். அதன் ஒரு வடிவமே அண்மையில் நடைபெற்ற மருத்துவபீட விரிவுரையாளர் மீது நடைபெற்ற கொலைமுயற்சியெனலாம்.

அதுதவிர தமது திறமைமீது சந்தேகம் அல்லது நம்பிக்கையீனம் மேலெழப் பெற்றவர்களாகவும் மாணவர்கள் மாறி வருகின்றனர். ஒருதடவை பரீட்சையில் தோற்றால் அதனை அடுத்த தடவை எப்படியாவது வெல்லவேண்டும் என்ற ஓர்மம் அற்றவர்களாக மாறிவிடுகின்றனர். என்னால் இவ் வளவுதான் முடியும். இதைவிட முயல்வதற்கு சக்தியில்லை என்ற தவறான நிலைப்பாட்டுக்குள் தாமே நுழைந்து தமக்குப் பாதகமான முடிவுகளை எடுத்துவிடுகின்றனர். மருத்துவபீட மாணவனின் தற்கொலை இதற்கு எடுத்துக்காட்டு.

மாணவர்களின் மனோவியல் பலம் இவ் வாறு கீழ் புள்ளியை நோக்கிச் செல்வதற்கு தனியே மாணவர்கள் மாத்திரமே காரணமல் லர் என்பதனையும் அனைவரும் புரிந்து கொள்ளத்தான் வேண்டும். சில மாணவர்கள் நினைப்பதுபோல ஒரு சில விரிவுரையாளர்கள் தமது விருப்பு வெறுப்புகளுக்கேற்ப மாணவர்களுக்குரிய புள்ளிகளை வழங்கவும் செய்கின்றனர். அதனை நிரூபிப்பதுபோல ஒரு சில சம்பவங்களும் நடந்தேறியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. சில பீடங்களில் உள்ள விரிவுரையாளர்களில் ஒருசிலர் தம்மிடம் கல்வி கற்கும் மாணவர்கள் மீது கீழ்த்தரமாகவும் - பாலியல் சார்ந்த தவறான எண்ணத்தோடு - நடக்க முற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

மிகச் சில விரிவுரையாளர்கள் மட்டும் தம்மிடம் பாட ரீதியாகச் சந்தேகங்களைத் தீர்க்க வரும் மாணவிகளைத் தனியேதான் வரவேண்டும் எனவும் எழுதப்படாத சட்டத்தைக் கடைப்பிடிக்கின்றனர். அவ்வாறு தனியே செல்லாமல் குழுவாகச் சென்றால் அவர்களைக் கண்டபடி திட்டுவதோடு பரீட்சைப் பெறுபேற்றின்போது அவர்கள் கவலைப்பட நேரிடுமென்று மறைமுக மிரட்டலையும் விடுத்துள்ளனர். இதனால் வேறுவழியின்றிக் குறித்த விரிவுரையாளரை இன்னமும் தனியே சென்றுதான் மாணவிகள் சந்தித்து வருகின்றனர். இதுபற்றி உரியவர்களிடம் முறையிட்டால் இன்னமும் தாங்கள் பழிவாங்கப்பட்டுவிடுவோமோ? தம்முடைய பல்கலைக்கழக வாழ்க்கை இதனால் தடைப் பட்டு விடுமோ? என்ற பயத்தில் பல மாணவிகள் வாய்பேசா ஊமைகளாகி விடுகின்றனர். எனினும் நிலைமையின் உக்கிரம் தாங்கமுடியாத சில மாணவிகள் வீடுகளில் தமது பெற்றோரிடம் இத்தகைய இழிவான செயலைச் சொல்லி அழுகின்றனர். பெற்றோரும் ஏதும் செய்யமுடியாத ஏதிலிகளாக அவர்களுக்கு ஆறுதல் சொல்வதைத் தவிர வேறேதும் செய்யமுடியாத கையறு நிலையிலேயே உள்ளனர்.

மிகச் சில விரிவுரையாளர்கள் மாத்திரமே இத்தகைய ஒவ்வாத செயல்களில் ஈடுபடுகின்றனர். ஆயினும் அந்த ஒருசிலரின் நடவடிக்கைகளினால் ஒட்டுமொத்த விரிவுரையாளர்கள் மீதும் அவப்பெயரும், பல்கலைக்கழகத்தின் நன்மதிப்பம் கெட்டுவிடக் கூடாத என்பதே சமூகத்தினர் எதிர்பார்ப்பாக உள்ளது. ஒருகுடம் பாலுக்கு ஒரு துளி விஷம் என்று சொல்லப்படுவதுண்டு. எனவே இத்தகைய செயல்களில் ஈடுபடும் விரிவுரையாளர்களை சக விரிவுரையாளர்கள் இனங்கண்டு முளையிலேயே அத்தகைய இழிவான செயற்பாடுகளைக் களைய முன் வரவேண்டும் என்ற ஆதங்கமும் நிலவுகிறது. அதன்மூலம் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் புனிதமும் நாளைய வருங் காலத் தலைவர்களை உருவாக்கும் கடின மான பணியும் எல்லா மாணவர்களுக்கும் சரியான வகையில் புரியும். இல்லாவிட்டால் தவறான முற்கற்பிதங்கள் மாணவர் மனங்களில் உண்டாகி எல்லா விரிவுரையாளர்களுமே மாணவர்களுக்கு எதிரானவர்கள் என்ற தவறான கருத்தியல் உருப் பெற்றுவிடும்.





பல்கலைக்கழக மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு இடையூறாக மாணவர்களும் விளங்குகிறார்கள். அதிலும் குறிப்பாக காலாதி காலத்துக்கும் பகிடிவதை என்ற பெயரில் தமது மன வக்கிரங்களைப் பல்கலைக்கழக மாணவர்கள் புகுமுக மாணவர்கள் மீது காட்டுகின்றார்கள். பகிடிவதை யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒழிக் கப்பட்டுவிட்டதாகக் கூறப் பட்டபோதிலும் வெவ்வேறு வடிவங்களில் அது இன்னமும் தொடரவே செய்கின்றது. அண்மையில் இதுபோன்ற சில சம்பவங்கள் நடைபெறவே செய்துள்ளன.

ஆயினும் வழமைபோல தூங்கிக்கொண்டிராமல் இம்முறை பகிடிவதையில் ஈடுபட்ட மாணவர்கள் மீது உடனடியாகவே நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் காட்டிய அவசரத்தில் பகிடிவதையில் ஈடுபடாத மாணவர்களும் - பகிடிவதை நடைபெறும்போது பக்கத்தில் நின்றவர்கள் - குற்றவாளிகளாகக் கருதப்பட்டு அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் புலம்புகின்றனர். பகிடிவதையில் ஈடுபட்டவர்கள் ஏதோ ஒரு வகையில் தாம் செய்தது தவறு என்பதை உணரும் வகையில் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆயினும் சம்பவங்கள் நடைபெறும்போது தெரியாத்தனமாக அருகில் நின்றவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பது எனவே இந்நிலை தவிர்க்கப்பட வேண்டுமாயின் தீர விசாரித்து பகிடிவதையில் ஈடுபட்ட மாணவர்களைச் சரியான வகையில் இனங்கண்ட பின்னரே அவர்கள் மீதான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதைவிடுத்து அவசர நீதி வழங்க முற்பட்டால் அது சம்பவங்களில் ஈடுபடாத மாணவர்களையும் பாதிக்கவே செய்யும்.

தமிழ்ச் சூழலில் பல்கலைக் கழகத்துக்குத் தனி மரியாதை உண்டு. குடாநாட்டின் கருத்தியல் தளத்தை உருவாக்குவதில் பல்கலைக்கழக மாணவர்களின் பங்கு மிக முக் கியமானது. இந்நிலையில் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் வேண்டத் தகாத செயல்கள் நடைபெறுவது மக்களை மன வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்நிலையில் பல்கலைக்கழகத்திற்குத் தாம் வந்ததன் நோக்கத்தை ஒவ்வொரு மாணவனும் சரிவரப் புரிந்துகொண்டு, தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் தன்னம்பிக்கையை வளர்த்து எல்லா விடயங்களிலும் நிதானத்தோடு முடிவுகளை எடுக்க வேண்டும். அதற்கேற்ற பக்குவ நிலையை மாணவர்கள் அடைவதற்கு விரிவுரையாளர்கள் வழிகாட்ட வேண்டும். அதன்மூலமே ஆரோக்கியமான நாளைய சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும். அதைவிடுத்து மாணவர் களைப் பழிவாங்கும் வகையிலும் தவறான எண்ணத்தோடும் ஒருசில விரிவுரையாளர்கள் தொடர்ந்தும் செயற்படுவதும், அதனை வைத்துக்கொண்டு எல்லா விரிவுரையாளர்களையும் தவறான கண்ணோடு மாணவர்கள் பார்ப்பதும், தன்னம்பிக்கையை இழப்பதும், விரும்பத்தகாத முடிவுகளை எடுப்பதும் நீளுமேயாயின பல்கலைக்கழகம் மீதான தனது பார்வையும் மதிப்பும் மறுவளமாகி விடும் ஆபத்து உண்டு. இது மறைக்கக் கூடிய ஒன்றல்ல. ஆகவே சமூகப் பொறுப்புணர்ந்து நடப்பதற்கு எல்லோரும் இந்நேரத்தில் முன் வருவது அவசியம். ★

துருவியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய
# அதிபர் உயர்திரு. கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்
## பதவி உயர்வு பெற்றமையையொட்டிய பாராட்டு இதழ் (01.11.2009)

### சேவையில் சிறப்புற வாழ்த்துகிறேன்



யாழ்ப்பாணம்-காரைநகரில் சைவத்துக்கும் தமிழுக்கும் பெருமை சேர்க்கும் சைவவேளான் குலத்துதித்த கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் அவர்கள் கற்ற கல்வியின் பயனாக ஆசிரியராகி தனது திறமையின் பயனாக அதிபர் பதவிக்கு உயர்ந்து நிற்பவர். எனது உற்ற நண்பரான அவர் தமது அறிவாற்றல் திறமையால் பதவி உயர்வு பெற்று பெருவாழ்வு வாழவும் மேன்மேலும் கல்வியுலகத்தில் தலைநிமிர்ந்து சேவையாற்றவும் எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பர நடராஜரையும் மணற்காட்டு அம்பாளையும், கதிர்காமத்து ஐயனையும் வேண்டி எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்து அமைகின்றேன்.

பிரம்மஸ்ரீ நா. ஞானசம்பந்தக்குருக்கள்
*காரைநகர் அரசடிக்காடு*
*அருள்மிகு கதிர்காம சுவாமி கோயில்,*
*மணற்காடு அம்மன் கோயில்.*

### செயற்றிறன் மிக்க அதிபர்



இக்கல்லூரியின் பழைய மாணவனும், துடிப்பும் செயற்திறனும் மிக்க அதிபர் க.சுந்தரலிங்கம் அவர்கள் அதிபர் சேவைத்தரம் 2-I இற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு மனம் நெகிழ்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவர் கல்விச்சேவையுடன் தெய்வ சேவையையும் செய்து தொண்டாற்றி வருபவர். தம்பாட்டி அ.மி.த.க பாடசாலை அதிபராக இருந்த காலத்தில் கோட்ட, வலயமட்ட முக்கிய நிகழ்வுகளில் பங்கேற்று அந்நிகழ்ச்சிகள் செவ்வனே வெற்றிபெற முன்னின்று நடத்தியமை இவரின் செயற்றிறனுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இவர் மேலும் பதவி உயர்வுகள் பெற்று சிறந்த கல்வி, சமய, சமூகத் தொண்டுகள் புரிவதற்கு எல்லாம் வல்ல பரிபூரணானந்த இறைவனது ஆசி கிட்டுவதாகுக என வாழ்த்துகின்றேன்.

என். பரமசிவம், அதிபர்
*யா/ யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்.*

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் அதிபர் யா/ வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர். 01.01.2007 முதல் அதிபர் தரம் 2-I இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேன் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று வாழ வேண்டுமென பாராட்டி வாழ்த்துகிறோம்.

திரு.திருமதி
கலைச்செல்வி விக்னேஸ்வரன்குடும்பம்.
*நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.*



### கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்

(சின்னாலடி, தங்கோடை, காரைநகர்)
*பிறந்த திகதி: 02.06.1958*
முதல் நியமனம் : 21.03.1979 (ஆசிரியர்)

**சேவை விவரம்**

இ/ஒப்பாத்த இல: 02. அ.த.க.வித்தியாலயம்
- 21.03.1979 - 15.03.1981

இ/ஒப்பாத்த இல: 01. அ.த.க.வித்தியாலயம்
- 16.03.1981 - 17.03.1982

யா/ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
- 18.01.1982 - 31.12.1983

யா/புனித அந்தோனியார் கல்லூரி
- 01.01.1984 -02.03.1997

யா/தம்பாட்டி, அ.த.க.வித்தியாலயம் (அதிபர்)
- 03.03.1997 -09.11.2008

யா/வியாவில் சைவ வித்தியாலயம் (அதிபர்)
- 10.11.2008 -இற்றைவரை.

ஆரம்பக் கல்வி:
யா/யாழ்ற்றன் கல்லூரி ஆரம்ப வித்தியாலயம்.

உயர்கல்வி:
யா/யாழ்ற்றன் கல்லூரி,
யா/கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்.
யா/கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி
(மின்சாரப் பொறியியல்)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

திறமையும், சேவை நலனும் கொண்ட எமது பாடசாலை அதிபர் திரு.கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் (அதிபர் யா/ வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர்) அவர்கள் 01.01.2007ஆம் திகதி முதல் அதிபர் தரம் தரம் 2-I இற்கு பதவி உயர்வு செய்யப்பட்டமையையிட்டு பாடசாலை ஆசிரியர் சமூகம் அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று சிறப்புடன் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

பாடசாலை ஆசிரியர் சமூகம்,
*யா/ வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர்.*

### வினைத்திறனும் விளைதிறனும் மிக்கவர்



யா/ வியாவில் சைவ வித்தியாலய அதிபர் திரு. கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 2-I இற்கு 01.01.2007 இல் பதவி உயர்வு பெற்றமையையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அதிபர் பொறுப்பை ஏற்ற காலத்தில் இருந்து பாடசாலையின் அபிவிருத்திப் பணியிலும் மாணவ மணிகளின் கல்வித்துளிருக்கான பெரும் வளங்களைத் தேடிப் பாடசாலைக்கு உரித்தாகிய பணிகளிலும் சிறப்புற்று உயர் சேவையை ஆற்றியிருப்பதும் நாமனைவரும் அறிந்ததொன்றே.

அவர் மேலும் பல பதவி உயர்வுகள் பெற வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

ஜி.வி. இராதாகிருஸ்ணன்
*வலயக் கல்விப்பணிப்பாளர்*
*தீவக வலயம், வேலணை.*

### தற்துணிவு மிக்க தலைவன்



க. சுந்தரலிங்கம் அவர்கள் தற்துணிவுள்ள தலைவனாகத் திகழ்பவர். இவர் இலங்கை அதிபர் சேவை தரம் 2-I இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளமையை இட்டு மனம் மகிழ்ந்து பாராட்டுகின்றேன்.

கண்ணியம் மிக்க கல்விப்பணியுடன் சமயப்பணி, சமூகப்பணி எனப் பல்வேறு துறைகளிலும் ஈடுபாடு கொண்டு உழைக்கும் இவரது எதிர்காலம் பல பதவி உயர்வுகளைப் பெற்று சிறக்க எல்லாம் வல்ல இறைவன் துணைநிற்க வேண்டி வாழ்த்துகிறேன்.

ச. பாஸ்கரன்,
*கோட்டக்கல்வி அலுவலர், ஊர்காவற்றுறை.*

### சேவையால் உயர்ந்தவர்



காரைநகர், யா/வியாவில் சைவ வித்தியாசாலையின் அதிபராகக் கடமை புரியும் எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 2-I இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளமை எமக்கெல்லாம் மகிழ்வு தரும் செய்தியாகவுள்ளது. காரைநகரில் தோன்றி கற்றெழுந்து பல இடங்களில் ஆசிரியப் பணிபுரிந்து, பின் அதிபராக உயர்ந்து காரைநகர் மண்ணுக்கே சேவை புரிந்து இன்று மேன்மையுற்றிருக்கிறார். அவரின் கல்விப் பணிக்குக் கிடைத்த மகுடம் இதுவென்றால் மிகையில்லை. கல்விப் பணி மட்டுமன்றி சமூக, சமயப் பணியிலும் அயராது ஈடுபடும் ஐயா அவர்கள் மென்மேலும் பல பெருமைகளையும் சிறப்புகளையும் பெற வாழ்த்துகின்றேன்.

இ.த.ஜெயசீலன்,
*உதவி அரசாங்க அதிபர், காரைநகர்.*

### சகல பண்புகளும் நிறையப்பெற்ற பெருமகன்



கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, உண்மை, நேர்மை, பயமின்மை, அமைதி, பொறுமை, சாந்தம் ஆகிய ஒன்பது இலட்சணங்களுக்கும் இலக்கணமாய் விளங்கும் சமூக சேவையாளரும் எமது பாடசாலை அதிபருமாகிய உயர்திரு.கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் அவர்கள் அதிபர் தரம் 2-II இல் இருந்து அதிபர் தரம் 2-I இற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரை வாழ்த்துவதுடன் இன்னும் பல உயர் பதவிகள் பெற்றுப் பெரும் புகழுடன் திகழ அகங்கனிந்து பாராட்டி வாழ்த்துகின்றேன்.

திருமதி ம.தேவராசா (பிரதி அதிபர்)
*யா/வியாவில் சைவ வித்தியாலயம்.*


### அதிபரைப் பாராட்டி வாழ்த்துவோர்:

**சுஜமுகன் காட்வெயர்**
147, 149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ. இல. 021 222 2833

**சுணேசன் ஸ்ரோர்ஸ்**
201, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ. இல. 021 2830

**சிறிரங்கன் என்ரப்பிறைஸ்**
370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2027

**சிவகுணேசன் ரெக்ஸ் ரைல்ஸ்**
41, பெரியகடை,யாழ்ப்பாணம்.
தொ. இல. 222 2063

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212,214, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. இல. 021 222 5542

**மலர் ரெக்ஸ் ரைல்ஸ்**
18(67அ) பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். தொ. இல. 021 222 2791

**சீமாட்டி புடைவைக்கடல்**
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல .021 222 2196

**ஈஸ்வரன் ரேடர்ஸ்**
59-115,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல. 021 222 2813

**மாங்கல்யா ஜுவல்லஸ்**
131, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல. 021 222 2140

**திருமுருகன் கொம் நெற்**
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
45,ஆடியபாதம் வீதி,திருநெல்வேலி
(நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

**மதுரா நகை மாடம்**
59, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல 021 222 5698

**இராஜேஸ்வரி ரெக்ஸ் ரைல்ஸ்**
105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**துரை பல்பொருள் வாணிபம்**
நாரந்தனை வடக்கு,
பண்ணை றோட்,
ஊர்காவற்றுறை.

**நியூ ரசகம்ஸ்**
24,7,8 நவீன சந்தை, (உட்புறம்)
யாழ்ப்பாணம்.
தொ.இல. 021 222 7179

**ஈ.எஸ்.பி. வர்த்தக நிலையம்**
(தனியார்) வரையறுக்கப்பட்டது
5, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை,
எதிர் கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.இல 021 222 7281


**ஸ்ரீ ராஜன் பான்சி ஹவுஸ்**
63,65,66, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.தொ.இல 0776003205

**கலைமகள் வர்த்தக நிலையம்**
162, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.இல 021 222 2410


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பகிர்வில் முன்னேற்றம் காண்பதாயின் 13ஆவது திருத்தத்திலிருந்து உந்திப் பாய வேண்டும்

## உரைகல்



கடந்த சுமார் ஆறரை தசாப்தங்களாக இலங்கையின் முதல் சாபக்கேடாகி அதனை உலுக்கிவரும் இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான உகந்த அரசியல் முறைமை அல்லது தீர்வு எவ்வாறு அமைய வேண்டும்?

இது குறித்து பல்வேறு குரல்கள் - கருத்துக்கள் வெளிக் கிளம்புகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சரும், ஈழமக்கள் புரட்சிகர முன்னணியைச் (பத்மநாபா அணி) சேர்ந்தவருமான அ.வரதராஜப் பெருமாள் தரும் கருத்தை ஞாயிறு உதயனில் "உரைகல்" பகுதியில் இங்கு தருகின்றோம்.



இலங்கையின் முன்னேற்றத்திற்கும் சுபீட்சத்திற்கும் சொல்லொணாப் பேரழிவுகளை ஏற்படுத்திய இனப்பிரச்சினையை ஒரு நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அண்மைக்காலமாக அரசியல்த்தீர்வு தொடர்பாகக் கீழ்க்காணும் பல்வேறு குரல்கள் எழுப்பப்படுகின்றன.

★13ஆவது திருத்தம் முழுமையாக அமுல் செய்யப்பட்டாலே போதும்.

★13ஆவது திருத்தம் போதாது. அதைவிடக் கூடுதலாகத் தரப்பட வேண்டும்.

★13ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரமோ, நில அதிகாரமோ நிதி அதிகாரமோ வழங்கப்படக்கூடாது.

★மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரமும் தேவையில்லை, நில அதிகாரமும் தேவையில்லை, நிதி அதிகாரமும் தேவையில்லை. இப்போதுள்ள நடைமுறையே திருப்திகரமாக உள்ளது.

★13ஆவது திருத்தமே கூடாது. அது முற்றாக நீக்கப்பட்டு புதிய அதிகாரப் பகிர்வு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

★13ஆவது திருத்தத்துக்கு மாற்றாக ஓர் அரசியல்த் தீர்வை அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழு உருவாக்கிக்கொண்டு வரு-

## ஜனாதிபதியின் நோக்கத்தையும் பயன்படுத்தும் விதத்தையும் பொறுத்தே விளைவு அமையும்

கிறது. அதுவரையும் பொறுத்திருக்க வேண்டும்.

★ஒற்றையாட்சி முறை நீக்கப்பட்டு அதிக பட்சமான அதிகாரங்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

★ஒற்றையாட்சிக்குள்ளேயே அரசியல் தீர்வு இருக்க வேண்டும்.

★இந்திய அரசியல் முறை கொண்டுவரப் பட வேண்டும்.

★அமெரிக்கா, கனடா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் கடைப் பிடிக்கப் படும் சமஷ்டி அமைப்பு முறை வேண்டும்.

★தமிழீழத்தைத் தவிர வேறெதுவும் தீர்வாகாது.



★நாட்டுக்குள்ளேயே உருவாக்கப்படும் ஒரு தீர்வே முன்னெடுக்கப்படவேண்டும்.

இந்தக் குரல்களுக்குள் 13 ஆவது திருத்தம் என்பதே இப்பொழுதெல்லாம் அடிக்கடி கேட்கும் குரலாக இருக்கின்றது.

இதில் மிகவும் வேடிக்கை என்னவென்றால் 13ஆவது திருத்தம் என்ன என்பதை விரிவாக அறிந்து கொள்ளாமலே - அதன் தாற்பரியத்தையோ அதிகாரப் பரவலாக்கம் சம்பந்தமான அதன் சாதக பாதகங்களையோ தெரிந்து கொள்ளாமலே - அதற்கு ஆதரவாகவும், அதை ஆட்சேபித்தும் பலகுரல்கள், முக்கியமாகத் தமிழர் தரப்பிலிருந்து எழுப்பப்படுகின்றன.

### 13 ஆவது திருத்தத்தின் பின்னணி

1978ஆம் ஆண்டு ஜே. ஆர்.ஜெயவர்த்தனா அரசாங்கம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய அரசியல் யாப்பே இலங்கையில் இப்போதும் நடைமுறையில் அதிகாரபூர்வமாக இருக்கும் அரசியல் யாப்பாகும். அது பல திருத்தங்களின் பின்னர் நிறைவேறியது. 1987ஆம் ஆண்டு ஏற்பட்ட இந்திய இலங்கை சமாதான உடன்பாட்டைத் தொடர்ந்து 13ஆவது தடவையாக அரசியல் யாப்புத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன் மூலமே இலங்கையில் மாகாண சபைகள் என்னும் அமைப்புகள் உருவாக்கப்பட்டன. அப்பொழுது மாகாணசபைகளுக்கான அதிகாரப் பரவலாக்கல் என்னென்ன விடயங்களில் எந்தெந்த அளவில் இருக்கும் என்பவை போன்ற விடயங்களும் அரசியல் யாப்பு ரீதியில் சட்டபூர்வமாக ஆக்கப்பட்டன. 1987ஆம் ஆண்டின் இந்திய - இலங்கை சமாதான உடன்பாட்டின் பின்புதான் 13ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டது என்பது சரி. அந்த உடன்பாட்டின் பிரகாரம்தான் 13ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டது என்பது முற்றிலும் சரியல்ல. இந்திய - இலங்கை உடன்பாட்டில் அதிகாரப் பகிர்வு தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சுருக்கமாகப் பின்வருமாறு :

★1986ஆம் ஆண்டில் இந்திய மற்றும் இலங்கை அரசுப் பிரதிநிதிகளுக்கிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு அதிகாரப்பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

★வடக்குக் கிழக்கு மாகாணங்கள் ஒருங்கிணைந்த ஒரே மாகாண நிர்வாகமாக அமைக்கப்படுதல் வேண்டும். இம் மாகாணசபை செயற்படத் தொடங்கி ஓராண்டுக்குள் கிழக்கு மாகாணத்தில் ஒரு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு இணைந்த மாகாணங்கள் தொடர்ந்து இணைந்திருப்பதா அல்லது தனித் தனியாவதா என்பது தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

இவை தொடர்பாக இந்திய அரசாங்கம் சில எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருந்தது. அவையாவன:-

## எதற்கும் இலங்கையில் அது பெரும் அரசியல் சவாலாகவே அமையும்

1)புலிகளும் இந்தியாவின் முன்முயற்சிக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

2)ஓராண்டுக்குள் சமாதானமான நிலைமை ஏற்பட்டு பூரணமாக ஜனநாயக ரீதியான சூழல் ஏற்பட்டுவிடும்.

3)உள்நாட்டிலும் இந்தியாவிலும் அகதிகளாகப் போயிருந்த மக்கள் மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியேறிவிடுவார்கள்

4) அந்த ஓராண்டுக்குள் தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்த் தலைவர்களுக்கிடையில் ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டுவிடும்.

துரதிஸ்டவசமாக, எதிர்பார்க்கப்பட்ட இவையெதுவும் நடைபெறவில்லை. புலிகளின் அரசியல் வங்குரோதத்தைப் பயன்படுத்தி ஜெயவர்த்தனா தனது அரசியற்காய்களை நகர்த்தி, புலிகளைக் கொண்டே தமிழர்களுக்கு எந்த நன்மையும் கிடைக்காமல் இந்தியாவின் எதிர்பார்ப்புகளைப் பொய்யாக்கிவிட்டார். சிங்களத்தலைவர்களை நம்ப முடியாது என்று சொல்லிக்கொண்டே சிங்கள இனவாதத் தலைவர்களுக்குத் துணையாகச் செயற்பட்டு தமிழர்களின் போராட்டத்தைப் பின்தள்ளி விட்டது தான் பிரபாகரன் தலைமையிலான புலிகள் செய்த சாதனை.

ஜெயவர்த்தனா தானே தனிப்பட்ட ரீதியில் முன்னின்று தனது சட்ட ஆலோசகர்கள், சட்ட வரைவாளர்களைக் கொண்டு காதும் காதும் வைத்தது போல சில இரவுகளிலேயே 13ஆவது திருத்தத்தை வரைந்து முடித்தார். அதனை ஒரே நாளிலேயே நாடாளுமன்றத்தில் சட்டமாக்கினார். பார்வைக்கு 13ஆவது திருத்தம் இந்திய அரசியலமைப்பில் மாநிலங்களுக்கு அதிகாரப் பகிர்வு அளித்தது போலவே வடிவமைக்கப் பட்டது. ஆனால் உண்மையில் அப்படியல்ல! இது சுட்டிக்காட்டப்பட்டபோது இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி, அப்போதைய வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவை இலங்கைக்கு அனுப்பி வைத்தார். ஆனால் ஜெயவர்த்தனா எதற்கும் ஒப்புக் கொள்ளாமல் தந்திரமாகத் தவிர்த்துக் கொண்டார். அந்த நேரத்தில் புலிகள் இந்தியப் படைகளுக்கு எதிராகச் சண்டையில் ஈடுபட்டு இந்திய அரசாங்கத்தை இந்திய அளவிலும் சர்வதேச ரீதியிலும் சங்கடத்திற்கு உள்ளாக்கி வைத்திருந்தனர். எனவே, 13ஆவது திருத்தம் சட்டமாக ஆக்கப்பட முன்னர் இந்தியாவின் பார்வைக்குக் காட்டப்படவுமில்லை. அதனை இறுதியாக ஆக்குவதில் இந்தியாவின் நேரடிப் பங்களிப்போ அல்லது ஆலோசனையோ பெறப் படவுமில்லை.

இந்திய- இலங்கை சமாதான உடன்பாட்டைத் தொடர்ந்து, சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தென்னிலங்கை மாகாணங்களில் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக மாகாணசபை முறைமை தொடர்ந்து செயற்பட்டு வருகின்றன. ஆனால், வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைத்த மாகாணசபை பதினாறு மாதங்கள் மட்டுமே செயற்பட முடிந்தது. மேலும், மஹிந்தராஜபக்ஷவின் அரசாங்கத்தில் 2007ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கு மாகாணங்களின் மாகாணசபை நிர்வாகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. கடந்த பதினைந்து மாதங்களாகப் பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் மாகாண சபை முறைமை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

### 13 ஆவது திருத்தத்தின் கீழ் அதிகாரப் பரவலாக்க நிறைவேற்றம்

கடந்த இருபது ஆண்டுகளாக தென்னிலங்கையில் உள்ள ஏழு மாகாணங்களிலும் பெரும்பாலும் கொழும்பு மைய அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவா[illegible] திருந்த போதும், அம்மாகாணங்களிலும் 13 ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.

கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சரும் அரசின் ஆதரவுக் கட்சிக்காரராக இருந்தும், அவர் ஒரு சடங்கு சம்பிரதாய முதலமைச்சர் என்ற கட்டத்துக்கு மேல் அங்கும் அதிகாரப்பகிர்வு நடைபெறவில்லை.

இந்த நிலைமை மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் மட்டும்தான் என்றில்லை. பிரேமதாசாவின் காலத்திலும் இதுதான் மேல்மாகாண முதலமைச்சராக சிலகாலம் இருந்து மாகாண அதிகாரங்கள் தொடர்பாக அதிருப்திப்பட்டுக் கொண்ட சந்திரிகாவின் ஜனாதிபதிக் காலத்திலும் இதுதான் நிலைமை. ஜெயவர்த்தனா, பிரேமதாசா, சந்திரிகா, மஹிந்த என நான்கு ஜனாதிபதிகளின் ஆட்சியில், ஒருவர் மாறி மற்றவர் ஆட்சிப் பீடத்தில் ஏறிய போதும், அதிகாரப் பரவலாக்கல் விடயம் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகத்தான் நடந்தேறி வருகின்றது என்பதுதான் கடந்த இருபது ஆண்டுகால அனுபவமாகும்.

எனவே, தவறு ஜனாதிபதிகளிடத்தில் எந்தளவு தூரம் இருக்கிறது என்பதை அளவிட முன்னர், 13 ஆவது திருத்தம் அடிப்படையில் கொண்டிருக்கும் தவறுகளை - முரண்பாடுகளை - கண்டறிந்து புரிந்து கொள்வது அவசியமாகும்.

### 13 ஆவது திருத்தம் அடிப்படையில் கொண்டிருக்கும் தவறுகள் முரண்பாடுகள்

13 ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றினால் பிரச்சினைகளுக்குக் குறைந்த பட்சமாயினும் திருப்திகரமான தீர்வு கிடைக்குமா? என்ற கேள்விக்கு 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுதல் என்று சொல்வதன் அர்த்தம் என்ன? என்பது பற்றி ஒரு தெளிவான விளக்கம் வேண்டும். அந்த விளக்கத்தைப் பெற வேண்டுமாயின், 13 ஆவது திருத்தத்தில் எவ்வாறு எந்தெந்த விடயங்களில் எந்தெந்த அளவுக்கு அதிகாரப் பகிர்வு சட்டரீதியாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்ற கேள்விக்கு விவரமான அறிவும் புரிதலும் வேண்டும்.

அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தம் அதிகாரப் பகிர்வு விடயத்தில் சரியாக அமையாத, அமைக்கப்படாத, ஒரு சட்டம். ஏனெனில்:

★மிகப்பெரிய அளவில் மத்திய அரசுக்கு வசதியாக விளக்கம் கொள்ளக்கூடிய வகையில் வசன அமைப்புக்கள் உள்ளன. நிதி அதிகாரம், நிதி வளங்களின் பகிர்வு, நிர்வாக உறவுகள், நிர்வாக வளங்களின் பகிர்வு மற்றும் நிலத்தின் மீதான அதிகாரங்கள் போன்ற விடயங்கள் குழப்பமான வாக்கிய அமைப்புக்களைக் கொண்டுள்ளன.

★நிதி வளத்துக்கு, மாகாண சபைகள் மத்திய ஆட்சியாளர்களின் தயவில் தங்கியிருப்பதால், அதிகாரப் பகிர்வின் மூன்றாவது நிரலிலுள்ள அதிகாரங்கள் அனைத்தும் நடைமுறையில் மத்திய அரசின் நிறைவேற்று அதிகாரத்துக்கு உட்பட்டவையாகவே உள்ளன. அத்துடன், மாகாணங்களுக்குத் தெளிவாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நிறைவேற்றுவதற்குக் கூட மாகாண ஆட்சிகளுக்குரிய நிதி ஆதாரங்களை போதிய தற்றவையாகவே உள் ளன.

★மாகாண அதிகாரத்துக்கு உட்பட்ட விடயங்களிலும் கடைநிலை ஊழியர்களைத் தவிர ஏனைய அனைத்து வேலை நியமனங்களிலும் மத்திய அரசின் ஆதிக்கம், அதிகாரம் செலுத்தும் விதமாகச் சட்ட ஒட்டைகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

★பொலிஸ், சட்டம், ஒழுங்கு என்ற தலையங்கத்தில், விடயங்கள் அதிகாரப் பகிர்வு நிரலிலும் பின்னிணைப்பிலும் நீளமாகச் சொல்லப்பட்டிருந்தாலும், சாராம்சத்தில் அவை தொடர்பாக அதிகாரங்கள் எதுவும் அர்த்தமுடையவையாக வழங்கப்படவில்லை.

★மத்திய அரசுக்கான நிரலில் (Union List) உள்ள விடயங்களுக்கு மட்டுமல்லாது மாகாண நிரலில் (Provincial List) உள்ள விடயங்களுக்கும் பொது நிரலில் (Concurrent List) உள்ள விடயங்களுக்கும் மத்திய அமைச்சுக்களும் அமைச்[illegible]ால், நிதி முழுவதும் அங்கேயே பகிர்படுகின்றது. இதனால் மாகாண அமைச்சுக்கள் பேரளவில் மாத்திரமே இருக்க வேண்டியவையாக ஆக்கப்பட்டிருக்கின்றன.



★பிரேமதாசா காலத்தில் அரசாங்க அதிபர்களைத் தவிர ஏனைய பொது நிர்வாக அதிகாரிகள் மாகாண ஆட்சிகளுக்கு உட்பட்டவர்களென இருந்தது. ஆனால், பின்னர் அதுவும் இல்லாமற் போனது. ஆளணிகளின் பகிர்வுதொடர்பாக 13ஆவது திருத்தம் மௌனமாக இருப்பது மத்திய அரசுக்கு அதிகாரங்களை ஆக்கிரமிப்பதற்கு மிகவும் வசதியாக உள்ளது.

மாகாண ஆளுநர்கள், அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளின் உத்தியோகபூர்வ தராதரங்கள் என்ன என்பது தெளிவாக நிர்ணயிக்கப்படாத ஒன்றாகவே உள்ளது. நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற ஒருவரைவிட மாகாண அமைச்சர் குறைந்த அரசதரம் உடையவராகவே நடத்தப்படுகிறார். ஒரு மத்திய அமைச்சரையும் விட உயர்ந்த தரநிலை கொண்ட ஆளுநர் பதவிக்கு, பதவியிலிருக்கும் மத்திய அரச நிர்வாகிகள் நியமிக்கப்படுகிறார்கள். இவை மாகாணசபை அமைப்பு முறையைத் தரக் குறைவாக்கும் தன்மைகளைக் கொண்டவையாக உள்ளன. இவற்றினால் 13ஆவது திருத்தத்தின் மூலமான அதிகாரப்பரவலாக்கல் என்பது நடைமுறைக்கு வந்து இருபது ஆண்டுகளாகியும் இன்னமும் ஒரு குறைந்தபட்ச நம்பிக்கையேனும் தரும் ஒன்றாக அமையவில்லை என்பதே உண்மையாகும்.

### 13 ஆவது திருத்தத்தை வைத்து ஒன்றுமே உருப்படியாகச் செய்ய முடியாதா?

இந்தக்கேள்விக்கான பதில் அதனை முறையாக நடைமுறைப்படுத்தினால் தற்காலிகமாக அதனை நல்ல நோக்கங்களைச் சாதிப்பதற்காகப் பயன்படுத்த முடியும் என்பதுதான்.

அதிகாரப் பகிர்வு விடயத்தை முழுமையாகவும் சரியாகவும் மேற்கொள்வதில் பெரும் பாத்திரம் மத்திய அரசபீடத்தில் இருப்பவர்களாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். நாட்டின் அனைத்து மக்களினதும் நீண்டகால நலனை மனதில் கொண்டவர்களாக இருக்க வேண்டும். தீர்மான கரமான அரசியல் துணிவு வேண்டும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்பித் துணிந்தால், அவருக்கு இப்பொழுதுஇருக்கும் பரவலான மக்கள் ஆதரவுடன் அவரால் இது முடியும். ஐக்கிய தேசியக்கட்சி ஒத்துழைக்கத் தயாரென்கிறது. புலிகளின் தடங்கல் எதுவும் தற்போது கிடையாது. இந்தியா உட்பட உலகின் பெரும் பான்மையான நாடுகளின் பூரண ஒத்துழைப்பும் உதவிகளும் நிச்சயமாகக் கிடைக்கும். தமிழ் நாட்டிலிருந்தும் திருப்திகரமான ஆதரவைப் பெறமுடியும். தமிழ் ஜனநாயக சக்திகள் மிகவும் உற்சாகத்தோடு செயற்படுவார்கள்.

இது விடயமாக மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கைகள் மேற்கொண்டால், ஜே.வி.பி., ஹெல உறுமய போன்ற அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் நாட்டின் நலனில் அக்கறையற்ற சிங்களப் பேரினவாதிகளும், வழமைபோல் எதிர்ப்புக் குரல்கள் எழுப்புவார்கள்தான். அது ஒருநாளும் முற்றாக இல்லாமற் போகாது. ஆனால் அதனால் ஏற்படக்கூடிய சில சிங்கள மக்களின் வாக்குகள் இழப்பை, அதற்கு மேலாக தமிழ் மக்கள் ஈடுசெய்வார்கள் என மஹிந்த ராஜ பக்ஷவுக்கும், அவரைச் சார்ந்த அரசியல்வாதிகளுக்கும் உறுதியாகத் தெரிந்தால் - தமிழ் மக்களின் இன்றைய இன்னல்கள் நீங்கவேண்டுமென மானசீகமாகவே எண்ணும் தமிழ்த் தலைவர்கள் அதனை உறுதி செய்தால், அவர் அந்தப் பாதையில் செயற்படுவதற்கு உந்துதலாக அமையும்.

ஒரு முக்கிய விடயத்தை நாம் மனதில் கொள்ள வேண்டும். 13ஆவது திருத்தம் வழங்கியுள்ள அதிகாரப்பகிர்வுகளை உண்மையாகவே நடைமுறைப்படுத்தினால், அவை தமிழர் பெரும்பான்மையாயுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமல்ல, சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இதர மாகாணங்களின் சுபீட்சத்திற்கும் வழி சமைக்கும். எனவே, இது சம்பந்தமாக அவர்களுக்கும் தெளிவு ஏற்படுத்தி, 13ஆவது திருத்தத்தைச் சரியான முறையில் அமுல்ப் படுத்துவதற்குச் சம்மந்தப்பட்ட சிங்கள அரசியல் வாதிகளினதும், புத்தி ஜீவிகளினதும் ஆதரவைப்பெற முயற்சிகள் மேற்கொள்வது தேவையானதும், அவசியமானதுமாகும்.

[வளரும்].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வுபெற ஹாரிசன் விரும்பவில்லை




தென்னாபிரிக்காவிற்கு செல்லும் இங்கிலந்து அணியில் தேர்வு செய்யப்படாவிட்டாலும் தான் ஓய்வு பெறும் எண்ணம் இல்லை என்று இங்கிலாந்து வேகப் பந்து வீச்சாளர் ஸ்ரீவ் ஹார்மிசன் தெரிவித்துள்ளார்.

தற்போது துர்ஹாம் அணிக்காக இவர் 4 ஆண்டு களுக்கு விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

"இங்கிலாந்திற்கு விளையாட நான் எப்போதும் விரும்புகிறேன். ஆனால் அவர்கள் தற்போது எதிர் காலத்தை மனதில் கொண்டுள்ளனர். 60 இற்கும் மேற்பட்ட டெஸ்ட்களில் தற்போது 226 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளேன்." என்றார் ஸ்ரீவ் ஹார்மிசன். மீண்டும் இங்கிலாந்து அணியில் இடம் பெற பாடு படுவேன் என்கிறார் ஹார்மிசன்.

★★★★★★★★★★★★★★★★★

## பயிற்சியாளராக பிளெமிங் மறுப்பு



நியூஸிலாந்து கிரிக்கெட் அணி பயிற்சியாளர் மோல்ஸ் விலகிய பிறகு முன்னாள் வீரர் ஸ்ரீபன் பிளெமிங் நியூஸிலாந்தின் பயிற்சியாளராகவேண்டும் என்று பலரும் விரும்பினர். ஆனால் பிளெமிங் தனக்கு அதில் விருப்பமில்லை என்று தெரிவித்துள்ளார்.

'வியாபாரமும், குடும்பமும் எனக்குப் போதுமானது. இதனால் சர்வதேச கிரிக்கெட்டில் பயிற்சியாளராக விருப்பமும் இல்லை; நேரமும் இல்லை என்று கூறியுள்ளார் பிளெமிங்.

மேலும் தற்போது விளையாடும் வீரர்களில் பலர் நான் விளையாடும் போதும் இருந்தவர்கள். மேலும் எனது பயிற்சித் திறமைகள் இன்னமும் நிரூபிக்கப்படாத ஒன்று என்று அவர் கூறினார்.

தற்போது பாகிஸ்தானுடன் கிரிக்கெட் தொடர் உள்ள வேளையில் நியூஸிலாந்து அணி பயிற்சியாளர் இல்லாமல்தான் விளையாடவேண்டும் என்று தெரிகிறது.

********************

## செரீனா வில்லியம்ஸ் மீண்டும் முதலிடம்

தினாரா சபீனா மகளிர் ரெனிஸ் தொடரில் காயம் காரணமாகப் பாதியில் விலகியதால் முதலிடத்தை இழந்தார். அவரது முதலிடத்தை மீண்டும் அமெரிக்க ரெனிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் பிடித்துள்ளார்.

டோஹாவில் நடைபெறும் ரெனிஸ் தொடரில் சேர்பிய வீராங்கனை ஜெலெனா ஜான்கோவிச்சை எதிர்த்து விளையாடிய



தினாரா சபீனா முதுகு வலியால் கண்ணீர் மல்க மைதானத்தை விட்டு வெளியேறினார்.

ஆனால் செரீனா வில்லயம்ஸ் தன் சகோதரி வீனஸ் வில்லியம்சை 5 - 7, 6 -5, 7 - 6 என்ற செட்களில் வீழ்த்தி மீண்டும் முதலிடம் பிடித்தார்.


இந்த வெற்றியின் மூலம் அரையிறுதிக்குள் நுழையும் வாய்ப்பு செரீனாவிற்கு உறுதி பெற்றுள்ளது.******







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புது ஜோடி

சின்னத்திரை ஜோடிகளான கணேஷ்-ஆர்த்தி திருமணம் அண்மையில் குருவாயூர் கோயிலில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து வரவேற்பு நிகழ்ச்சி சென்னையில் உள்ள பிரபல ஹோட்டலில் நடைபெற்றது. பல படங்களில் தமது நகைச்சுவையால் ரசிகர்களைக் கவர்ந்த கணேஷ்- ஆர்த்தி ஜோடி 'மானாட மயிலாட' நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் இந்த நிகழ்ச்சி கலைஞர் டிவியில் ஒளிபரப்பானது. இதனால் வரவேற்பு நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இயக்குநர் கே. பாலசந்தர்,பி. வாசு, இசையமைப்பாளர்கள் சங்கர் கணேஷ், நடன இயக்குநர் கலா, தயாரிப்பாளர்கள் ஆர்.பி.சௌத்திரி, ஏ.வி.எம். சரவணன் உட்பட பல பிரமுகர்களும் இதில் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.

★★★



# திரை விமர்சனம் ஆதவன்

சூர்யா, தமன்னா, வடிவேலு, சாயாஜி ஷிண்டே, ஆனந்தபாபு போன்றோரின் நடிப்பில், கே.எஸ். ரவிக்குமாரின் இயக்கத்தில், உதயநிதி ஸ்டாலினின் தயாரிப்பில் வெளிவந்துள்ள படம் 'ஆதவன்'.

கூலிக்காக யாரையும் குறிவைத்துக் கொள்வதில் கெட்டிக்காரன் சூர்யா. இவரது தந்தை சாயாஜி ஷிண்டே, அண்ணன் ஆனந்தபாபு எல்லோருக்குமே கொலை தான் குடும்பத் தொழில். இந் நிலையில் மனித உறுப்புகளைக் கடத்தி விற்கும் வழக்கு ஒன்றை விசாரிக்கும் நீதிபதியைக் கொல்வதற்கு சூர்யாவுக்குப் பெருந்தொகைப்பணத்தைக் கொடுக்கிறது ஒரு திரைமறைவுக் கும்பல். அதன்படி நீதிபதியை கொல்ல சூர்யா எடுத்த முதலாவது முயற்சி தோல்வியில் முடிவடைகின்றது. இதனால் வேலைக்காரன் போல வேடமிட்டு நீதிபதி வீட்டுக்குள் நுழைகின்றார் சூர்யா. அதன் பின்னும் சூர்யாவின் குறி தப்புகின்றது. இந்நிலையில் அந்த நீதிபதி தான் சூர்யாவின் தந்தை என்ற உண்மை தெரியவருகின்றது. அதன் பிறகு சூர்யா என்ன முடிவுஎடுத்தார்? கொலைகாரக் கும்பலிடமிருந்து தனது தந்தையை எப்படிக் காப்பாற்றினார்? என்பதை விறுவிறுப்பாகச் சொல்கின்றது ஆதவன் திரைப்படம்.

முன்னைய படங்களில் வெளிப்பட்ட சூர்யாவின் நடிப்பு இதில் காணாமல் போயிருக்கின்றது. சண்டைக்காட்சிகளில் மட்டும் பளிச்சிடுகிறார். தொட்டுக்கொள்ள ஊறுகாய் போல அவ்வப்போது மட்டும் தலை காட்டுகின்றார் தமன்னா. எனினும் படத்தைத் தூக்கி நிறுத்துகின்றது வடிவேலுவின் நகைச்சுவைத் தர்பார். திரைக்கதையில் வழமை போலவே வித்தியாசத்தைக் காட்டியிருக்கிறார் இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார்.

ஆதவன் திரைப்படம் புதியமொந்தையில் பழைய கள்ளை அருந்தியது போலவே அமைந்திருக்கின்றது.

★★★






# காத்திருக்கும் ஷம்மு

'மாத்தி யோசி' படத்தில் நடித்து வருகிறார் நடிகை ஷம்மு.

இந்தப் படத்தில் நான்கு கதாநாயகர்கள். அவர்களுக்கு இணையாகவே தனது பாத்திரமும் பேசப்படும் என்று குறிப்பிடும் ஷம்மு இப்போது 'மயிலு' படத்திற்காகக் காத்திருக்கிறார். வித்தியாசமான கதைகளைக் கொண்ட இந்தப் படங்கள் இரண்டும் வெளிவந்துவிட்டால் தனது நடிப்பு பற்றி இன்னும் அதிகமாக ரசிகர்களும் திரையுலகமும் தெரிந்து கொள்ளும் என்கிறார். மேலும், நான் பணம் சம்பாதிப்பதற்காக சினிமாவில் நடிக்க வரவில்லை. நல்ல படங்களில் நடிக்க வேண்டும். அதனால் திரையுலகில் நிலைத்து நிற்கவேண்டும். என்பதற்காகவே சினிமாவுக்கு வந்தேன்.... என்றும் அழுத்திச் சொல்கிறார் ஷம்மு.

★★★★★★★★★★



# ஏன் தாமதம்?

சூப்பர்ஸ்ரார் ரஜினி காந்தின் நடிப்பில்உருவாகி வரும் அனிமேஷன் திரைப்படம் 'சுல்தான் -தி வாரியர்'.இப்படம் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் வெளியாகும் எனப் படத்தின் இயக்குனரான சௌந்தர்யா அண்மையில் அறிவித்துள்ளார்.

''இந்தப் படம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் முடிந்து விட்டன. இதனால் படம் எப்போது வெளிவரும் என எல்லோரும் கேட்கிறார்கள். நான் எனது அப்பாவை வைத்து சர்வதேச தரத்திலான 3 டி படத்தை உருவாக்குகிறேன். எனவே கால தாமதம் ஏற்படுவது சாதாரணமான விடயம். ரஜினி ரசிகர்களுக்கு உவப்பானவகையில் படம் உருவாகி வருகிறது என்பதைமட்டும் என்னால் உறுதியாகச் சொல்லமுடியும்'' என்று தாமதத்துக்கான காரணத்தைப் படத்தின் இயக்குநரும் ரஜினி காந்தின் மகளுமான சௌந்தர்யா விளக்கியுள்ளார். ★★★



# மறுப்பு

மலையாள சுப்பர் ஸ்ரார் மோகன் லாலுடன் நடிக்க மறுப்புத் தெரிவித்திருக்கிறார் நடிகர் பிருத்விராஜ், அதனால் அவருக்குப் பதில் திலீப்பை ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்.

மலை யாளத்தில் முன்னணி நடிகர்கள் இணைந்து நடிப்பது சாதாரண விஷயம். ஒரு முறை மோகன்லாலின் நரசிம்மா படத்தில் சின்ன வேடத்தில் நடித்திருந்தார். ம்மமுட்டி.

இயக்குநர் ஜோஷி 'கிறிஸ்டியன் பிரதர்ஸ்' என்ற படத்தை இயக்குகிறார். இதில் நாயகன் மோகன் லால். அவருடன் இணைந்து நடிக்குமாறு பிருத்தி விராஜீவிடம் கேட்கப்பட்டது. ஆனால், மோகன் லாலுடன் இணைந்து நடிக்க அவர் விரும்ப வில்லை எனக் கூறப்படுகிறது.

தற்போது பிருத்விக்குப் பதில் திலீப்பை ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். திலீப்பும் தனி ஹீரோவாக நடித்து வருகிறார். பிருத்தி வியை விட இவரது படங்களுக்கே மவுசு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அகதி வாழ்க்கை

ஆண்டாண்டு காலமதாய்
இப்பூமியிலே
அவதரிக்கும்
மானிடவர்க்கம்தான்
நான்!
பிறந்தது முதல்
இன்று வரை
கிடைத்த பட்டம்
''அகதி''
என்றோ ஒரு நாள்
விடிவு வரும் என்ற
நம்பிக்கையில்
என் உடம்பில்
உயிர் மட்டும்
ஊசலாடுகிறது
''அகதி'' வாழ்கையிலே
குடிக்க நீரில்லை என்று
கண்ணீர் கூட விட
முடியவில்லை
ஏனெனில்! என்
கண்களில்
அழுது அழுது
கண்ணீரும் வற்றிப்
போயிற்று.....

மு.ஆ. சுமன்
வல்லை
சிதம்பரக் கல்லூரி


## அவ நம்பிக்கை

துருவப்பகுதிக்குச்சென்று
வெப்பத்தை தேடுவது
போல
எம் மனதும்
எண்ணங்களும்
எதிர் எதிர் திசைகளில்
சென்று கொண்டு.....

ஒரு சிலந்திவலை போல்
எம்முள் அவை
பின்னப்பட்டு
சிரமப்படுத்திக்
கொண்டிருக்கின்றன

மட்டுவில்
தி.கோபிநாத்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



★★★ பல்கலைக்கழக மாணவனாக இருந்த வேளையில் ஈழத்துத் தமிழ்ப் புனைகதைத் துறையில் தன்னை இணைத்துக் கொண்டவர் பேராசிரியர் என். சண்முகலிங்கன். தற்போது யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தராகப் பதவி வகிக்கும் பேராசிரியர் என். சண்முகலிங்கன், இதற்கு முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சமூகவியல்துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர்.

நல்லதோர் ஆக்க இசைக் கலைஞராக ஆக்க இலக்கியகர்த்தாவாக நன்கறியப்பட்ட பேராசிரியர் சண்முகலிங்கன் எழுதிய 13 சிறுகதைகளின் தொகுப்பு 'ஊழித் தாண்டவம்' 2004 ஆம் ஆண்டில் அவரது முதல் சிறுகதைத் தொகுதியாக வெளிவந்தது.

இவரது சிறுகதைகள் வீரகேசரி, தினகரன் போன்ற பத்திரிகைகளிலும் மல்லிகை, தாயகம் போன்ற சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன.

தவிரவும் இவரது பல ஆய்வுக் கட்டுரைகளும் கவிதை நூல்களும் நூலுருப் பெற்றுள்ளன.

கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர்.

அவரது 'ஊழித்தாண்டவம்' சிறுகதைத் தொகுதியில் இடம் பெற்றுள்ள 'பதியெழு அறியா......' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

# பதியெழு அறியா...

**மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 122**

அப்பாவின் அழுகை விக்கல் இன்னமும் ஓயவில்லை.

ஆறுதல் படுத்தலாம் என நினைத்தாலும், அது அழுகையை மீண்டும் வெடிக்கச் செய்யலாம் என்ற அச்சம், காதுகளைப் பொத்திக் கொண்டு படுத்துப் பார்க்கிறன். இப்பொழுது காலையிலிருந்து நடந்த சம்பவங்கள், சத்தங்கள் எல்லாம் உள்ளே ஓங்கி ஒலிக்கின்ற உணர்வு- ஒலி, ஒளி, உறக்கம் இல்லாத மனத்திரை விரிவு. அப்பாவின் விக்கல் ஒலியிலிருந்து தப்பிக் கொள்ள என்ன செய்யலாம்? இப்படியான என் உணர்வு அழுத்தங்களிடையே எனக்குக் கைகொடுப்பன கவிதை, கதை....

இன்றைய அழுத்தங்கள் கவிதைக்குள் அடங்காதவை. கதையாகவே எழுதும் முடிவு மேலெழுகிறது. நல்ல வேளையாக மேசையில் அரிக்கன் லாம்பு அனுங்கிக் கொண்டிருந்தது. புதிய வீட்டில் இரவிரவாக லைட் போட்டு புதினம் காட்டாமல் இருக்கவென்று முன்னேற்பாடாய் கொளுத்தி வைத்தது கைகொடுத்தது. இல்லையென்றால் நான் லைட் போட, உள்ளே நித்திரை கொள்ளும் எல்லோரும் எழுந்து விடுவார்கள்.

வழமையாக கதையை எழுதி விட்டே தலைப்பை இடும் நான், இன்று தலைப்பை இட்டு எழுதத் தொடங்குகிறேன்.

கருவிலேயே உயிர்த்த தலைப்பு: பதியெழு அறியா...

எத்தனை தலைமுறைகளைக் கண்ட எங்கள் ஊரே வெறிச்சோடத் தொடங்கியது.

திருமண உறவில் கூட வெளியே செல்ல விரும்பாத ஊர்ப்பிடிப்பு தளர்கிறது. இரண்டு கிழமையாக தொடர்ந்து விழும் ஷெல் தாக்குதல் ஊரையே கலக்கி விட்டது.

பாதுகாப்பு வலயத் தொடுகோட்டில் இருந்தது எங்கள் வீடு.

அவ்வளவு பயமில்லை என இருந்த இருப்பிலும் இடிவிழுந்தது. சென்ற வாரம் உள்ளே நுழைந்து, அட்டகாசம் செய்து சென்ற சம்பவத்தின் பின் தான் ஊர் வெறிக்கும் இந்த நிலைமை.

பக்கத்து வீட்டிலும் கட்டில் கழற்றுகின்ற சத்தம். ''அண்ணே! ஆசையம்மாவவையும் போகப் போயினம்'' தங்கைச்சியின் கண்டுபிடிப்பு. அப்ப, நாங்கள்... என்கின்ற மாதிரி பார்க்கிறாள் அவள். ''அப்பா என்னவாம்....'' ''எங்களை எங்கயேன் போகட்டாம், தான் வீட்டை விட்டுட்டு வரமாட்டாராம்.'' எப்படித் தனியப் போறது? எழுந்து எனது அறைக்குள் ஒளிந்து கொள்ளுகின்றேன். ரேப் ரெக்கார்டரை அழுத்துகின்றேன்.

''தென்னெனனோ... தென தெனனனோ...''

எங்கள் வீரபத்திரர் வசந்தன் ஒலிப்பதிவு நாடா இதற்கு முன் புரியாத அழகும், செழுமையும் துலங்கும் உணர்விடை, எங்கள் ஊரைப் பாடும் அந்த வசந்தனில் என்னை மறக்க முயலுவேன். பக்கத்து வீட்டுச் சாமான்களுடன் அவர்கள் லாரி உறுமி மறையும் சத்தம். அந்த ஒலியின் மறைவில் ஒரு பயங்கரச் சத்தம். குண்டுகள், தொடர்ந்து வெடிக்கும் குண்டுகள். ஊரில் மிஞ்சிய அயல் குழந்தைகள், பெண்கள் ஓலங்கள்.

''ஆமி வருகுதாம்....''

ஓட்டம், ஒளிதல்....

''காக்க காக்க கனகவேல் காக்க தாக்க தாக்க தடையறத் தாக்க'' அம்மாவின் குரலில் அச்சம் மறைக்கும் கந்த சஷ்டி கவசம்.

எந்தப் பக்கம் கூட சத்தம்? இந்த அவலத்திடையும் நானும், தங்கைச்சியும் புள்ளி விபரக் கணக்கெடுப்பு.

''நாங்கள் எங்கேயன் போவம் தம்பி...''

''அப்பாவாலை ஓட ஏலுமே.....''

''அப்ப நீ ஆவது ஓடித்தப்பு....'' அம்மாவும், நானும்.

அப்பா மட்டும் கட்டிலாலும் எழுந்திருக்கவில்லை. அவர் முகத்தில் எங்களது போல பயத்தின் சுவடுகள் இல்லை. ஆனால் கவலையின் சிந்தனை.

தாக்குதல்; எதிர்த்து தாக்குதல்- கவச வாகனங்கள் பொடிபட, அவர்கள் ஓடியிருக்க வேண்டும். மீண்டும் அமைதி. ஒழுங்கையில் மனித குரல்கள் சில.....

''புளியடி வைரவர் கோவிலடியில், குழந்தையோட நிண்ட அந்த இளந்தாரிப் பெடியனைக் கூப்பிட்டுட்டு சுட்டுப்போட்டாங்களாம்!'' ''கிளியன்ரை மனிசி கும்பிடக் கும்பிட வீட்டுக்குள்ள உள்ளிட்டு சுட்டிருக்கிறாங்கள்.''

''மாவடியில் தானாம் பெடியளின்ர கண்ணி, அந்த வயிறன் கிளாக்கர் வயரை அறுத்துப் போட்டானாம். இல்லையெண்டால் ஆமியை அதிலையே திருப்பியிருப்பாங்கள்.....''

''நாங்கள் வீட்டுக்குள் கிடந்தது எவ்வளவு பேய்த்தனம்'' நானும் தங்கைச்சியும் எங்களுக்குள்... வந்த மற்றைய செய்தி எங்கள் யோசனையையும் அர்த்தமிழக்கச் செய்யும். தோட்டங்களுக்காலை ஓடின சனங்களிலையும் மூண்டுபேர் சாத்தனாவத்தையடியிலை மேலையிருந்து சுட்டுச் சரியாம்....'' எங்கேயும் ஆபத்து நிகழ்வுகள் ஒன்றுதானோ? மீண்டும் நானும் தங்கைச்சியும் தான்.

சூரபத்மாவைத் துணித்தகை யதனால் சின்னக் குழந்தை சேவடி போற்றி, சாமி அறையிலிருந்து அம்மா தான்; முன்னைய அச்சம், அவலம் தணிந்து நன்றி கனியும் குரலில்.

அப்பாவைப் பார்த்தேன்; அவரின் பார்வையும் வழமைக்குத் திரும்பியிருந்தது. கட்டிலில் போய் இருந்து, 'என்னப்பா பயந்திட்டியளே....' என்று கேட்டேன். 'சே....!' என்று தலையாட்டலுடன் பதில். பிறகு மௌனம். *(12 ஆம் பக்கம் பார்க்க....)*

## நவீனத்துக்குள்!

இலக்கு நோக்கி இயங்கியதால்
இலக்கியங்கள் ஆயிற்று- இதன்
இயக்கும் கருவிகள் நான்கு
கவிதை, கட்டுரை, கதை, நாடகம்
வியக்கும் வகையில் பழைமைகள்
நவீனத்துக்குள் வர முடியவிட்டாலும்
இயங்கும் தன்மை கொண்ட
எல்லாம் இலக்கியங்கள் தானே!
மயக்கும் தொன்மைச் சொற் றொடர்களை
விளக்க வேண்டியது சான்றோர் கடமை.

இ. ஜெயபாலன்
சங்கானை.

# சிறந்த தீயாள்

**இலக்கியக் காட்சி 13**

விடிந்தால் இராமனுக்கு முடிசூட்டு விழா. அயோத்தியின் அரசன் என்ற நிலையில் இருக்கும் தசரதனுக்கு எத்தனை வேலைகளிருக்கும்? அத்தனையையும் நிறைவேற்றியபின் நடுச்சாமம் தாண்டிய நேரப் பொழுதில் தன் காதல் மனையாளாகிய கைகேயியின் இருப்பிடம் நாடி உறங்குவதற்காக வருகின்றான்.

நாளையுடன் அயோத்தியின் ஆட்சியிலிருந்து இளைப்பாறப் போகின்றான். நடையில் ஒரு கம்பீரம் வெளிப்படும் படியாக நடக்கின்றான். ''மடங்கல் ஆளி அன்னான்'' என அவன் தோற்றப்பொலிவைக் கம்பர் தரிசிக்கிறார்.

கூனியின் சூழ்ச்சியால் மனம் திரிந்த கைகேயி, தன் தோற்றப் பொலிவையே சிதைத்துவிட்டு அமங்கலக் கோலத்தில் மன்னன் வருகைக்காகக் காத்திருக்கிறாள். கேகயச் சக்கரவர்த்தியின் மகளல்லவா? இவள் அறியாத இராஜதந்திரங்களா? தன் மனை நாடிவரும் கணவனிடம், சூழ்ச்சியாக வரம் கேட்க வேண்டுமென்பதற்காக இந்த நாடக மயில் பார்த்திருக்கிறாள்.

கைகேயியின் சூழ்ச்சி அரங்கேறுவதனால் இதனைப் பதிவு செய்யும் படலத்திற்குக் கைகேயி சூழ்வினைப் படலம் (சூழ்வினை - சூழ்ச்சி) எனக் கம்பர் பெயரிட்டார். சூழ்வினை என்பது வினைத் தொகையாகவும் கொள்ளத்தக்கது. மந்தரையின் மொழிகளால் மனம் மாற்றப்பட்டவளாதலால் சூழ்ந்த வினையாயிற்று. வஞ்சகத்தோடு தசரதனிடம் வரம்கேட்டு இராமனைக் காடேகப் பணிக்கின்றவளாதலால் சூழ்கின்ற வினையாயிற்று. தனது வாழ்வைத் தானே கெடுத்துக் கொள்வதற்கான வழியைத் தேடப்போகிறவள் ஆதலால் சூழும் வினையாயிற்று. இவ்வாறு கைகேயியை மையப்படுத்தி முக்காலங்களிலும் அவளது வஞ்சகச் செயல்களையும் விளைவுகளையும் பொருத்திப் பார்க்கவல்ல இப் படலத்திற்கு கம்பன் 'கைகேயி சூழ்வினைப் படலம்' எனப் பெயரிட்டது சாலப் பொருத்தமாய் அமைகின்றது.

கைகேயியின் கோலத்தைப் பார்த்துத் துணுக்குற்ற அரசன் மானை எடுக்கும் ஆனையே போல் தனது பெரிய தடக் கைகளால் அவளைக் கட்டித் தழுவித் தூக்கத் தலைப்பட்டான். அவனது கரங்களிலிருந்து விடுபட்டு நிலத்தில் தானே வலிய விழுந்து மூச்செறிகிறாள் கைகேயி.

''என்னை நிகழ்ந்தது? உன்னை இகழ்ந்தவர் மாள்வார். உற்றது எல்லாம் சொன்ன பின் என் செயல் காண்டி! சொல்லி விடு! கெஞ்சுகிறான் தசரதன்.

தருணத்திற்காகக் காத்திருந்தவள், அன்று ஒருநாள் சம்பராசுரனோடு போர் புரிந்தபோது உதவியமைக்காக மன்னன் தருவதாக வாக்களித்த இரண்டு வரங்களையும் கேட்டுவிடத் துணிகிறாள். பெண்மையின் மென்மை உள்ளம் படைத்த அவள் இப்போ உரம்கொள் மனத்தவள் ஆகிவிட்டாள்.

**ஏய வரங்கள் இரண்டின் ஒன்றினால் என்**
**சேய் அரசு ஆள்வது சீதை கேள்வன் ஒன்றால்**
**போய் வனம் ஆள்வது எனப் புகன்று நின்றாள்**
**தீயவை யாவையிலும் சிறந்த தீயாள்.**

*(கைகேயி சூழ்வினைப் படலம்: 14)*

''இரண்டு வாரங்களில் ஒரு வரமாக என்சேய் அரசாள வேண்டும்'' கைகேயியின் வார்த்தையைக் கேட்கத் தொடங்கியவுடன் தசதரனது மனத்துள் மகிழ்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும். கைகேயி தன் மகன் என்று [illegible] இராமனைத் தானே கருதி[illegible] எனக் கூறும் போது கூட ''வள்ளல் இராமன் உன் மைந்தன் ஆணை'' என்று தானே தசதரனும் கூறினான். விடிந்தவுடன் இவ்வெண்ணம் ஈடேறப் போகின்றதே? இதைப் போய் வரமாகக் கேட்கின்றாளா?

தச்தரனின் சிந்தனைக் குதிரையை கைகேயின் கொடும் வார்த்தைகள் விஞ்சி விடுகின்றன. அவள் கேட்ட இரண்டாவது வரம் கைகேயி கொண்டிருந்த நோக்கங்களையெல்லாம் பட்டவர்த்தனமாக்கியது. அவள் வார்த்தைகள் தசதரனது நெஞ்சைத் தகர்த்தன. கோசல நாட்டையும் கேகய நாட்டையும் பரதனின் கீழ் ஆளச் செய்யலாம் எனக் கூனி போட்ட திட்டத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கவெனக் கைகேயியின் சொற்கள் பாய்ந்தன. ''சீதை கேள்வன் (கேள்வன்- கணவன்) போய் வனம் ஆள வேண்டும்''. கைகேயி இராமனைக் குறிப்பதற்காகச் சீதை கேள்வன் எனக் குறிப்பிட்டமை இராமன்பால் அவள் கொண்டிருந்த வெறுப்பைத் துலாம்பரமாக்கியது.

அரசுரிமை பற்றிய சட்டங்களையெல்லாம் கைகேயி அறிந்திருக்கிறாள். கூனியும் இதனை நன்கு அறிவாள். மூத்தவன் இருக்க இளையவன் அரசேற்க இயலாது. நாட்டு மக்களும் இதனை அனுமதிக்க மாட்டார். எனவே இராமனைக் காட்டிற்குச் செல்லுமாறு அனுப்புவதே பொருத்தமான இரண்டாவது வரமாகிறது. அவ்வரத்தைக் கேட்கும் கைகேயி ''சீதை கேள்வன் ஒன்றால் போய் வனமாள்வது'' என்கிறாள். வனமாள்வது என்பதில் வனம் ஆள்வது, வனம் மாள்வது என இரண்டு பொருள்கள் உள்ளன. இராமன் வனத்தை ஆள்கிறானோ வனத்தில் மாள்கிறானோ அவளுக்குக் கவலையில்லை. தனது எண்ணங்களை நிறைவேற்றுவதிலேயே குறியாக இருக்கிறாள். கைகேயின் மன ஓட்டத்தைக் கண்ட கம்பன் தீயவை யாவையினும் சிறந்த தீயாள்'' எனத் தன் கருத்தையும் பதிவு செய்தான்.

தசரதனது நா வரண்டது. கண்கள் சிவந்தன. கவலை மிகுந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறான்.

**''கண்ணே வேண்டும் எனினும் ஈயக் கடவேன் என்**
**உண்நேர் ஆவி வேண்டினும் இன்றே உனது அன்றோ**
**பெண்ணே வண்மைக் கேகயன் மானே பெறுவாயேல்**
**மண்ணே கொள்நீ மற்றையது ஒன்றும் மற என்றான்.**

*(கைகேயி சூழ்வினைப் படலம்-32)*

கைகேயியின் காதற் கணவன், கோசல நாட்டின் ஒப்பற்ற அரசன் இரண்டாவது வரத்தை மறந்துவிடுமாறு கெஞ்சுகிறான். அவ்வரத்தை வாயினால் உரைக்கும் பக்குவம் கூட அவனிடம் இல்லை. மற்றையது என்றே கூறுகிறான்.

தசதரன் நிலையை நன்கு உணர்ந்திருந்த கைகேயி அதற்கு உடன்படுவதாக இல்லை. முன்னே தந்த வாக்குறுதியைக் காப்பாற்றியே தீரவேண்டும் என்று அவனிடம் கூறி ''மன்னர் யார் உளர் வாய்மைக்கு இனி?'' என அவனைச் சாடுகிறாள். ஏற்கனவே வாக்குறுதி அளித்த வரங்களை மீளப் பெறுவது அறமன்று எனக் கூறுகிறாள். அதற்கு மேல் பேசுவதற்கு வழி தெரியாத தசரத மன்னன் ''ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம்'' எனக் கூறி மூர்ச்சிக்கிறான்.

மனத்துள்ளே இருள் குடிகொண்டால் நாணமற்ற சொற்கள் எல்லாம் நாவில் வெளிப்படும். கூனியின் சூழ்ச்சியால் கைகேயியின் மனம் திரிந்தது. அவள் மனம் இருண்டது. தன் சூழ்ச்சிக்காகக் கொல்லும் சொற்களைப் பேசுகிறாள். நாணம் இல்லாமல் அவள் மேற்கொண்ட செய்கைகளைக் கூற நமக்கே நாணம் உண்டாகும் எனவேதனையை வெளிக்காட்டுகிறான் கம்பர். ''நாண் இலள் என்ன நாணம் ஆமால்'' எனப் பேசுகிறான்.

ஒருவன் ஒழுக்கத்தில் தவறி விட்டால் அவன் நல்ல இனத்தைச் சேர்ந்தவன் என்ற பெருமையைக் கெடுத்துவிடும். ஆனால் நாணுடைமையில் இருந்து வழுவி விட்டால் அது (குலப் பெருமை மட்டுமல்ல) எல்லாச் சிறப்புக்களையும் கெடுத்துவிடும்.

**''குலம் சுடும் கொள்கை பிழைப்பின் நலம் சுடும் நாண் இன்மை நின்றக் கடை''** என்பது குறள்.

★★★★★★★★★★★★




ச.லலீசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற லோ.ஸ்ரீகர்சன்.


சாதனைக்கு உதவிய கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியைகள்.


தேசிய ரீதியில் இரண்டாம் இடம் பெற்ற ப.கஸ்தூரி.

# கல்வியைக் கருத்தனமாக்கி பெருமைதேடிய புலமைச் செல்வங்களின் பாராட்டுவிழா வர்ணப் பதிவுகள்

உதயன் ஊடக அனுசரணையுடன் 2009 ஆம் ஆண்டின் புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாகச் சித்திபெற்ற வெற்றித் தேர்வாளரின் கௌரவிப்பு விழாவின்பதிவுகள் இவை. இப் பெருவிழாவுக்கு மக்கள் வங்கியின் யாழ்.கிளை, தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளை மற்றும் ஈ.எஸ்.பேரம்பலம் அன் சன்ஸ் ஆகிய நிறுவனங்களும் பங்களிப்புச் செய்தன. 25.10.2009 அன்று யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற விழாவின் சில வடிவங்கள் இங்கே.


வெற்றித் தேர்வு அமைப்பாளர் சரா.புவனேஸ்வரன்


வாழ்த்துப்பாமாலை வழங்குகிறார் சங்கீத பூஷணம் செ.குமாரசாமி.

உதயன்

படங்கள் : ஓங்காரன்


சாதனையாளர்களில் ஒருவர் பரிசில்களைப் பெறுகிறார்.

விழாவுக்குத் திரண்டிருந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள், உறவினர்கள்




சாதனையாளர்களில் ஒருவருக்கு வெற்றிக்கம்பு சூட்டப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல வருடங்களுக்கு ஒருமுறை பூக்கும் மூங்கில் அது தரும் அரிசியை மனிதரும் உண்கின்றனர்



பண்டைக்காலம் தொட்டே பொருளாதார மதிப்புடன் உலகில் பயன்படுத்தப்பட்டு வரும் தாவரங்களில் மூங்கிலும் ஒன்றாகும். இது ஒரு விதையிலைத் தாவரம். எப்போதுமே பசுமையாகத் தோற்றமளிக்கும் மூங்கில், வருடம் முழுவதும் வளரும் தன்மை கொண்டது.

மூங்கில் ஈரப்பதம் மிக்கவெப்ப மண்டலத்தில் மிகுதியாக வளரும்.

மூங்கிலில் 550 வரையான இனங்கள் உள்ளன. இந்தியா, பர்மா, மலேசியா, சீனா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலும் தென் அமெரிக்காவிலும் மூங்கில் பெருமளவில் வளருகின்றது. ஜப்பானிலும் அரிய வகைமூங்கில் இனங்கள் உள்ளன. மூங்கிலில் சில இனங்கள் 120 அடி உயரம் வரை வளரத்தக்கவை. சில இனங்கள் தரைமீது படர் கொடிகளாகவும் வளரும். மூங்கில் ஒரு புல்வகைத் தாவரமாகும். தரைக்குமேல் தெரியும் கணுக்கள் மூங்கிலின் கிளைகளே. மூங்கிலின் உண்மையான தண்டுப்பகுதி தரைக்குள்தான் இருக்கும். உள்ளே துளையுள்ள மூங்கில் பெண் மூங்கில் எனவும் துளையற்றவை ஆண் மூங்கில் எனவும் கூறப்படுகின்றது.

மூங்கில் இலை பெரிய இலைக் காம்பையும் சிறிய அலகையும் கொண்டிருக்கும். மூங்கிற் பூக்கள் பச்சை நிறத்தில் சிறு கதிர்களாகவும் கலப்பு மஞ்சரிகளாகவும் காணப்படும். மூங்கிலின் சிறப்பே அதனது பூக்கள்தான்.

மூங்கில் வருடாவருடம் பூப்பதில்லை. பல ஆண்டுகளுக்கு ஒரு தடவை அபூர்வமாகப் பூக்கின்றன. மூங்கில் பூக்கள் நறுமணம் கொண்டவை. பூக்கள் காய்த்துக் கனியாகின்றன. கனியின் உள்ளிருக்கும் விதை மூங்கில் அரிசி எனப்படும். மூங்கில் கனிகளை உண்ண காட்டு மிருகங்களும் பறவைகளும் பெருவிருப்பு காட்டுகின்றன. மனிதர்கள் மூங்கில் அரிசியை உணவாக பயன்படுத்துவர். மூங்கிலின் இளம் தண்டுகள் சீனா, ஜப்பான் மற்றும் இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகளில் பிரபல்யமான உணவுப் பொருளாகும். பஞ்ச காலத்தில் தாய்வான் நாட்டில் ஏழை மக்களது உணவு பெரும்பாலும் மூங்கில் அரிசிச் சோறே.

தூண், கூரை,பேப்பர், பாய், சாரம், ஏணி, பாலம், நீரோடும் குழாய், வேலி, படகு, தெப்பம், பாய்மரம், நுகத்தடி, அச்சு, கைத்தடி, பலவகைத்தூரிகைகள், சுங்கான், விசிறி, குடை, விளையாட்டுப் பொருள்கள் மேசை, நாற்காலி, பெட்டகம் போன்ற ஏராளமான பொருள்கள் மூங்கிலை மூலப்பொருளாகப் பயன்படுத்திச் செய்யப்படுகின்றன. இவைதவிர மூங்கிலின் இலைகள் ஆயுர்வேத மருத்துவத்திலும் பயன் படுத்தப்படுகின்றது. தற்காலத்தில் மூங்கிலிலிருந்து ''ரேயான்'' துணியும் கூட தயாரிக்கப் படுகின்றது. ★★★

# பஞ்சாமிர்தம்





## பரோபகாரி மைக்கல் ஜக்ஸன்



பொப்பிசை மன்னன் எனப் போற்றப்படும் மைக்கல் ஜக்ஸன் தாராள மனம் கொண்ட மனிதநேய பரோபகாரியாகவும் விளங்கியுள்ளார். கருணை இல்லங்களுக்கென அவர் 300மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேல் உதவி வழங்கியுள்ளார்.

போரினாலும் வேறு முரண்பாடுகளினாலும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவவென அவர் தமது 'ஹெல் த வேர்ல்ட்' நிறுவனம் மூலமாக உலகம் முழுவதற்கும் பல மில்லியன் கணக்கில் நிதியுதவி வழங்கியுள்ளார். இவை தவிர 'எயிட்ஸ்' நோய் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கென பெருமளவில் நிதியுதவி வழங்கியுள்ளார். மது போதையில் வாகனம் ஓட்டுவதைத் தவிர்ப்பதற்கான நீகன் நிர்வாகத் திட்டங்களுக்கும் பெருமளவு நிதியை அன்பளிப்புச் செய்துள்ளார்.

''வீ ஆர் த வேர்ல்ட் (We are the world) நிகழ்ச்சி பெருவெற்றி பெற்றதன் மூலம் தமக்குக் கிட்டிய பணத்தில் ஆபிரிக்காவில் பட்டினி மற்றும் ஏழ்மையை ஒழிப்பதற்கான திட்டங்களுக்கு மைக்கல் ஜக்சன் தாராளமாக நிதியுதவி வழங்கியுள்ளார்.

மைக்கல் ஜக்சனின் மரணம் ஒரு திட்டமிட்ட கொலை என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. நியூயோர்க் மாகாண மரண விசாரணை அதிகாரி, மைக்கல் ஜக்சனுக்கு நஞ்சூட்டப்பட்டிருந்தது என்பது தொடர்பான அறிக்கையை பகிரங்கமாக வெளியிடாது வைத்திருக்கின்றார். ஜக்சனின் மரணம் தொடர்பான புலன் விசாரணைகள் தடைகள் ஏதுமின்றி நடைபெற வேண்டும் என்ற நோக்கிலேயே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★★

## பானையும் காற்றும்



குருநாதர் தன் நான்கு சிஷ்யர்களுக்குப் பாடம் சொல்லி வந்தார். ஒரு நாள் ஒரு பானையைக் கவிழ்த்து விட்டு, ''இதற்குள் என்ன உள்ளது?'' என்று கேட்டார். முதல் சிஷ்யன் ''ஒன்றுமில்லை'' என்றான். இரண்டாவது சிஷ்யன் பானையைக் கொஞ்சம் தூக்கிப் பார்த்தான். ''ஒன்றுமில்லை'' என்றான். மூன்றாவது சிஷ்யனும் ''ஒன்றுமில்லை'' என்றான். நான்காவது சிஷ்யனோ ''காற்று உள்ளது'' என்றான். குரு அவனைப் பாராட்டினார். குருநாதர் பிறகு ''சரியாகச் சொன்னாய்! இந்தக் காற்றை எப்படி வெளியில் எடுப்பது? என்று கேட்டார். முதல் மூவரும் விழித்தார்கள். சாத்தியமில்லை என்றார்கள். நான்காவது சிஷ்யன், பானையில் நீரை நிரப்பினால் காற்று வெளியே போய் விடும், குருவே'' என்றான்.



மனதில் உள்ள தீய எண்ணங்களைப் போக்க நல்ல எண்ணங்களைப் புகுத்த வேண்டும். நல்லதை நினைக்க நினைக்க கெட்ட எண்ணங்கள் தானாக விலகும்- நீரைக் கொண்டு பானையை நிரப்பினால் காற்று வெளியேறுவதைப் போல.

★★★★

## தப்பியது தவளை

பஞ்சபாண்டவர்கள், பங்காளியான துரியோதனன் ஆணைப்படி காட்டில் வனவாசம் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது கிருஷ்ணபகவான் அவர்களைப் பார்க்க வந்தார். ஆபத்சகாயனான கிருஷ்ணனைக் கண்டதும் பாண்டவர்கள் முகம் மலர்ந்து வரவேற்றனர்.

''வாருங்கள் அண்ணா!'' என்று மனங்குளிர பாஞ்சாலி வரவேற்றாள். முகமலர்ச்சியோடு அமர்ந்த கண்ணன், ''பாஞ்சாலி! களைப்பாக இருக்கின்றது. குளிக்க வேண்டும். ... வெந்நீர் வைத்துக் கொடு'' என்றார். உடனே பாஞ்சாலி பெரிய அடுப்பில் தண்ணீர் வைத்தாள். பீமன் விறகுகளைச் சேகரித்துக் கொடுத்தான். கொஞ்சம் நேரம் ஆனது. நீர் கொதித்திருக்கும் என்று நினைத்தாள் பாஞ்சாலி. ஆனால் நீர் சூடாகவில்லை. பாண்டவர்களும் ஒன்றும் புரியாமல் தவித்தனர்.



சிரித்த கிருஷ்ணன், ''பாஞ்சாலி! பானையைச் சாய்த்து தண்ணீரைக் கீழே ஊற்று'' என்றார். பாஞ்சாலியும் அப்படியே செய்தாள். என்ன ஆச்சரியம்! பானை நீரிலிருந்து ஒரு தவளை குதித்தோடியது. அனைவர் முகத்திலும் வியப்பு! ''இவ்வளவு விறகுகளை எரித்தும் தண்ணீர் சூடேறவில்லையே, எப்படி? இந்தத் தவளை எப்படி உயிரோடிருந்தது?' என்று கேட்டனர்.

அதற்குப் பகவான், ''தண்ணீர்ப் பானையில் தவளை இருந்ததைப் பாஞ்சாலி கவனிக்கவில்லை. அடுப்பில் வைத்து தீ மூட்டியதும் தவளை அபயக்குரல் கொடுத்தது. அது தெரிந்ததும் தண்ணீர் சூடேறாமல் செய்துவிட்டேன். ஏனென்றால் உலகில் உள்ள எல்லா உயிர்களுக்கும் நான்தானே பாதுகாவலன். ஒரு தவளையைக் காப்பாற்ற வேண்டிய கடமையும் எனக்குத்தானே!'' என்றதும், 'அவனின்றி ஓர் அணுவும் அசையாது' என்கிற உண்மை பாண்டவர்களுக்குப் புரிந்தது.

வாரியார் சுவாமிகள் சொன்னது.

## கடல் வாழ் அதிசய உயிரினம் இது......!



"செஸ்" விளையாட்டில் குதிரை முகத்தோற்றம் உள்ள காயைப் பார்த்திருப்பீர்கள். அந்த 'செஸ்' காயைப் போன்ற உருவ அமைப்புடன் காணப்படும் ஒருவகை மீனினம் தான் கடற்குதிரை. இதன் அறிவியற்பெயர் 'ஹிப்போ கம்பஸ்' (Hippo campus) என்பதாகும். ஹிப்போ என்றால் குதிரை எனவும், கம்பஸ் என்றால் வளைவு எனவும் கிரேக்க மொழியில் பொருள்படும்.

கடற்குதிரை, சிங்நாதீடியா (Syngnathidae) என்னும் குழல்மீன் (Pipe Fish) குடும்பத்தைச் சேர்ந்தது. இதன் கழுத்து, உடல், வால் என்பன எலும்பு வளையங்களால் மூடப்பட்டிருக்கும். உடலில் 12 வளையங்களும் வாலில் 32முதல் 35வளையங்களும் காணப்படும். வால் நீட்டியும் சுருக்கவும் ஆன இயல்பைக் கொண்டது. தனது வாலைப்பயன்படுத்தி பாசி, தாவரங்கள் போன்றவற்றை இது கெட்டியாகப் பற்றிக்கொள்ளும். இதுபெரும்பாலும் செங்குத்தான நிலையிலேயே நிமிர்ந்து நீந்திக் கொண்டிருக்கும். முதுகின் நடுவிலுள்ள துடுப்பையும் தோள் துடுப்புக்களையும் விசிறிபோல் அசைத்து நீந்திச்செல்லும். இதன் முகம் குழாய்போல் நீண்டிருக்கும். சிறிய வாய், செதில்கள் முகத்தில் காணப்படும். முகம் உடலோடு நேர்கோட்டில் இல்லாமல் சற்று வெளியே நீண்டிருக்கும். இதன் தலை பார்ப்பதற்குக் குதிரையின் தலைபோலத் தோற்றமளிக்கும்.

சாம்பல், மஞ்சள்,பழுப்பு என பல்வேறு வர்ணங்களில் கடற்குதிரைகள் உள்ளன. சிலவற்றில் வெண்புள்ளிகளும் காணப்படும். கடற்பாசியின் மேல் இவை தங்கியிருக்கும் போது இவற்றை இலேசாக அடையாளம் காண இயலாது. ஐரோப்பிய கடற்பகுதியில் காணப்படும் கடற்குதிரைகள் இடத்துக்கு ஏற்றவாறு தமது நிறங்களை மாற்றிக்கொள்ளும் தன்மை கொண்டவை.

சாதாரணமாக இவை 3முதல் 6 அங்குல நீளமே வளரக் கூடியவை. கடல் நத்தை,சிறு நண்டு, புழு, பூச்சிகளை இவை உண்டு வாழ்கின்றன. ஆண் கடற்குதிரையின் வாலின் கீழ்ப்புறம் ஒரு பை அமைந்திருக்கும். பெண் கடற்குதிரை அப் பையில் முட்டையிடும். ஆண் கடற்குதிரை அதனைப் பத்திரமாகப் பாதுகாத்து அடைகாக்கும். முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவரும்போது அவை 10 முதல் 12 மில்லிமீற்றர் அளவு கொண்டனவாக இருக்கும். கடற்குதிரைகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன.

து.ஜெயரூபன், கந்தரோடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதியெழு அறியா...

*[09 ஆம் பக்கத் தொடர்ச்சி....]*

அப்பாவின் இந்த மௌனத்தின் பொருள் எனக்குப் புரியும். பேச்சுக் கொடுத்தால், காலையில் நடந்த குண்டுச் சம்பவங்களையும் சொல்லி, வீட்டை விட்டு வெளிக்கிடும் கதைக்கு நான் மீண்டும் சென்றுவிடலாம் என்பதனாலான கள்ளத் தப்புதலே, இந்த மௌனம்.

கடந்த இரண்டு கிழமை அனுபவத்தில், பிரச்சினை குறையுமட்டும் இந்த ஆபத்து வலயத்திலிருந்து கொஞ்சம் தள்ளி சில நாள் இருந்து வருவோம் என்பதில் அப்பாவை இணங்க வைக்க படாதபாடுபட்டு, தோல்வியில் நான் கண்டுபிடித்தது இந்த மௌனார்த்தம்.

அப்பாவின் கையைப் பிடித்தபடி இந்த மௌனத்தைக் குலைக்கும் முயற்சியின் கணங்களிடை பக்கத்து வீட்டு சின்னத்தங்கம் ஆச்சியின் ஒப்பாரி ஓங்குகிறது. ''அண்ணை, ஆச்சியை விட்டுட்டு சாமான்களைத் தான் கொண்டு போயிருக்கிறாங்கள்....'' ஒரு வேளை அடுத்த ட்றிப்பில் சான்ஸ் கிடைக்கலாம். அப்படி ஏதும் சான்ஸ் இல்லையென்பது மாதிரி அவளின் ஒப்பாரிப் பாடல் அடிகள்.

அப்பாவுக்கும் விடயம் விளங்காமல் இல்லை; இருந்தாலும் விடயத்தைத் திசை திருப்பும் நிலையில் ஏதும் புத்தகம் தா, வாசிக்க..... என்கின்றார்.

நடந்த அழுத்தங்கள் போததென்று நானும் சத்தம் போடக்கூடாது என்ற தீர்மானத்துடன் புத்தக அலுமாரிக்குள் துழாவி ஒன்றை எடுக்கின்றேன். இந்திரா பார்த்தசாரதியின் சுதந்திர பூமி. அப்பா சுதந்திர பூமியில் மெல்ல நுளைகின்றார். நடந்த சம்பவங்களை மறந்து அல்லது மறக்க முயன்று அவரவர் தத்தம் கடமைகளுக்குள் நுழைய முயலுகின்றோம். காலையில் குடித்த தேனீருக்குப் பிறகு ஒண்டுமில்லை; அடுப்படிக்குச் செல்கிறார் அம்மா. தங்கைச்சி ஏதோ மூலிகையைத் தேடிக் கொண்டிருந்தாள். ஆயுள்வேதம், வருகிற கிழமை சோதனை அவளுக்கு.

''அண்ணே..... இங்கே பார் 'ஷெல்' துண்டு.....'' மூலிகைக்குப் பதில் ஷெல் துண்டுகளுடன் ஓடி வந்தாள்.....

''இது எங்களில் பட்டிருந்தால்....''

''சரி, அம்மாவுக்கு காட்டாமல் பத்திரமாய் அதைக் கொண்டுபோய் வை'' வரலாற்று ஆதாரங்களைப் பேணும் முயற்சியும் இந்த அவலத்திடை நானும் எனது புத்தகம், நோட்டினுள் மெல்ல நுழைய முயன்றேன்.

''இனப் பிரச்சினையின் தாக்கங்கள்....''

எங்கள் அனுபவத்தையும் மிஞ்சி ஒரு படிப்பா.... வீட்டை விட்டு கிளம்புவதில் அப்பா காட்டும் தயக்கம், எங்கள் வீட் டில், ஊரில் அவர் கொண்ட பிணைப்பு......

அப்பாவின் இந்த வீட்டுப்பற்று உணர்த்தும் அர்த்தங்கள் ஆழமானவைதான்.

திடீரென, 'சடசடசட' என சுடும் ஒலி என் சிந்தனையை நிறுத்தும்.

''ஓடிவாங்கோ அப்பா....'' அப்பாவைப் பிடித்துவந்து குசினிப் புகைக்கூண்டின் கீழ் தள்ளி..... நாங்களும் உள்ளே அவிகின்றோம். இன்று வான் வெளித் தாக்குதல் அனுபவம் ஓட்டைத் துளைத்து எங்கள் குசினிக்குள்ளும் ஒன்றிரண்டு குண்டுத் துண்டுகள். அந்த ராட்சத ஹெலியின் அக்கிரமம் முடிய அரை மணித்தியாலம் வரையில் பிடிக்கிறது.

புகைக்கூண்டின் கீழ் 'கனன்ற' பொழுதிடை எப்படியும் வீட்டை விட்டு நாமும் கிளம்ப வேண்டும் என்ற முடிவு மேலும் உறுதி பெறுகின்றது.

''அப்பாவைத் தான் எப்படிச் சமாதானப்படுத்துவது... சம்மதிக்க வைப்பது.....'' இந்த நேரத்தில் தான் அற்புதமாய் திடீரென 'கேற்றைத்' திறந்தபடி அக்கா வருகின்றாள். சொல்லாமல் கொள்ளாமல், அதுவும் இந்த ஆபத்து வேளையில் நீள தடைகளைத் தாண்டி... எங்கள் ஆச்சரியத்தை விடுவித்து அவளே பேசினாள்.... ''ஊர்ப் பக்கம் பிரச்சினை மோசம் எண்டு கேள்விப்பட்டன். அங்கை நிம்மதியாய் வேலை செய்ய முடியவில்லை. லீவைப் போட்டிட்டு வந்திட்டன்.''

''இந்த சூடுகளுக்காலை எப்படிப் பிள்ளை வாறாய்.....?''

அப்பாதான் கேட்டது. ''சந்தியில் வந்து இறங்கினால் பஸ் இல்லை; நடந்துதான் வந்தன்.

வரயுக்கைதான் ஹெலிச்சூடு... வெள்ள வாய்க்காலுக்குள்ள கிடந்துதான், ஹெலி போக எழும்பி வாறன்...''

''விசர்ப்பிள்ளை, இந்தப் பிரச்சினையுக்கை வந்திருக்கிறாய்'' வழமை போல் பிள்ளைக்கு புத்தி சொல்லும் அப்பா

''சரி... சரி உடுப்பை மாத்து பிள்ளை.... தேத்தண்ணி.....'' அப்பாவின் இயல்பான உபசரிப்பு.

''தேத்தண்ணிக்கு இப்ப அவசரம் இல்லை... நாங்கள் இப்ப வெளிக்கிடுறம்...'' எனக்கு விடயம் விளங்கி விட்டது. அப்பாவுக்கும் விளங்காமல் இல்லை. 'எங்கை' என்ற மாதிரி பார்க்கிறார் அப்பா. ஓம் அப்பா, கொஞ்ச நாளைக்கு நீங்கள் இங்கை இருக்க ஏலாது. இப்பிடி அங்கையும் இங்கையும் ஓடவும் பதுங்கவும் உங்களுக்கும் ஏலாது.''

அது ஏலும் என்கின்ற மாதிரி ஒரு பார்வை; அப்பா தான்.

''தம்பி தானே பாவம் அப்பா.... அவன் வேலைக்கும் போக ஏலாமல் ....''

''அவனைத்தானே அங்கினை போய் இருக்கச் சொன்னனான்.''

''உங்களை விட்டிட்டு அவன் எப்பிடி அங்கை போய் இருக்கிறது. நானே இவ்வளவு தூரத்திலையிருந்து இருக்கேலாமல் வந்திருக்கிறன்.....''

மெள்ள மெள்ள இடைவினை நடக்கிறது. அக்காவின் அன்பு, ஏற்கனவே என்னால் இளக வைக்கப்பட்ட அப்பாவின் மனதை மேலும் கனியச் செய்திருக்க வேண்டும். தம்பிக்காக தற்காலிகமாக வீட்டை விட்டுக் கிளம்பும் முடிவு ஒரு டினதாக நிறைவேறுகின்றது. திருநெல்வேலியில் வீடு பார்த்தல்; 'வேன்' பிடித்தல்; சாமான் ஏற்றுதல் எல்லாம் பாதிப் பொழுதில் அவசரம் அவசரமாக நடந்தது.

அப்பாவுக்குத் தந்த வாக்குறுதியின்படி மிகவும் அடிப்படையான சாமான்களை மட்டும் கொண்டு செல்வது என்பதால், இந்த ஏற்றுமதி இறக்குமதி சிரமமாய் அமையவில்லை.

பிரியாவிடை சீன்.... வீட்டோடை கிளம்பும் போது பப்பிக்கு விடயம் புரிந்திருக்க வேண்டும். உச்சஸ்தாயியில் குரைத்து அழுகின்றது. ''தம்பி இதையும் கொண்டு போவமே....'' அம்மாவின் ஆலோசனை, எனக்குக் கூட மனதை நெருடினாலும், இப்ப இந்த சாமானுகளோடை கஷ்டம் அம்மா. பிறகு வந்து பாப்பம்....''

ஒழுங்கை நெளிவுகள் தாண்டி வீதியில் மிதந்த போது ''என்னண்ணே நீங்களும் போறியளே....'' சென்றிக்கு நின்ற அந்தப் பையன் தான் கேட்டது. மக்கள் இல்லாத சுடலைக்கா இந்தக் காவல் என்ற மாதிரி அவன் பார்வை.

''நிலைமையைப் பார்த்து ரெண்டொரு கிழமையிலை வந்திடுவம், தம்பி.'' இதற்கு மேல் சொல்ல ஒன்றும் தெரியவில்லை. உயிருக்காக ஓடும் அவலம், வெட்கமாகவும் இருந்தது. அப்பாவின் மனதின் உயர்வு விஸ்வரூப தரிசனமாகிறது....

இந்தத் தரிசனத்தை குலைப்பதாய் அப்பாவின் ஓ..... வென்ற அழுகுரல் எழுகிறது. கூடவே, அம்மா, அக்கா, தங்கைச்சி மூவரும் இணைந்து கொள்கின்றனர். எனக்குச் சத்தம் வரயில்லை. கண்ணீர் தாராளமாக வந்தது. பெரியையா வீட்டை வேன் தாண்டும் வரை கூப்பிய அப்பாவின் கரம்..... இன்னும் நெஞ்சில் உதிரம் கொட்டும். அப்பாவை மட்டுமல்ல; என்னை, தங்கைச்சியை வளர்த்த 'எங்கள் வீடு அது. எங்கள் வீடு கூடப் பின்னாலே அப்பா உழைப்பில் எழுந்தது. பெரியையாவின் வீடு - எங்கள் வீட்டை விட்டு புறப்படும்போது கூட வெடிக்காத அழுகை, பெரியையா வீடு தாண்டும் போது அப்பாவுக்கு ஏற்பட்டதன் அர்த்தம் புரிகிறது.


''அழாதையுங்கோ அப்பா'' அழுதபடி எல்லோரும் ஆறுதல் சொல்லும் முயற்சியின் மௌன ஊர்வலமாய் எங்கள் பயணம். உத்தியோகபூர்வ புள்ளிவிபரப்படி இந்த நாட்டில் 22 அகதிகள் தான் என சென்ற வாரத்தில் படித்த அந்த ஆய்வறிக்கை முடிவுகள் ஒரு கணம் நினைவில் நகைத்துப் போகும். கடந்த ஒரு மணித்தியாலத்துக்கு முன் இருந்த கௌரவம்போக, அகதியான அவலம் வருத்தும்.

என்னுடைய வருத்தத்தை வெளியில் காட்டி நிலைமையை மோசமாக்காமல் யந்திரமாய் இருக்க முயல்வேன்...'' புதிய அந்த வாடகை வீட்டில் குடியேற்ற வைபவம் இத்தனை அவலத்திடையும் பால் காய்ச்சி குடிபுகும் பண்பாட்டுச் சடங்கும் நடக்கும். இந்தப் பால்தான் இரவுச் சாப்பாடு. இதனைக் கூட குடிக்க மறுத்த அப்பா... ஒரு மாதிரி எங்களுக்காக சாஸ்திரப்படிக்கு ஒரு மிடறு குடித்தது தான். அதனை விழுங்கவும் அழுகை விக்கல் விடவில்லை. வேளைக்கே படுக்கைக்குச் சென்று விட்டோம்.

நான் எழுதும் கதை முடியவில்லை. அதற்குள் அப்பாவின் ஓயாத விக்கலில் திடீரென ஒரு ஓங்குதல்- துடித்துப் பதைத்து விளக்கைத் தூண்டி, அப்பாவின் கட்டிலை நான் சேர்வதற்குள் அம்மாவின் மடியில் திடீரென அந்த விக்கலும் ஓயும்..... அப்...பா!

*************

## சொற்சிலம்பம் - போட்டி இல: 85



அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. சிறப்பானது என்பதைக் குறிக்கும்
4. திரவத்திற்கும் திண்மத்திற்கும் இடைப்பட்ட நிலை.
6. ஒரே அளவான/ ஒரே மாதிரியான
7. பருத்து இருப்பதையும் குறிக்கும்; வெடிபொருளையும் குறிக்கும்
8. ஒரே மாதிரியான நிலையைப் பேணுவதைக் குறிக்கும் சொல். தமிழர் இன்று வேண்டுவதும் இதைத்தான்.
11 ஏழ்மை நிலை அல்லது வற்றிச் சென்ற நிலை.
12. உணவுக் கால்வாயில் நடப்பது
14. மூட்டைப் பாதிக்கும் ஒரு நோய்.
16. பாராட்டுக்குரிய சொல்.
17. படிப்பு
19. இருவகைப் பாலில் ஒன்று.
20. மரத்தின் பாகம்.
21. சிறையிருப்பவன் வேண்டுவது.
22. இரத்தம்

### மேலிருந்து கீழ்

1. பிறப்பு நிகழ்வு
2. சிலப்பதிகாரத்தில் கோவலன் தந்தை
3. தங்களுடையது
4. பல வீடுகளில் காலை ஆகாரம்.
5. தள்ளாமையைக் குறிக்கும் அடைமொழி
7. நடன வகையில் ஒன்று
9. தடு/ பெண் ஆடு.
10. கட்டுப்பாட்டுக்குள் இருப்பதைக் குறிக்கும்.
13. பாட்டு
15. கட்டுப்பாடில்லாமல் கெட்டலைபவன்.
16. கடற்கரையில் காணக்கூடிய ஜந்து.
17. இது சிறிது. ஆனால் காரம் பெரிது.
18. தங்குமிடம்
19. திரவத்தைச் சூடாக்க உருவாகும்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்ட சாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 85**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 11.11.2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல. 85 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 15.11.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 83 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) பாதுகாப்பு (5)எது (7)தணிவு (8)வதனம் (10)தகனம் (12)வில்வம் (13)இல் (14)தரு (15)படு (16)முதுகு (18)உருக்கு (20)தசமி (22)கண் (23) குடும்பி (24) தண்டு.

**மேலிருந்து கீழ்**
(1)பாதம் (2)துணி (3)காவுதல் (4)புவனம் (5)என (6)தும்மல் (9)தம் (11) கவலை (12)விருது (13) இடுக்கண் (14)தமுக்கு (15)பரு (17)குதம் (18) உமி (19) குண்டு (21) சமி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 83 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — ஷாலினி பாலசிங்கம்
க.பொ.த உயர்தரம் 2010,
உடுவில் மகளிர் கல்லூரி, சுன்னாகம்.

**2 ஆம் பரிசு** — எம். சாள்ஸ்
இல: 130/1, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு** — செல்வி. சு. நிமல்சி,
புனித செபஸ்தியார் வீதி,
சில்லாலை

பரிசுக்கு உரியோராகத் தேர்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) [illegible]
இல 41, கொண்டலடி லேன், நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(2) செல்வராசா சுஜரிதா,
தியேட்டர் ஒழுங்கை, இணுவில் கிழக்கு,
இணுவில்

(3) [illegible] சதாசிவம்,
முருகையன் கோயிலடி, புலோலி வடமேற்கு,
புலோலி.

(4) செல்வி. கஜானி கிருஷ்ணகுமார்,
போக்காலை வீதி, உடுப்பிட்டி.

(5) சிஸ்டர் வி. ஷோபா,
திருக்குடும்ப கன்னியர் மடம்,
நாரந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் - அச்சுவேலி சங்கானை

# செலின்கோ இன்சூரன்ஸ்

# On The Spot!

## வலையமைப்பிற்கு தற்போது வடகிழக்கில் செலின்கோ இன்சூரன்ஸ் கிளைகள் 20!



செலின்கோ இன்சூரன்ஸ்
ON THE SPOT
உலகிற்கே ஒன்று!

CEYLINCO
VIP
ON THE SPOT
ලෝකෙටම එකයි!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராசா - பரமேஸ்வரி மணிமண்டபத் திறப்பு விழா

## 2009.11.02



காலம்:- 2009.11.02 திங்கட்கிழமை
நேரம்:- முற்பகல் 10 மணி
தலைவர்:- நடராசா சத்தியரூபன் அவர்கள்
முதல்வர், சிறிநதியா நகைமாளிகை,
ஸ்தாபகர், நடராசா- பரமேஸ்வரி
மணிமண்டபம்

பிரதம விருந்தினர்
திரு. க. கணேஷ் அவர்கள்
[அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்]

சிறப்பு விருந்தினர்
திரு.பா. செந்தில்நந்தனன் அவர்கள்
[பிரதேச செயலர், நல்லூர்]

கௌரவ விருந்தினர்கள்
பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
[முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்]
திரு. எஸ். கே.யோகநாதன் அவர்கள்
[பீடாதிபதி, யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி]

திறப்பு விழா நிகழ்வுகள்

★ பூர்வாங்க கிரியை வழிபாடுகள்
★ மங்கள விளக்கேற்றல்
★ மங்கள இசை
★ திருமுறை ஓதல்
★ மணிமண்டபம் திறந்து வைத்தல்:
பிரதம விருந்தினர் அவர்கள்
★ நினைவுக்கல் திரைநீக்கம்
★ வரவேற்புரை:
செல்வி ஸ்ரீலதா செல்லத்துரை அவர்கள்
★ தலைமையுரை:
திரு.ந. சத்தியரூபன் அவர்கள்
அருளாசி உரைகள்:
- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
[நல்லை ஆதீன முதல்வர், திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்]
- அமுதகலாஜோதி சிவத்திரு மோகனதாஸ் சுவாமிகள்
சந்நிதியான் ஆச்சிரம முதல்வர், செல்வச் சந்நிதி, தொண்டைமானாறு
★ பிரதம விருந்தினர் உரை
★ சிறப்பு விருந்தினர் உரை
★ வாழ்த்துரைகள்:
- பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- திரு. எஸ்.கே. யோகநாதன் அவர்கள்
[பீடாதிபதி, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி]
வர்ணனைக் கலாநிதி, கவிமாமணி
மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்- J.P அவர்கள்.
பணிப்பாளர், சைவத் தமிழ்ப் பண்பாட்டுப்பேரவை-
[ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம்]

கலைஞர்கள் கௌரவிப்பு
★ நன்றியுரை:
செல்வி ஸ்ரீரேகா செல்லத்துரை அவர்கள்
★ மதியபோசன விருந்து வழங்கல்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில்
ஸ்ரீ மனோன்மணி அம்பாள்
ஆலயத்துக்கருகாமையில் எமது பெற்றோரின்
ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்ட
மணிமண்டபத் திறப்புவிழாவில் கலந்து
சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன்
அழைக்கின்றோம்.

465/26, பருத்தித்துறை வீதி,
(நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள்
ஆலயத்திற்கருகாமை)
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021-3205694

திரு-ந- சத்தியரூபன் குடும்பத்தினர்
திரு- கா- செல்லத்துரை குடும்பத்தினர்.

(சி/561900)


# டி.எம்.ஐ. நிறுவனத்தின் விருது வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.01

யாழ். கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள டி.எம்.ஐ. கணனிக் கல்வி நிறுவனத்தின் விருது வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகமும், சிறப்பு விருந்தினராக யூனியன் அஷ்சூரன்ஸ் நிறுவனத்தின் வடக்கு மாகாண வலய முகாமையாளர் சி. என். மதிவதனனும் கலந்து கொள்வர். (201)


## வாடகைக்கு

பலாலி வீதியில் திருநெல்வேலியில் உள்ள வீட்டின் பெரிய வரவேற்பறை யுடன் கூடிய தனி அறை வாடகைக்கு விடப்படும். வங்கிகள், தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு-0770517494 (90333)

## Book keeping, Audit சேவை

யாழ்.நகரில் Book keeping, Audit மற்றும் VAT உட்பட சகல வரிசேவைகளும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0773746884, 0714603362 (சி/561473)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய், மெமோறியல் வீதியில் 41/2 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு-0717353524 (90286)

## காணி விற்பனைக்கு

ஆலடி, மானிப்பாய் றோட், உடுவிலில் (ஆலடி சந்தைக்கு அருகாமையில்) 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
0779519973, 0115843282,
0776855846.

## விற்பனைக்கு

மிக நல்ல நிலையில் உள்ள 3 சிறி XXXX மொறிஸ் மைனர்1000 கார் மற்றும் உதிரிப்பாகங்கள், காஸ்குக்கர் சிலிண்டர், மிக்சி, மரங்கள், நீளமேசைகள், வாங்குகள், கிளாஸ்கள், மெடிக்கல் புத்தகங்கள், நுளம்பு வலைகள் விற்பனைக்குண்டு.
115/1, அரசடி வீதி,கந்தர்மடம், யாழ்ப்பாணம்,
தொடர்பு-0779027540 (90421)


# நல்லூர் பிரதேச சபை
## சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான
# கேள்வி அறிவித்தல் - 2010

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க் காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2010 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்கழி 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 13.11.2009 நண்பகல் 12 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 16.11.2009 முற்பகல் 10மணி வரை
கேள்வி திறக்கும் திகதி: 16.11.2009 பிற்பகல் 2 மணி

1. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை *செயலாளர், நல்லூர் பிரதேசசபை, 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில்* என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

2. கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக்கொண்டு வருதல் வேண்டும்.

3. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

5. கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த, தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச் சந்தை, கொக்குவில் சந்தை என்பவற்றுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின், ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 1,500,000.00 இற்கும் ரூபா 200,000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலளாருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் சந்தைக்குரிய கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியையும் இறைச்சிக் கடைகளுக்குரிய கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 2/3 பகுதியையும் 24.11.2009 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும். மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### 2010 ஆம் ஆண்டு சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | சந்தைகள், (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை(ஏற் வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| | **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 01 | திருநெல்வேலிச் சந்தை, (துவிச் சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 15,000.00 | 6424770.00 |
| 02 | திருநெல்வேலிச் சந்தை, ஆட்டிறச்சிக்கடை | 500,00 | 5000,00 | 158813,00 |
| 03 | திருநெல்வேலிச் சந்தை, கோழி இறைச்சிக்கடை இல:1 | 500,00 | 5000,00 | 75,000,00 |
| 04 | திருநெல்வேலிச் சந்தை, கோழி இறைச்சிக்கடை இல:2 | 500,00 | 5000,00 | 75,000,00 |
| | **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 01 | கொக்குவில் குளப்பிட்டிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 10,000.00 | 315678.00 |
| 02 | கொக்குவில்சந்தை, மாட்டிறைச்சிக் கடை | 500,00 | 5,000.00 | 214429.00 |
| 03 | கொக்குவில் சந்தை, ஆட்டிறைச்சிக்கடை | 500,00 | 5,000.00 | 185548.00 |
| 04 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக்கடை | 500,00 | 5,000.00 | 331485.00 |
| 05 | கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 500,00 | 5,000.00 | 35,805.00 |
| 06 | கோண்டாவில் ஸ்ரேசனடி மரக்கறிச் சந்தையும் மாட்டிறைச்சிக் கடையும் | 500,00 | 5,000.00 | 83,276.00 |
| 07 | கொக்குவில் உப அலுவலக பலாலிவீதி ஆட்டிறைச்சிக்கடை | 500,00 | 5,000.00 | 123585.00 |

*குறிப்பு:* திருநெல்வேலிச் சந்தையில் கோழி இறைச்சிக்கடைகளுக்கான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையினால் சந்தைப்பகுதியிலிருந்து 500 m தூரத்திற்குள் கோழி இறைச்சியாகவோ உயிருள்ள கோழியோ விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
28.10.2009

(சி/561887)

மே.சாந்தசீலன்,
செயலாளர்,
நல்லூர் பிரதேசசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ் பெற்ற கிரிக்கெட் நடுவர் டேவிட் ஷெப்பேர்ட் காலமானார்

நேர்மையற்ற தீர்ப்பை ஒரு நாளும் அளித்ததில்லை என்று கூறிய உலகின் தலை சிறந்த கிரிக்கெட் நடுவராகக் கருதப்படும் இங்கிலாந்தின் டேவிட் ஷெப்பேர்ட் புற்று நோயால் காலமானார். அவருக்கு வயது 68.

3 உலகக் கிண்ணக் கிரிக்கெட் இறுதிப் போட்டி உட்பட 172 ஒரு நாள் சர்வதேச போட்டிகளிலும் 92 டெஸ்ட் போட்டிகளிலும் நடுவர் பொறுப்பாற்றிய டேவிட் ஷேப்பேர்ட் கடந்த சில நாள்களாகப் புற்று நோயால் அவதியுற்று வந்தார். இந்த நிலையில் சிகிச்சை பலனளிக்காமல் அவர் மரணமடைந்தார். ஜூன், 2005 இல் அவர் பாகிஸ்தான், மேற் கிந்திய அணிகளுக்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் கடைசியாக நடுவராக இருந்தார். அந்த போட்டி முடிந்த பிறகு பிறையன் லாரா, ஷெப்பேர்ட்டின் சேவைகளை கௌரவிக்கும் விதமாக அவருடைய துடுப்பைப் நினைவுச் சின்னமாகப் பரிசளித்தார்.




14 ஆண்டு காலம் டேவிட் ஷெப்பேர்ட் குளோஸ்டர்ஷயர் அணிக்கு விளையாடி 12 சதங்களையும் எடுத்துள்ளார்.

இங்கிலாந்தின் முன்னாள் புகழ் பெற்ற நடுவர் டிக்கிபேர்ட்டிக்கு பிறகு சிறந்த நடுவர் என்று கிரிக்கெட் ரசிகர்களிடமும், உலக அளவில் கிரிக்கெட் அணி மற்றும் வீரர்களிடமும் சிறந்த நடுவர் என்றும் பெயர் பெற்றார் டேவிட் ஷெப்பேர்ட். இவருடன் நிறைய போட்டிகளில் இணைந்து பணியாற்றிய இவரது நண்பர் டிக்கி பேர்ட், டேவிட் ஷெப்பேர்ட் உலகை விட்டு பிரிந்தது தன் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சோகமான விடயமாகும் என்று இரங்கல் தெரிவித்துள்ளார்.★


From Samudra Book Publications

New Millennium English Workbook

S.F.R.A. Cader's

Grade 1 : Suitable for beginners and students of grade 1, to acquire and grasp the basics of the English Language in Speaking, Reading and writing more effectively.




Grade 2 : This book deals with 4-5 letter words, which surrounds the activities of the primary, child-the things he does, he uses, comes across, sees, plays, observes, and learns.

Grade 3,4,5 : Those workbooks provides additional exercises on every unit of the pupil's books for grade 3, grade 4 and grade 5. Exercises have been designed to promote active participation, enjoyment and create the necessary environment in grasping the language materials in the pupil's Book more effectively.

Available at Jaffna Annai Book Shop, Poobalasingham Book Shop, & Book Lab, All Samudra Book Shop Outlets & Other Leading Book Shops Island Wide. Contact : 0718140079, 0722136711



ரூ. 2,000/- ற்கு இலவசமாக பேசுங்கள்

Dialog லான்ட் லைன் தொலைபேசியில் சந்தோஷமாக பேசுங்கள்

யாழ்நகரில் Dialog லான்ட் லைன் தொலைபேசி இணைப்பினை ரூ. 5,999/- ற்கு கொள்வனவுசெய்து ரூ. 2,000/- பெறுமதியான அழைப்புகளை இலவசமாக பெறுங்கள்.

அனைத்து Dialog வாடிக்கையாளர் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

Fixed Line

TRC/DBN/09/001(p)

Dialog






உங்களோடு எமது உறவுகளை பலப்படுத்தி,
உங்களின் அபிவிருத்திக்கு அதியுன்னத சேவையை வழங்க
நாமும் இணைகின்றோம்.

சுபிரி - பெதரேரு - ரெடி ஃப்லோ - அம்புஜா நான்கு வகை
சக்திகளோடு நாட்டை கட்டியெழுப்ப வாருங்கள்

ஹொல்சிம் சீமெந்து இப்பொழுது
வடக்கிலும், கிழக்கிலும்

தேசத்தின் மிகச் சிறந்த சீமெந்து

Holcim


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 21 . 11 . 1989

விண்ணுலகில் 01 . 11 . 2008



### அமரர் தவராசா குகேஷன்

தங்கத் திருமகனே! தலைமகனே!
தவமிருந்து நாம் பெற்ற தவக்கொழுந்தே!
தம்பியரும் உன் அருந் தங்கையும்
அண்ணா எங்கே என்று ஏங்கியே
கலங்குகின்றார்கள்
தரணியில் உயர்ந்திடுவாய் என இருக்க
விண்ணுலகம் விரைந்திட்டாய்
மின்னல் ஒளி போன்று நீ சிந்தும்
புன்னகை இன்றும் எம் கண்களிலே
வந்து வந்து போகுதையா!
ஆண்டொன்று கடந்திடினும்
ஆறாது எம் துயரம்.

என்றும் உன் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

உடுத்துறை வடக்கு,
தாளையடி.

(சி/561935)



வடமாகாண 'நொக்கியா' தொலைபேசி பிரதான முகவராக திருமுருகன் கொம் நெற் நிறுவன உரிமையாளர் க.கலாதரன் தெரிவு செய்யப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்பட்ட விழா 'புளூ ஹெவன்' ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. 'நொக்கியா' நிறுவனத் தேசிய முகாமையாளர் ராஜீவ் குணரட்ண, க.கலாதரனுக்கு அங்கீகாரப் பத்திரத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## மரண அறிவித்தல்



### பொன்னுத்துரை இரத்தினசபாபதி (மாணிக்கவாசகர்)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இரத்தினசபாபதி 31.10.2009 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.ரவீந்திரன் (மகன்).
நீராஜா வீதி, கொக்குவில் மேற்கு.
(90500)


### காணி விற்பனைக்கு

கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலிலுள்ள 6½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகட்கு: 077543682

### இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட்ஸ், முட்டை என்பன மலிவான விலையில் வேண்டிய அளவுகளில் எந்த நேரமும் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும்.

தொடர்பு:- நல்லூர் பாம் சென்ரர்,
61,இராமநாதன் வீதி, நாச்சிமார் கோவிலடி, 0217912783
(90479)

### இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட்ஸ், தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூரர்.
(90458)

### விற்பனைக்கு

8" சுற்றளவுள்ள 150 அடி நீளமான தேர் வடம், மணவறை மணி, மணவறை தயாரிக்கும்பூ விற்பனைக்குண்டு.

258, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்


## மூன்றாம் ஆண்டு நினைவு நாள்

### அமரர் திருச்செல்வம் சுரேந்திரன்

தோற்றம்:08.05.1968 மறைவு:01.11.2006

கீழ்வானம் சிவக்கும்முன் காற்றோடு வந்த செய்தி
கேட்டுப் பதறியது எம் இதயம்
குடும்பத்தில் மூத்தமகனாக வந்துதித்த எம் அன்பு மகனே!
கள்ளமில்லா உள்ளம் கொண்ட எம் அன்பு அண்ணா!
இன்முகத்துடன் இனிமையாகப் பேசி மகிழவைக்கும்-அன்பு
கணவராக-இருமழலைகளுக்கும் பிரியமான அப்பாவாகத்
தரணியில் இன்பத்துடன் வலம் வந்தவர்-இன்று
படைத்தவர் உங்களை அழைக்கத் துடிக்கும்போது
படைப்புக்கள் நாம் என்செய்வோம்.

"அது கர்த்தரால் ஆயிற்று-அது
நம்முடைய கண்களுக்கு
ஆச்சரியமாயிருக்கிறது"
(சங்கீதம் 118-23)



உமது பிரிவால் ஏங்கும்:
பெற்றோர், சகோதரர்,
மனைவி, பிள்ளைகள்
12/15, கெனடி வீதி,
நாவாந்துறை.

(90488)

# மரண அறிவித்தல்

## செல்வன் குகேஸ்வரன் லக்ஸ்சன்



இலக்கம் 24, முஸ்லிம் கல்லூரி வீதி, கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யா/புனித மரியாள் வித்தியாலய மாணவன் செல்வன் குகேஸ்வரன் லக்ஸ்சன் 29.10.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் குகேஸ்வரன்- ஜெயந்தி தம்பதியரின் அன்புப் புதல்வனும் ஹர்சாயினி, கஜருபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசரட்ணம் (சந்திரன்-J.T.சாரதி), மகேஸ்வரி, காலஞ்சென்ற இராசதுரை மற்றும் தனேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனும் சதீஸ்வரன், மதீஸ்வரன், ஜெய்சங்கர், பட்டு, தவராசா, ரஜனி, ராகினி, சுகந்தி, வட்சலா (விசி), தேவமலர், கவிதா, சத்தியபாமா ஆகி யோரின் பெறாமகனும் கஜேந்திரன், முரளிதரன், யோகலிங்கம், அகிலா ஆகியோரின் மருமகனும் யசிந்தி, நவலோஜினி, மானுஷா, துஷாந், கபிஷன், அபிஷாயினி, பானுஜா, கிருஷா, ஜீவிதா, நிஷாந், பிரியங்கா, கிஷாந்திகா ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக வில்லூன்றி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், சிநேகிதர்கள், பாடசாலைச் சமூகத்தினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.24, முஸ்லிம் கல்லூரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு, கேது மாற்றத்தால் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்களைப் படியுங்கள்

நவக்கிரகங்களுள் எவருடைய கண்ணுக்கும் எந்தவகையிலும் தென்படாது சாயை வடிவமாக தமோகிரகங்கள் என் னும் ராகு, கேதுக்கள் கிரக மண்டலத்திலே பன்னிரண்டு இராசிகளை ஒன்றரை வருடங்களுக்கு ஒருமுறையாக மற்றைய கிரக சுற்றோட்டத்திற்கு எதிர்மாறாகச் சுற்றிவருகின்றன. அப்படிச் சுற்றிவரும் இவர்களுக்கு ஏனைய ஏழு கிரகங்களுக்கு இருப்பது போன்று சொந்த வீடு இல்லை. ஆனாலும் 12 இராசிகளில் மேடம், இடபம், கடகம், கன்னி, மகரம் ஆகிய இராசிகளில் வரும் போது உலகத்திற்கும் ஆன்மாக்களுக்கும் நன்மையைத் தருவார்கள். எனவே இந்த ராசிகளில் ராகு இருக்க பிறந்தோருக்கு மிகநல்ல பலனைத் தரு வார்கள். இதையே ராகுதரும் யோகமென நம்முன்னோர்கள் சோதிட ரீதியாக எடுத்தியம்பியுள்ளனர்.

*ஆமேடம் எருதுசுற நண்டு கன்னி*
*ஐந்திடத்தில் கருநாகம் அமர்ந்துநிக்கில்*
*பூமேடைதனில் துயிலும் இராஜயோகம்*
*போற்றிடுவர் வேறு இன்னம் புகலக் கேளாய்*
*ஏமாறாதே நான்கு கேந்திரத்தும்*
*இடைவிடாமாற் கிரகம் இருந்தாகில்*
*தேமேவு பர்வதமாம் யோகமாகும்*
*சீமான் ஆகுவான் ராஜயோகஞ்செப்பே*

மேலும் ராகுகேதுக்கள் தாமிருந்த இராசி அதிபதியினுடையவும், தன்னுடன் சேர்ந்த கிரகத்தினுடைய சுபாவத்திற் கேற்றவையுமான பலனையும் தருவார்கள். இதையே-

*"ராகுவைப்போல கொடுப்பாரு மில்லை*
*கேதுவைப் போல கெடுப்பாரு மில்லை"*

என்று சோதிட அறிஞர்கள் கூறிவைத்துள்ளனர்.

கடந்த 28.10.2009 இல் மிதுன ராசியில் கேதுவும் தனுசு ராசியில் ராகுவும் சஞ்சரித்தது. இந்த ராசிக்குரியவர்களது சந்திரனுடன் (பாம்பு) ராகு,கேதுக்கள் சேர்ந்துவிட்டன என்பதாகும். சந்திரனை ராகு, கேது என்ற பாம்புகள் பிடிப்பதையே சந்திர கிரகணம் என்கின்றோம்.

சந்திரன் என்பது இரத்தம், சதை, ரோமம் கொண்ட உடம்பைச் சுட்டிக்காட் டும் பொருளாகும். இதையே சரீரம் என்கின்றோம்.

அத்தகைய சரீரத்தில் பாம்பு தீண்டினால் எப்படி விஷம் உண்டாயிற்றோ அப்படியான தன்மையில் குறித்த மிதுனம், தனுசு இராசிக்காரருக்கு 28.10.2009 இல் இருந்து அடுத்து ஒன்றரை வருடங்கள் விஷநீர் ரோகங்களும், வாதம், நரம்பு சம் ந்தப்பட்ட சுகயீனங்களும், தாய், தாய் வழிக்கு கஷ்ட துன்பங்களும் ஏற்பட வாய்ப்புண்டு. மேலும் ஒருவர் பிறந்த ராசியான சந்தி ரன் நின்ற வீட்டிற்கு 5,9,10,11 இல் ராகு இருக்கப் பிறந்தவர்களுக்கு பிறந்த நாள் தொடக்கம் வாழ்நாள்வரை மகாதன யோகத்துடன் வாழ் வார்கள் என்பது சோதிட விதி யாகும்.

மற்றும் சந்திரன் நின்ற ராசிக்கு அல்லது லக்கினத்திற்கு 3,6,11இல் ராகு இருந்தால் தீர்கக ஆயுள் பெற்று சீவிப்பர் என்பதும் சோதிட ஆய்வுக் கூற்றாகும்.

எனவே 18.10.2009ல் தனுசு ராசியில் ராகுவும், மிதுனராசியில் கேதுவும் இருக் கும் போது ஜனனமான சிசுவுக்கும் வருங் காலத்தில் அடுத்து ஒன்றரை வருடத் திற்குள் பிறக்க இருக்கும் சிசுக்களுக்கும் லக்கினம் அல்லது சந்திரன் இருக்கும் இடத்திற்கு 3,5,6,10,11இல் ராகு இருப்ப தானால் பெரிதான யோகமான பலனைத் தராவிட்டாலும் தீங்கை ஏற்படுத்தாத பல னாக அமையும்.

28.10.2009 இல் ராகு,கேது மாற்றத் தால் எந்த ராசிக்குரியவவர்களுக்கு நற் பலன் உண்டு?

மேடராசிக் குரியவர் களுக்கு 9ஆம் இடத்தில் ராகு வந்தபடி யாலும் ஏற்கனவே சனி பகவானும் 6இல் இருப்பதாலும் நற்பலனையே தருவார். மேலும் அடுத்து ஒன்றரை வருடங்கள் பண வரவு, தொழில் சிறப்பு என்பன தருவதுடன் மாணவர்களுக்குக் கல்வியில் நற்ப லனும் உண்டு.




அட்டமத்தில் ராகுவும் 2 இல் கேதுவும் இருப்பது குடும்ப ரீதியாக அதிக சுகத்தை எதிர்பார்க்க முடியாது.




இடமாற்றமும். அலைச் சலும் உண்டு. 2010ஆம் ஆண்டு முடிய நற்பலன் ஆரம்பிக்கும். மாணவர்களுக்கும் கல்வியால் நற் பலன் உண்டு.




தாய், தாய்வழிக்கு கஸ்ரங்கள், இரத்தம் கெடக் கூடிய சுகயீனங்களும் சிகிச்சையும் பெறவாய்ப் புண்டு. விஷத்தால் பீடை ஏற்படவும் வாய்ப்புண்டு.

திருமணத்தை எதிர்ப் பார்பவர்களுக்கு 2010 ஆம் ஆண்டு நன்மை தர இடமுண்டு. ஆதனம், பூமியால் சுகமிராது. தொழில் செய்பவர்களுக்கு சமபலனே உண்டு.




6 இல் ராகு வந்தபடியால் உடல் நலம் மற்றும் வழக்கு வம்புகளால் வெற்றியும், ஆள்அடி மைகள் வைத்து தொழில் செய்வதில் நற்பலனும், தொழில் செய்வோருக்கு அதிகாரிகளால் பாராட்டும், உயர்ச்சியும், நற்பலனும் உண்டு.மேலும் சனி 3 இல் இருப்பது நன்மைதரக் கூடிய பலனாகும். திருமணத்தை எதிர்பார்பவர்களுக்கு 2011 வரை கார்த்திருக்க வேண்டும்.

இவர்களுக்கு ஏற்கனவே ஏழரைச் சனி பகவான் கடைக்கூறில் இருப் பதும்5 இல் ராகு இருப் பதும் அடுத்து ஒன்றரை வருடம் சமபலன் தரக் கூடிய காலமாகும். 2010 ஆம் ஆண்டு இவர்களுக்கு குடும்ப சுகம் வெற்றி தரக் கூடிய காலமாகும். மேலும் திருமணத்தை எதிர்ப்பார்பவர்களுக்கு திருமணம் கண்டிப்பாக உண்டு. தொழிலாலும், வருமானத்தாலும் சிறப்ப டைவர்.




ஆனாலும் வயிற்றுடன் கூடிய சுகயீனங்களும், சிகிச்சையும் ஏற்பட இடமுண்டு.




இவர்களுக்கு ஏழரைச் சனி பகவானுடைய நடுக் கூறுக் காலமாக இருப்பதுடன் ராகு 4 இல் வந்தபடியாலும் ஆதனம், வீடு, உடைமை சம்பந்தமான பிணக்குகளும், தொழில் செய்வோர்க்கு சம பலனும் உண்டு. 2010 ஆம் ஆண்டு முடியும்வரை எதிர்நீச்சலாகும். வாகனம், நாற்கால் மிருகம், உடைமை, சொத்து இப்படியானவை அடுத்து ஒன்றரை வருடம் நன்மை தர இடமில்லை.





3 இல் ராகு இருப் பதும் 9 இல் கேது இருப் பதும் நன்மை தரக் கூடிய பலனாகும். ஆனாலும் இவருக்கு 2010 ஆம் ஆண் டிலிருந்து பணம், பொருள், வரவு, புத்தி ரசுகம், மாண வர்களுக்கு கல்வியில் நற்பலனும், உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு மற்றும் தொழில் வாய்ப்பு, கடல் பிரயாண சுகமுண்டு.




2 இல் ராகுவும் 8 இல் கேதுவும் இருப்பது குடும்ப ரீதியாக சுகம்பெற முடி யாது. காது,கண், மூக்கு சம்பந்தப் பட்ட சுகனங்களும் சிகிச் சையும் பெற வாய்ப் புண்டு. குடும்பஸ்தர்களுக்கு எதிர் நீச் சலான காலமாகும். 2011 ஆம் ஆண்டு வரை சமப லனையே எதிர்பார்க்க வேண்டும்.

தனுசு ராசியுடன் ராகு சேர்ந்த படியால் உடல் நிலையில் கவனம் எடுக்க வேண்டிய காலம். திருமண சுகம் கிடைக் காது. தாய், தாய் வழிக்கு நற்பலன் கிடைக்காது. மாண




களுக்கும் சமபலனே உண்டு. திருமணத்தை எதிர்பார்த் திருப்பவர்களுக்கு அடுத்து ஒன்றரை வருடம் ஏமாற்றம் அல்லது தள்ளிப்போகக் கூடிய பலன் உண்டு. கடல் பிரயாணம் போன்றவை கால தாமதம் தர இடமுண்டு.







12 இல் ராகுவும்,6 இல் கேதுவும் வந்த படியா லும் அட்டமத்து சனிபக வான் கழிந்து 9 இல் வந்த படியாலும் அடுத்து ஒன் றரை வருடம் கூடாதென்று சொல் வதற்கில்லை. மறதி, மயக்கம், தலை வருத் தம் இப்படி ஏற்பட வாய்ப்புண்டு.

மேலும் 2010ம் ஆண்டு உத்தியோக

**கு. சண்முகரத்தினம் - ஜே.பி**
**சோதிடர் (சங்கானை)**

ஸ்தர், மாணவர்கள் எல்லோருக்கும் நற்பலன் தரும் கால மாகும்.

திருமணத்தை எதிர்பார்ப்பவர்களுக்கு திருமணம் உண்டு. கடல் கடந்த நாடு செல்லவும் பலன் உண்டு.




இவர்களுக்கு அட்டமத்து சனி வந்துள்ள படியாலும் ராகு 11ஆம் வீட்டிலும் கேது 5 ஆம் வீட்டிலும் இருப்பது சமபலன்தரக் கூடிய நிலை அடுத்து ஒன்றரை வருடங்களுக்கு உண்டு.

மேலும் 2011 ஆம் ஆண்டுவரை எதிர் நீச்சலாகும். 11இல் ராகு இருப்பது பண வரவு, செல்வாக்கு இருந்தாலும் அட்டமத்துச் சனி செலவையே தருவார். தொழிலாளர்களுக்கு சமபலனும் மாணவர்களுக்கு கல்விநிலை மந்தமாகவும் இருக்கும்.




இவர்களுக்கு 10இல் ராகு வந்திருப்பது தொழில் மாற்றம் அல்லது புதிய தொழில் உண்டு.

உத்தியோக உயர்வை எதிர்பார்ப்பவர்களுக்கு உயர் நிலை உண்டு. மாணவர்களுக்கு கல்வி நிலை சமபலனாகும். வாகனம், ஆதனம் சம்பந்தப்பட்ட பிணக்குகள் ஏற்படும். அவை சம்பந் தப் பட்ட செலவினமும் உண்டு.

மேலும் ராகு, கேதுக்களுடைய பலனை உங்கள் ஜாதகத்தில் நின்ற பலனுடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

உதாரணத்திற்கு ஒருவருக்கு பிறந்த ஜாதகத்தில் கன்னி ராசியில் ராகு இருந்து ராகு திசையும் நடப்பதால் அந்த திசை காலத்தில் பதினெட்டு ஆண்டுகளும் நற் பலனையே எதிர்பார்க்கவேண்டும்.

அக்காலப் பகுதிக்குள் 28.10.2009 இல் ராகு தனுசு ராசியில் நன்மைதராத இடத்தில் இருந்தாலும் திசாநாதனுடைய காலப் பகுதிக்கு குந்தகம் இல்லாத பலனையே தருவார்.

இலங்கை ராசியான கும்பலக்கினத் திற்கு ராகு, கேது மாற்றம் 28.10.2009 இலிருந்து நற்பலனையே தரும்.

காரணம் லக்கினத்திற்கு 11ஆம் வீட்டில் ராகு இருப்பது அடுத்து ஒன்றரை வருடம் லாபம், சுகம் தரும் காலமாகும். ★

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும்மங்களகரமான விரோதி வருடம் ஐப்பசி 15 ஆம் நாள் (01.11.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 7.32 மணிமுதல் 9.30 மணிவரையுள்ள இடப இலக்கினமும் அமிர்தசித்த யோகமும் கூடிய முகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| திரு.திருமதி தங்கவேல் | திரு.திருமதி செல்வராஜா |
| தம்பதிகளின் புத்திரன் | தம்பதிகளின் புத்திரி |
| திருநிறைச் செல்வன் | திருநிறைச் செல்வி |
| **பிரசாத்** | **தயாளினி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |



குருவருளும், திருவருளும் கைகூட அன்பும் அறமும் சேர சுற்றமும் நட்பும் சூழ ஸ்ரீ மாதுமையம்பாள் சமேத திருக்கோணேசப் பெருமாள் துணைகொண்டு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய திருக்கல்யாண மண்டபத்தில் கன்னிகாதான திருமாங்கல்யதானம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் இஷ்டமித்திர பந்துக்கள் சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து பிரதான வீதியில் அமைந்துள்ள "பிருந்தாவனம்" கல்யாண மண்டபத்தில் நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து வைபவத்தைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்:

| | |
|---|---|
| திரு.திருமதி தங்கவேல் | கு.இராசலட்சுமி, செ.பிரதீபன், |
| 61, ஆசிரியர் சதுக்கம், உவர்மலை, | செ.கதிர்காமநாதன், செ.ரிஷாந்தன், |
| திருகோணமலை. | இல.08, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, |
| தொ.பே: 026 222 1638 | யாழ்ப்பாணம். |

(இருவீட்டார் அழைப்பு). (90489)

**கூரியர் சேவை**
**ARRUL GLOBAL EXPRESS**
T.P : 0212226113
Mail : arrulgex@gmail.com
இல. 01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.

உலகின் முதற்தரமான கூரியர் சேவை நிறுவனத்துடன் இணைந்து 220 க்கு மேற்ப்பட்ட நாடுகளுக்கு நேரடியாக சேவையினை வழங்குகின்றோம்.

அனுப்பப்படும் பொருள் சென்றடையும் வரையான விபரங்களை கையடக்க தொலைபேசியிலிருந்தே அறிந்து கொள்ளும் வசதி.

Express, Economic, Normal சேவைகள்
U.S.A , CANADA
மிகக்குறைந்த கட்டணம்
(3 நாள் சேவை)

முகவர் நிலையங்கள் : - சபா பல்பொருள் வாணிபம் - அச்சுவேலி, யாழ் பான்சி - மலாயன் கபே முன்பாக , பெரிய கடை, யாழ்ப்பாணம்.
அனைத்து நாடுகளுக்கும் முன்கூட்டியே நேரம் குறித்து பொருட்கள் ஒப்படைக்கப்படும்.
( TDD Service )

**மங்களகரமான புதிய கட்டடத் திறப்பு விழா**
**முத்தொளி வீடியோ படப்பிடிப்பாளர்**





விரோதி வருடம் ஐப்பசித் திங்கள் 16 ஆம் நாள் நாளை (02.11.2009) திங்கட்கிழமை முற்பகல் 9.31 மணி தொடக்கம் 10.50 மணி வரையுள்ள சுபவேளையில் பலாலி வீதி, கோண்டாவில் டிப்போவுக்கு முன்பாக அமைக்கப்பட்ட முத்தொளி வீடியோ படப்பிடிப்பாளர் என்னும் புதிய ஸ்தாபனம் மங்களகரமாகத் திறந்து வைக்கப்படுகின்றது என்பதனை எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பிரதான கிளை,
பலாலி வீதி, கோண்டாவில். (90492)

முத்தொளி வீடியோ,
தில்லையம்பதி, கோண்டாவில். தொ.பே: 0213008492.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக விஞ்ஞான தினத்தை ஒட்டிய கண்காட்சி; இன்றும் நாளையும் யாழ். மத்திய கல்லூரியில்

யாழ்ப்பாணம், நவ.1

உலக விஞ்ஞான தினத்தையொட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் விஞ்ஞானக் கண்காட்சியும் விற்பனையும் நடைபெறவுள்ளன.

காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக விஞ்ஞான தொழில் நுட்ப அலுவலர் எஸ். சுதர்சன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸவிதாரணவும் கௌரவ விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (1-86)

## கண்ணீர் அஞ்சலி



### செல்வன் குகேஸ்வரன் லக்ஷன்

(மாணவன் தரம் - 4, அன்போளி கல்வியகம்)

நேற்றுச் சிரித்தபடி நிசமாய் இருந்த லக்ஷா
நீயின்றி உன் வகுப்பு இன்று வெறிச்சோடிப் போனதடா
அரும்பாகி மலரும்முன்னே கருகிய மொட்டாகி
கண்ணிமைக்கும் நேரத்தில் கனவாகிப் போனாயே!

கொட்டடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் குகேஸ்வரன் லக்ஷன் 29.10.2009 வியாழக்கிழமை காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும், அம்மா, அப்பா, சகோதரர், உறவினர் மன அமைதிபெறவும் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
(சி/562058) அன்போளி கல்வியகம், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



நெடுந்தீவு மேற்கு சனசமூக நிலைய முன்னாள் தலைவரும் கேம்பிறிஜ் கல்வி நிலைய இயக்குநரும் தற்போது யாழ். பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகவும் கடமையாற்றிய

### கந்தையா சுபாகரன்

அவர்கள் காலமாகிய செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முன்னாள் உபதலைவர், செயலாளர்,
நெடுந்தீவு மேற்கு சனசமூக நிலையம்.
(90505)


## New Medi Care Hospital

New Medi Care Hospital

இல.32, கச்சாய் வீதி, சாவகச்சேரி. தொ.பே.: 021 3734505

தென்மராட்சிக்கு ஓர் வரப்பிரசாதம்

எங்கும் செல்லவேண்டிய அவசியமில்லை
உங்கள் காலடியில்

நியூ மெடி. கெயர் வைத்தியசாலை

நாளை (02.11.2009) திங்கட்கிழமை நண்பகல் 12.06 முதல் 7 மணி வரை உள்ள சுபநேரத்தில் வைத்திய கலாநிதி எஸ். ரவிராஜ் (சத்திரசிகிச்சை நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை), உயர்திரு செ.ஸ்ரீநிவாசன் (பிரதேச செயலர், சாவகச்சேரி) ஆகிய இருவரினாலும் திறந்து வைக்கப்படுகிறது.

நவீன வசதியுடன் கூடிய
குளிரூட்டப்பட்ட வசதி

24 மணி நேர MBBS சேவை
வைத்திய நிபுணர்களின் ஆலோசனை சேவை.
அதி நவீன கணனி மயப்படுத்தப்பட்ட இரத்த, சல பரிசோதனை ஆய்வு கூடம்

ஸ்கான், ECG,

சலரோகம், இருதய நோய், பிரசர், மூட்டு நோய்களுக்கான கிளினிக்

கர்ப்பவதிகளுக்கான கிளினிக்
பல் பிடுங்குதல், கட்டுதல், அடைத்தல், கிளிப் போடுதல், முழுமையான கண் பரிசோதனை
கண்ணாடி வழங்குதல்

முதல் 7 நாள்களுக்கு (02.11.2009 – 08.11.2009) வரை பார்வையிடப்படும் நோயாளர்களுக்கு வைத்தியர்களுக்கான கட்டணம் அறவிடப்படமாட்டாது.
சில இரத்த, சல சோதனைகளும் இலவசமாக செய்யப்படும்.

சிற்றி சென்ரர் (சண்றைஸ் றேடஸ்)
உரிமையாளர் - ரி.குகரூபன்,
வைத்தியர்கள், ஊழியர்கள். (90513)



## Computer personal Classes

Ms Office, Page maker, Photoshop, Corel Draw, ICT, GIT, INTERNET & E-MAIL ஆகியன உங்கள் வசதிக் கேற்ப வீடுகளுக்கு நேரடியாக வந்து கற்பிக்கப்படும். அத்துடன் Hardware Repairing & Servicing செய்து கொடுக்கப்படும்.
T.P : 0778070662, 0776158090



## தேவை

யாழ் நகரில் ஆரம்பமாகவிருக்கும் மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையத்திற்கு பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு - VISION CARE OPTICAL
17, Palaly Road, Jaffna. T.P - 0772395775



## மூக்குக் கண்ணாடி விற்பனை

சிறுவர்கள்,பெரியோர்களிற்கான நவீன டிசைன் மூக்குக் கண்ணாடிகள் மிகவும் குறைந்த விலையில் கண் பரிசோதித்து வழங்கப்படும்.
தொடர்பு - VISION CARE OPTICAL
17, Palaly Road, Jaffna.



## வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு PAGE MAKER, CORELDRAW,PHOTOSHOP நன்கு தெரிந்தவர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் உடன் தொடர்பு கொள்ளவும், கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.
Computer World, 7 ஆம் கட்டை, சங்கானை
தொ.பே. : 0215100616, 0213210760



## மலிவு விற்பனை

வெற்றிக்கு வழி 20 வருட O/L இறுதிப் பரீட்சை வினாக்களின் அலகுரீதியான தொகுப்பு
மீட்டலுக்கு உகந்தது
இல.63, குமார சாமி வீதி, கந்தர்மடத்தில் தினமும் 4 pm - 6 pm வரை விற்பனையாகிறது.
பகுதி - 1 - 50/=, பகுதி - 11 - 75/=
கு.சிறிகணேஷ் தொ. இல - 0718285807



## தேவை

தொழில்நுட்பவியலாளர் (Technician), A/L Science படித்தவர்கள் தங்கள் Bio Data வை எமது நிறுவனத்திற்கு அனுப்பவும்
சிறுகுறிஞ்சா இலை தேவை
தனி இலை 1 கிலோ 50/=
தண்டுடன் இலை 25 /=
கொண்டு வருபவர்களுக்கு மட்டும்.
Bio Tec, 191/2, பலாலி வீதி,
திருநெல்வேலி.


## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.1

யாழ்.மாவட்ட ஒப்பந்தகாரர்களுக்கான நிர்மாண ஒப்பந்த வேலைகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆனைப்பந்தியில் அமைந்துள்ள நிர்மாண ஒப்பந்தகாரர்கள் சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கு சகல ஒப்பந்தகாரர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்க நிர்வாகம் அறிவித்துள்ளது. (204)

## அடிக்கல் நடும் விழா

யாழ்ப்பாணம், நவ.1

கோப்பாய்வடக்கு சாந்தி துர்க்கை ஆலயத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் 12 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது. (201)


நாட்டின் பிரபல்ய உற்பத்திகளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் எமது நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை போன்ற இடங்களுக்கு முகவர்கள் தேவை.
0777 374 375 FORESIGHT



## கணனி விரிவுரையாளர் தேவை (IT INSTRUCTORS)

கொழும்பை தலைமையகமாகக் கொண்ட யாழ்ப்பாணத்தில் இயங்கும் கணனி தகவல்தொழில் நுட்ப நிறுவனத்திற்கு அனுபவமிக்க பகுதிநேர கணனி விரிவுரையாளர் (IT INSTRUCTORS) உடனடியாகத் தேவை.

கீழ்காணும் விலாசத்திற்கு இன்றும், நாளையும் நவம்பர் 1ஆம்,2ஆம் திகதிகளில் மு.ப 10.00 மணி தொடக்கம் பி.ப 4.00 க்கும் இடையில் நேர்முகப் பரீட்சைக்கு ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.

உதயன் பனிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:0215676666, 0714325000


## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை சின்னையா

(ஓய்வு பெற்ற விரிவுரையாளர், விவசாயப் பாடசாலை, குண்டசாலை)



தையிட்டியைப் பிறப்பிடமாகவும் கலிபோர்னியாவையும் ரொறன்ரோவையும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சின்னயா கடந்த (24.10.2009) சனிக்கிழமை கலிபோர்னியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சபாபதிப்பிள்ளையின் பாசமிகு வளர்ப்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கமலரின் அன்புக் கணவரும், சுமித்திரா (லண்டன்), சுகுமார் (கலிபோர்னியா), பிறேமகுமார் (பிரான்ஸ்), சித்திரா (கனடா), ராஜகுமார் (கிரனடா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், ஆறுமுகதாசன் (லண்டன்), ஜமுனா (கலிபோர்னியா), சுமதி (பிரான்ஸ்), சிவதர்ஷினி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான முத்தையா, சீனிவாசகம், செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரணவன் (லண்டன்), அஸ்வின் (கலிபோர்னியா), ராகுல் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு 1702, Fainbaven Avenue-Santa Ana, California, U. S. A என்னும் முகவரியில் நடைபெற்று. ந.ப. 12 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
சுகுமார் (ஐக்கிய அமெரிக்கா) (90504) தகவல்:
தொலைபேசி +19496538575 சுகுமார் (கலிபோர்னியா).

### அந்தோனிப்பிள்ளை நோயல்



யாழ்ப்பாணம், இல.9, மருதடி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை நோயல் (31.10.2009) அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி அந்தோனிப்பிள்ளை - தவமணி தம்பதியினரின் அன்பு மகனும், இராசையா மற்றும் காலஞ்சென்ற யோகம்மாவின் அன்பு மருமகனும், கிருஜாவின் அன்புக் கணவரும், சுரேஸ்குமார் (டினா, பாதுகாப்பு உத்தியோகத்தர், Mercantile Security Service), சசிக்குமார் (சசி - பிரான்ஸ்), விஜயகுமார் (விஜே - இத்தாலி), ஷிரோமி (ஆசிரியை, பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், டென்சியா, றஜனி ஆகியோரின் மாமனாரும், ஷர்வின், வர்ஷன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் காணான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.9, மருதடி வீதி, தகவல்:
நல்லூர், யாழ்ப்பாணம். மனைவி, பிள்ளைகள். (90510)

### திருமதி அப்புத்துரை ஞானமணி



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் தற்போது நீர்வேலியில் வசித்து வந்தவருமாகிய அப்புத்துரை ஞானமணி நேற்று (31.10.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரையின் (மலேசியா - பென்சனியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சத்தியநாதன் (முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர், யாழ்ப்பாணம்) மற்றும் பரமேஸ்வரி (பேபி), காலஞ்சென்ற ஞானேஸ்வரி மற்றும் சற்குணம் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான அம்பிகாரட்ணம், பாலகிருஸ்ணன் (R.M.P) மற்றும் தம்பிராசா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் துஸ்கந்தன் (கட்டார்), பாலஸ்கந்தா (லண்டன்), செரூபினி (லண்டன்), ஞானதர்சினி (கனடா), சயந்தன் (அவுஸ்திரேலியா), நிறஞ்சலா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பேர்த்தியும் ஆர்த்திகா, ஆரண், அறிஷ், எடுதன், எறிண், ஈஸ்வரி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11:2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசாமிகோயில் வீதி, தகவல்: பா.பரமேஸ்வரி
நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (90506) (பேபி - மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நேற்று நடைபெற்ற 'குருதிக்கொடையாளர் கௌரவிப்பு' நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி இ.சிவசங்கர், பிரதம விருந்தினர் மேல்நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா, சிறப்புவிருந்தினர்களான வடமாகாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், 'எக்ஸ்போ எயார்' முகாமையாளர் கே.வசீகரன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திற் காணலாம். 'உதிரம்' சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்படுவதையும் பிரதம விருந்தினர் குருதிக்கொடையாளி ஒருவருக்கு சின்னம் சூட்டுவதையும் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஒருவருக்கு பதக்கம் அணிவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். *(படங்கள்: தமிழரசன்)*

# பிறந்தநாள் வாழ்த்து

## செல்வி ஹம்சாஜினி சிறிரங்கநேசன்

அல்வாய் தெற்கு 'தங்கத்தாமரையைச்'' சேர்ந்த சிறிரங்கநேசன்-ஜெயந்தினி தம்பதியினரின் செல்வப் புதல்வி ஹம்சாஜினி இன்று (01.11.2009) ஞாயிற்றுக்கிழமை தனது இரண்டாவது பிறந்தநாளை கொழும்பில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, ஐயா, இஞ்சா அம்மம்மா, அம்மப்பா, அன்ரா, அப்பம்மா, ஆசையப்பா, அத்தை, கனடா பெரியப்பா குடும்பம், இத்தாலி அத்தை குடும்பம், தாத்தா, பாட்டி, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், பெரியத்தான், அத்தான்மார், மச்சிமார், அண்ணாமார், அக்காமார் ஆகியோர் அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் அருளால் பல்கலைகளும் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

பொன் அகம், அல்வாய். க.தங்கவேல் (ஐயா).

(சி/562050)

# பருத்தித்துறை ப.நோ.கூ. சங்க கட்டடத் திறப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், நவ.1

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அத்தியடிக்கிளை இலக்கம் 18 இற்கு பருத்தித்துறை கல்லூரி வீதியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.சந்திரதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் கலந்துகொண்டு சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டித் திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் இரா. வரதீஸ்வரன், யு. என். டி. பி. நிறுவன அலுவலகத் தலைமை அதிகாரி கு.வி. நிசாந்தன், மக்கள் வங்கி பருத்தித்துறை கிளை முகாமையாளர் மு.சிவனேசன், பருத்தித்துறை நகராட்சி மன்றச் செயலாளர் அ.நடராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக ஈ.பி.டி.பியின் வடமராட்சிப் பிரதேசப் பொறுப்பாளர் ஐ.ரங்கேஸ்வரன் கலந்துகொள்வார்.

(201 - 78)


Allance International PC Organization

INFORMATION & COMMUNICATION TECHNOLOGY

Grade 10&11 மாணவர்களுக்கான ICT வகுப்புகள்



Free Browsing
State of the Art Computer Laboratory with Pentium 4 Systems and Dedicated Internet.

தொடர்புகளுக்கு Hot Line :0776636904

AIPCO
No.25, Somasundram Avenue
Jaffna
Tel: 021-222-8193
Fax: 021-222-8193

TRY TRY&ONE DAY YOUCAN FLY


# துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர்

த.தனேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை

## தம்பையா தணிகாசலம்

அவர்கள் 29.10.2009 அன்று இயற்கை எய்திய செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி,
வல்வெட்டித்துறை. (சி/562051) கல்லூரிச் சமூகம்.


EUT

Equip Unit Trust

Head Office : E.U.T Chunnakam East, Chunnakam. Hot Line :-021 5677477 T.P/Fax:- 021 224 0110

யா/மத்திய கல்லூரியில் கண்காட்சியும் விற்பனையும்




இன்று ஆரம்பமாகும் உலக விஞ்ஞான தினக்கண்காட்சியில எமது நிறுவனத்தின் கைதேர்ந்த தொழில் வல்லுனர்களால் தயாரிக்கப்பட்ட நவீன டிசைன்களில் சகல விதமான தளபாடங்களையும் விசேட கழிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்





* உங்கள் இல்லங்களுக்கு அழகிற்கு அழகு சேர்க்க உங்கள் எண்ணம் போல் கைதேர்ந்த தொழில் நுட்ப வல்லுனர்களால் வடிவமைக்கப்பெற்ற தளபாடங்களை பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஓரே இடம்.

* ஒவ்வொரு மாதமும் 01 ம்திகதி புதிய வடிவங்களிலான தளபாடங்களின் படங்கள் வெளியாகும்



Best Quality Less Price

* 20,000/= க்கு மேல் Free Transportation




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பட்டுப்போகும் பனை அபிவிருத்தி

'முயல் பிடிக்கின்ற நாயை மூஞ்சையில் தெரியும்' என்றொரு பேச்சு வழக்குமொழி நம் மத்தியில் உண்டு. அது போல, இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்திலும் ஈழத் தமிழர்களுக்கு நியாயம் செய்யும் விதத்தில் கொழும்பு அரசு செயற்படும் என்று நம்பப்படும் விடயத்திலும் கூட, அதன் செயற்பாடு எத்தகையது - 'சீத்துவம்' எத்தகையது - என்பதை இப்போதே அதன்போக்கில் பார்த்துக் கூறிவிட முடியும்.

இன்றைய நிலையில், தமிழர்கள் தமது மிச்ச சொச்ச தனித்துவமும் பறிபோய், தங்களின் தமிழர் தாயகம் பேரினவாதிகளின் சிங்கள மயப்படுத்தலில் கபளீகரம் செய்யப்பட்டு விடுமோ என்ற பேரச்சத்தில் முடங்கிக் கிடக்கின்றார்கள்.

தங்களின் போரியல் வெற்றி காரணமாக, தமிழர்களின் பண்பியல் கோலங்களைக் கபளீகரம் செய்து சிங்கள மயப்படுத்தும் விதத்தில் செயற்படுத்துவதற்கான உரித்து போர் வெற்றியின் வெகுமதியாகத் தமக்குத் தரப்பட்டிருக்கின்றன என்ற எண்ணம் பெரும்பான்மையினருக்கு ஏற்கனவே தலைதூக்கிவிட்டது.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல, இந்தக் கபளீகரப் போக்கையும் ருசுப்படுத்த ஒரு சாட்சியம் போதும் என்று கருதுகின்றோம்.

'பூலோக கற்பகதரு' என்று அழைக்கப்படுவது பனை. தமிழர் தாயகமான வடக்கு, கிழக்குத்தான் பனை மலிந்த பூமி. தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய' மூலவளத்தின் சின்னமே அதுதான். அந்தப் பனை வளத்தின் அபிவிருத்தி மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டும், பனை சார்ந்த தொழில்துறையை ஊக்குவிக்கும் முகமாகவும் 1978ஆம் ஆண்டு சட்டவாக்கம் மூலம் 'பனை அபிவிருத்திச் சபை' உருவாக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் சுமார் ஒருகோடி பத்துலட்சம் பனை மரங்கள் இருக்கலாம் என்பது ஓர் உத்தேச மதிப்பு. அதில் கணிசமான தொகை நடந்துமுடிந்த போரோடு அழிந்து போக, எஞ்சிய பனை வளத்தையாவது பாதுகாக்கலாம் என்று பார்த்தால், அந்தப் பனைவளத்தைக் காபந்து பண்ணவேண்டிய அமைப்பே சிங்கள மயப்படுத்தலில் கபளீகரமாகும் பேரவலம்.

பனை அபிவிருத்திச் சபை ஆரம்பகாலம் தொட்டு அமரர் கே.ஸி.நித்தியானந்தன், க.கனகசூரியர், இ.ஜெகநாதன், க.நடராசா, எம்.பாக்கியநாதன், எஸ்.சிவபாதம், எஸ்.சிவதாசன் என்று பல தமிழர்களால் வழிநடத்தப்பட்டது.

இப்போது இந்தச் சபை, துணைப்பயிர் அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு, நாளாந்தம் முழு அளவில் சிங்கள மயப்படுத்தல் துரிதகதியில் நடைபெறுகின்றது; பனை அபிவிருத்தி புறம்தள்ளப்படுகின்றது என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் விசனம் தெரிவிக்கின்றன.

சம்பந்தப்பட்ட துணைப் பயிர் அபிவிருத்தி அமைச்சரான ஆர்.எம்.தர்மதாச பண்டா, தமது மருமகனான எஸ்.எம்.விக்ரமபால என்ற சிங்களவரை பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக நியமித்திருக்கின்றார். அதுமாத்திரமல்ல இன்று சபையின் பணிப்பாளர்கள் அனைவருமே பெரும்பான்மை இனத்தவர்கள்தான். சேனஜெயசிங்க, என்.ஏ.நாளினி, எஸ்.எம்.விக்கிரமபால, கஞஆராய்ச்சி, எல்.ஜி.எச்.தயாரத்தின, பி.எச்.கமகே, ஆர்.எம்.சிங்கரத்தின பண்டுல, ஆர்.தர்மகுலசூரிய ஆகியோரும் திறைசேரிப் பிரதிநிதி ஒருவரும், கணக்காய்வாளர் பிரதிநிதி ஒருவரும் இப்போது சபையின் பணிப்பாளர்கள். இவர்கள் எவருக்குமே தமிழ் தெரியாதாம். பெரும்பாலும் அனைவருமே பனையைப் பற்றிக்கூட அறியாதவர்கள். பனை வளம் அதன் அபிவிருத்தி, பனையை நம்பி வாழும் மக்கள் பற்றி எதுவும் தெரியாத இவர்கள் சபையை எப்படி வழி நடத்துவார்கள் என்பது ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்!

இச்சபையின் தலைமையகம் யாழ்ப்பாணம் என்பதே சட்ட ஏற்பாடு. கொழும்புப் பணிமனை ஒரு நகர அலுவலகம் மட்டுமே. ஆனால் பனையையே அறியாத புதிய அபிவிருத்திச் சபையினர் தங்கள் வசதிக்காகக் கொழும்பு நகர அலுவலகத்தைத் தலைமையகமாக மாற்றி வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. அங்கும் சிங்கள இளைஞர், யுவதிகளுக்கு நியமனங்களை வழங்கி, முழுச் சபையை யுமே சிங்கள மயப்படுத்தும் எத்தனமும் துரித கதியில் நடக்கின்றதாம்.

தமிழர்களின் பூலோக கற்பகதருவான பனை வளத்தைக்காக்கும் கூட்டமைப்பைக்கூட சிங்களமயப்படுத்தி, தமிழர்களின் வாழ்வை நாசப்படுத்தும் இந்த பௌத்த-சிங்கள ஆதிக்கம்தான் தமிழருக்கு நீதி செய்யப் போகின்றதா?

சிங்கள மயப்படுத்தும் பணியில் துரிதமாக இயங்கும் சதித்திட்ட அரசுக்கு ஆதரவான தமிழ்த் தலைவர்கள் அவசரமாகக் கவனிக்க வேண்டிய விடயம் இது.

தமிழர்களின் பனைவளத்தைப் பேணவேண்டிய பனை அபிவிருத்திச் சபையே பௌத்த - சிங்களப் பேரினவாதத் தால் கபளீகரம் செய்யப்படுகையில் அதைக் கூடத் தடுக்க வக்கற்ற தமிழ்த் தலைமைகள் இன்னும் அரசுடன் ஒட்டிக்கொண்டு, காவடி தூக்குவதன் மூலம், வேறு என்ன செய்யப்போகின்றன?

இதை உணர்ந்து, அவர்கள் திருந்துவதற்குப் பனை அபிவிருத்திச் சபைக்கு நேர்ந்துள்ள அதே கதி வழி காட்டட்டும்...!

# றோட்டறிக் கழக ஆளுநர் வருகையை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று வேம்படியில்

யாழ்ப்பாணம், நவ.01

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த றோட்டறிக் கழகத்தின் ஆளுநர் றோட்டேறியன் வி.டி.ஆர்.ராஜன் வருகையைச் சிறப்பிக்கும் நிகழ்வு நேற்றுக்காலை வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. நிகழ்வில் யாழ். மாவட்ட றோட்டறிக் கழகத் தலைவர் திருமதி நீலலோஜினி தர்மகுலசிங்கம், யாழ்.றோட்டறிக்கழக முன்னாள் தலைவரும், உதயன் நிர்வாக இயக்குநருமான றோட்டேறியன் ஈ.சரவணபவன் ஆகியோர் விசேட விருந்தினராகக் கலந்து கொண்டார்.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளது 'பான்ட்' வாத்திய அணிவகுப்புடன் நிகழ்விடத்திற்கு விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். மலர்மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்ட விருந்தினர்கள் மங்கள விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர்.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெற்றதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட றோட்டறிக்கழக முன்னாள் தலைவர் றோட்டேறியன் பஞ்சலிங்கம் வரவேற்புரையினை நிகழ்த்தினார்.

றோட்டறிக்கழக அங்கத்தவர்களை ஆளுநருக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் யாழ்.மாவட்ட பாடசாலை ரீதியாக 12 பாடசாலை மாணவ அங்கத்தவர்களும், கழக ரீதியாக யாழ்ப்பாணம் யாழ்.நகர், நல்லூர், சுன்னாகம் றோட்டறிக்கழக அங்கத்தவர்களும் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

இந்த நிகழ்வை அடுத்து, யாழ். றோட்டறிக்கழகத் தலைவரும் றோட்டேறியன் ஈ.சரவணபவனும் சிறப்புரைகளை நிகழ்த்தினார்கள்.

கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்களின் அலங்கார நடன நிகழ்வும் இடம்பெற்றது. புதிதாக இணைந்த றோட்டறிக்கழக அங்கத்தவர்களுக்கும் இவர்களை அறிமுகப்படுத்திய அங்கத்தவர்களுக்கும் ஆளுநர் சின்னம் சூட்டிக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் கண்டி மாவட்ட றோட்டறிக்கழகத்தினால் யாழ். மாவட்ட றோட்டறிக்கழகத்திற்கு ஒரு தொகுதி நூல்கள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து ஆளுநர் றோட்டேறியன் வி.டி.ஆர்.ராஜனின் உரை இடம்பெற்றது. தொடர்ந்து ஆளுநருக்கு யாழ்.மாவட்ட றோட்டறிக் கழக தலைவர் திருமதி என்.தர்மகுலசிங்கம் நினைவுப் பரிசில் வழங்கினார். (50-4-9-14)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.01

வேலணை மத்திய கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும், இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30மணிக்கு அதிபர் பொன். அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையின் (பாடசாலை வேலைப் பகுதி) பொறியியலாளர் குணரத்தினம் சிவபாலன் கலந்து கொள்வார். மாணவர்களுக்கான பரிசில்களை யாழ். கோட்டக் கல்வி அதிகாரி திருமதி வசந்தமாலா சிவபாலன் வழங்குவார். (201)

## புத்தகக் கண்காட்சி இன்று வரை நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ.01

யாழ். மத்திய கல்லூரியில் கடந்த 28 ஆம் திகதி முதல் எம்.டி.குணசேனா நிறுவனத்தால் நடத்தப்பட்டு வரும் புத்தகக் கண்காட்சி பலரின் வேண்டுகோளுக்கு அமைய இன்று ஞாயிற்றுக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழ், ஆங்கில, சிங்கள புத்தகங்கள் விசேட விலைக்கழிவுடன் விற்பனை செய்யப்படுவதாகவும்- மருத்துவ, பொறியியல் மற்றும் துறை சார்ந்த நூல்களும் பல வகை அகராதிகளும் மும்மொழிகளிலும் வெளியான பிரபல நாவல்களும் விற்பனை செய்யப்படுவதாகவும் - கண்காட்சி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

கொள்வனவு செய்யப்படும் சகல நூல்களுக்கும் ஆகக் கூடிய கழிவுகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## குடாநாட்டில் பருவமழை தொடரும் சாத்தியம்

ஆரம்பித்திருக்கும் பருவப்பெயர்ச்சி மழை குடாநாட்டில் தொடரும் சாத்தியம் உள்ளதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை தொடக்கம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிவரைக்குமான காலப் பகுதியில் குடாநாட்டில் 5.4 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாகவும், கடந்த புதன்கிழமை தொடக்கம் வியாழக் கிழமை காலை 8.30 வரையான காலத்திற்குள் 14.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் யாழ். வானிலை அவதான நிலையம் தெரி வித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வரை ஒக்ரோபர் மாதத்தில் கிடைத்த மழைவீழ்ச்சியின் அளவு 26.8 மில்லி மீற்றர் எனவும் அந்த மையம் அறிவித்துள்ளது. (50-10-111-224)

## குமாரசுவாமி வெற்றிக்கிண்ண 'ருவென்ரி-20' இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், நவ.01

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் பி.எஸ்.குமாரசுவாமி ஞாபகார்த்தமாக நடத்திய 'ருவென்ரி-20' கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் இன்று பி.ப. 1.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த இறுதி ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கே.சி.சி.சி அணி மோதுகின்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரியின் அதிபர் எல்.ஓங்காரமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக ஈ.எஸ்.பேரம்பலம் அன்கோவின் உரிமையாளர் ஈ.எஸ்.பி.நாகரட்ணமும் கலந்துகொள்ளவுள்ளனர். (50-6)

## 111 குருதிக் கொடையாளர்கள் நேற்று கௌரவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம்,நவ.01

யாழ். மாவட்டத்தில் உள்ள குருதிக்கொடையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுக்காலை 9மணிக்கு யாழ்.திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது.

யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி இ.சிவசங்கர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜாவும், சிறப்பு விருந்தினராக 'எக்ஸ்போ எயர்' நிறுவனத்தின் யாழ். முகாமையாளர் கே.வசீகரனும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் 20 தடவைகளுக்கு மேல் இரத்ததானம் வழங்கிய 15 பேரும், 10 தடவைகளுக்குமேல் இரத்ததானம் வழங்கிய 96 பேரும் சின்னம் சூட்டியும், பரிசு வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் இரத்த வங்கியின் தகவல் ஏடான 'உதிரம்' என்னும் சஞ்சிகையின் மூன்றாவது இதழும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் குருதிக் கொடையாளர்கள், வைத்தியர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (50-06)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 16 | 02.11.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | பூரணை |
| | பி.இ. 01.42 வரை |
| நட்சத்திரம்: | அச்சுவினி |
| | [illegible] வரை |
| [illegible]: | [illegible]2.04-01.34 வரை |
| ராகுகாலம்: | 07.34 -09.04 வரை |

## 1922ஆம் ஆண்டு நடைபெற்ற யாழ்.உள்ளூராட்சித் தேர்தல்

**இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே......!**

இந்த வாரமும் யாழ்ப்பாண உள்ளூராட்சிச் சபையைப் பற்றித்தான் எழுத வேண்டிய நிலை. 01.11.1922இல் யாழ்ப்பாண உள்ளூராட்சிச் சபைக்கான தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் பதினைந்து பேர் போட்டியிட்டனர், இவர்களில் எட்டுப்பேர் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். முதலாம் வட்டாரத்திற்கு ஆர்.ஆர்.நல்லையா போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார். இரண்டாம் வட்டாரத்திற்கு சட்டத்தரணி ஜே.ஏ.ஜே.திசைவீரசிங்கம் தெரிவுசெய்யப்பட்டார்.

மூன்றாம் வட்டாரத்திற்கு வி.எம்.கனகரத்தினம், சட்டத்தரணி ஆர்.சுப்பிரமணியம், சி.ரி.சொலமன் ஆகியோர் போட்டியிட்டனர். வி.எம்.கனகரத்தினம் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார். நான்காம் வட்டாரத்திற்கு Patriot பத்திரிகை ஆசிரியர் ஏ.கனகரத்தினம் தெரிவு செய்யப்பட்டார். ஐந்தாம் வட்டாரத்திற்கு சட்டத் தரணி சோமசுந்தரம் தெரிவு செய்யப்பட்டார். ஆறாம் வட்டாரத்திற்கு வி.எஸ்.எஸ். குமாரசாமி சட்டத்தரணி எஸ்.கதிரேசு ஆகியோர் போட்டியிட்டனர். இவர்களுக்கான தேர்தல் 02.11.1922 அன்று சேணியதெரு சன்மார்க்க வித்தியாலயத்தில் நடைபெற்றது. வி.எஸ். எஸ்.குமாரசாமி உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார். ஏழாம் வட்டாரத்திற்கு சட்டத்தரணி ஆர்.சிவகுருநாதர், சட்டத்தரணி இளைய தம்பி ஆகியோர் போட்டியிட்டனர். இவர்களுக்கான தேர்தல் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. ஆர்.சிவகுருநாதர் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார். எட்டாம் வட்டாரத்திற்கு ஓ.எம்.எம்.அப்துல்காதர், சட்டத்தரணி கே.அருளம்பலம் ஆகியோர் போட்டியிட்டனர். இவர்களுக்கான தேர்தல் சோனகதெரு மைஸ்ருதீன் மத்ரனியா பாடசாலையில் நடைபெற்றது. அப்துல்காதர் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. தமிழ் ஆர்வலர்கள் வைகோ தலைமையில் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ராஜபக்ஷவுக்கு திருப்பதியில் பூரண கும்பமரியாதை அளித்திருப்பது தமிழர் களை வேதனைப்படுத்துவதாகும். இது தமிழர்களை இழிவு படுத்தும் செயல். இதற்காக மத்திய அரசைக் கண்டிக்கிறேன் என்று வைகோ விடுத் துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பினர்.

முன்னதாக 3 நாள் புனிதப் பயணமாக நேபாளம் சென்ற அவர் கொழும்பு திரும்பும் வழியில் நேற்று சிறப்பு விமானம் மூலம் ஆந்திர மாநிலம் ரேணி குண்டா விமான நிலையம் சென்று அங்கிருந்து அவர் கார் மூலம் திருப்பதி ஏழுமலையான் ஆலயத்திற்கு சென்றிருந்தார்.

மதியம் 1.30 மணிக்கு திருப்பதி ஏழு மலையானை தரிசனம் செய்தார். அவ ருக்கு தேவஸ்தானம் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவரது வருகையையொட்டி ரேணி குண்டா, திருப்பதி, இடையிலான பாதை முழுவதும் மிக பலத்த பாதுகாப்பு ஏற்பாடு கள் செய்யப்பட்டிருந்தன. ரேணி குண் டாவில் இருந்து ராஜபக்ஷ திருப்தி செல்லும் வழி நெடுகிலும் பொலிஸார் நிறுத் தப்பட்டிருந்தனர்.

ராஜபக்ஷவின் வருகை கடந்த மாதமே முடிவு செய்யப்பட்ட போதிலும், பாது காப்புக் காரணங்களை முன்னிட்டு கடைசி நேரம் வரை மத்திய அரசு இரகசியம் காத்தது. (அ-1)

## அகதிமுகாம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர். இன்னும் இணைந்துகொண்டு இருக் கின்றனர். இவர்களுக்கு மாலை நேரப் பாடசாலைகளாக வகுப்புக்கள் நடத்தப் படுகின்றன என்று தெரிவித்தார் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப் பாளர் வி.ஆர்.ஒஸ்வேள்ட்.

இதற்கிடையில் இடம்பெயர்ந்தவர்கள் மீள்குடியமர்த்தப்படுவதால் வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்து மேற்படி பரீட்சைக்குத் தோற்ற வுள்ள மாணவர்க ளின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கபட் டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-1)

## புலமைப்பரிசில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சையின் முடிவுகள் நேற்று வவுனியா கல்வி வலய அலுவலகத்தில் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளால் ஒப்படைக்கப்பட்டன.

வவுனியாவைச் சேர்ந்த 10பேரும் முல் லைத்தீவைச் சேர்ந்த 196 பேரும் கிளி நொச்சியைச் சேர்ந்த 267 பேரும் மன்னாரைச் சேர்ந்த27 பேரும் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த ஏழு பேரும் புலமைமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். வவுனியாவில் உள்ள எட்டு முகாம்களில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியவர்களின் முடிவுகள் அந்த அந்த முகாம்களுக்கு வவுனியா கல்வி அலுவலகத்தால் கையளிக்கப்பட்டன. (அ-1)

## தமிழ்ப்பிரதேச... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை, 200 பெரும் தொழிலதிபர்கள் கலந்து கொண்ட விசேட கருத்தரங்கில் வைத்து, அரசாங்கத்தின் சார்பில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி யும், தேசிய நல்லிணக்க அமைச்சர் வி.முரளி தரனும் தொழிலதிபர்களிடம் இவ் அழைப்பை விடுத்தனர்.

'வடக்கின் அபிவிருத்தி' என்ற பொருளில் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ சந்திரசிறியும் ''கிழக்கின் தற்போதைய நிலை '' என்ற பொருளில் அமைச்சர் வி. முரளிதரனும் அபிவிருத்திப்பணிகள், அவற்றைத் துரிதப்படுத்த வேண்டிய தேவை, அவற்றில் தொழில் அதிபர்கள் ஆற்றக் கூடிய பங்கு என்பன குறித்து விரிவாக, விலாவாரியாக எடுத்துக் கூறினர்.

''வடக்கின் வசந்தம்'' திட்டத்தின் கீழ் 2,823 அபிவிருத்திப்பணிகளைச் செய்வ தற்கு அரசாங்கம் 4,538 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக சந்திரசிறி கருத் தரங்கில் விரித்துரைத்தார். வடக்கின் வீதி அபிவிருத்தி, தண் ணீர் விநியோகம், மின்சார உற்பத்தி, நீர்ப் பாசனம், கல்வி, கடற்றொழில், சுகாதாரம் ஆகிய துறைகளில் தொழிலதிபர்கள் மூல தனமிட்டு இலாபம் ஈட்டக்கூடிய வாய்புகள் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கில் காங்கேசன்துறை வரையான ரயில்வே பாதை அமைத்தல் மற் றும் அபிவிருத்திப் பணிகளை தனியார் துறை யினர்-தொழிலதிபர்கள் - பங் கேற்கலாம். வடக்கில் புதிய முதலீடுகளைச் செய்து உரிய பயன் பெறக் கூடிய வசதி உண்டு என்றும் அவர் விளக்கினார். கிழக்கு மாகாணத்தில் நடை முறைப்படுத்தப்படும் 'கிழக்கின் உதயம்' திட்டத் தின் கீழ் பல துறைகளில் தொழில் அதிபர்கள் ஈடுபட்டு இலாபமீட்டக் கூடிய வாய்ப்பு இருப்பதாக அமைச்சர் முரளிதரன் தொழில் அதிபர்களுக்கு எடுத்து விளக்கினார். (அ)


**Phillips Nursing Home**
பிலிப்ஸ் நேசிங் ஹோம்

- அதி நவீன சத்திர சிகிச்சைக் கூடத்தில் நியாயமான கட்டணத்தில் சத்திர சிகிச்சைகள்.
- தனித்தனி தொலைக்காட்சி வசதிகளுடன் கூடிய சுகாதாரமான வார்ட் வசதிகள்.
- இலவச வைத்திய ஆலோசனைகளுடன் கூடிய அடிப்படை உடற் பரிசோதனையும்(Basic Full Body Check-up) கணனி மய ஆய்வு கூட பரிசோதனைகளும்.
- நிபுணத்துவமிக்க யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்களால் வழங்கப்படும் (OPD) வெளிநோயாளர் சேவை.

(இ/561818)

0212224172
223,பிரதான வீதி,
(யாழ் சிறைச்சாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.


## வன்னிப்போரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் மீண்டும் இலங்கைக்கு பிரவேசிக்க முடியாத வகையில் தடையுத் தரவு பிறப்பிக்கப் படவுள்ளது.

அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள் என்ற போர்வையில் இலங்கைக்கு விஜயம் செய்த சிலர் செய்மதி தொழில்நுட்பத் துடன் தொடர்புடைய வர்கள் எனவும் அவர்கள் உளவுப் பணியில் ஈடுபட்டதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

பெருந் தொகைப் பணத்தைச் செலவழித்து செய்மதிகளின் ஊடாக வன்னி யுத்த நடவடிக்கை கள் தொடர்பான தக வல்களை குறித்த அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள் திரட்டியுள்ளனர்.

யுத்தம் தொடர்பான தகவல்களை அமெரிக் காவிற்கு வழங்கியவர்கள் குறித்த நபர்களே என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது எனவும் 'திவயின' செய்தியில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (அ-1)

## தமிழ்த்தேசியக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்காக கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளை அவர் கடிதம் மூலம் கேட்டி ருந்தார்.

இது விடயமாக ரெலோ கட்சிப் பிரமுகரும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினருமான என். ஸ்ரீகாந்தா தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கூட்டம் அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது.

தீர்க்கப்படாத இனப்பிரச்சினை, மக்களின் மீள்குடியமர்வு, யுத்தத்தின் பின்னரான புனர மைப்பு போன்றவை தமிழ்க் கட்சிகளின் முன் னுள்ள சவால்களாகும்.

இந்தச் சவால்களை தமிழ்க் கட்சிகள் ஒன்று சேந்து சந்திக்க சகலரும் ஒன்றி ணையவேண்டும் என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது.

அதனைக் கருத்தில் கொண்டு, நடை பெற விருக்கும் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத் தப்படவுள்ளது.

அத்துடன் வீ.ஆனந்தசங்கரி தலைமை யிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா) ஆகியவற்றையும் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குள் இணைப்பது குறித்தும் இக்கூட்டத்தில் கோரிக்கை முன்வைக் கப்படும்.

தமிழ் மக்களின் இன்றைய தேவையை கருத் தில் கொண்டு கூட்டமைப்பை ஏழு கட்சிகள் கொண்டதாக விஸ்தரிக்க வேண் டும் என்ற கருத்து வலுப்பெற்று வருகின் றது. இது தொடர் பாக கூட்டமைப்பின் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும்.

சகல தமிழ்க் கட்சிகளையும் இணைத்துக் கொள்ளும் வகையில் பிள்ளையான் தலை மையிலான தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி யையை இணைத்துக் கொள் ளலாம்.

அரசுடன் இணைந் துள்ள தமிழ்கட்சிகள் முன் வந்தால் அவற்றையும் கூட்ட மைப்பில் இணைப் பது குறித்து ஆலோசிக் கலாம்.

தமிழ்க் கூட்ட மைப்பை இளைஞர் கள் அங்கம் வகிக்கும் கட்சியாக மாற்றம் செய்து புதிய சவால்க ளுக்கு முகம் கொடுக்க சகலரும் முன்வர வேண் டும் - என்றார். (அ-1)


கணக்கீடு
P. பகீரதன்
B.B.A. (Fm Spl)
A/L DAY CLASS
ஆரம்பம் - 2.11.2009 (mon)
NEC (பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்) 8.00 - 10.00 am
விக்னா யாழ் நகர் 10.00 - 12.00 am
Business College
பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி
12.00 - 2.00 pm
Note :-
- வகுப்புகள் அனைத்தும் திங்கள் முதல் வெள்ளிவரை நடைபெறும்.
- ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
- தொடர் பரீட்சையும் கருத்தரங்கும் நடைபெறும்.



மாபெரும் கணினி கருத்தரங்கு
G.C.E O/L 2009 ICT மாணவர்களுக்கு
காலம்:- 02 November 2009
Batch I - 9 a.m
Batch II - 3 p.m
இக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோர் 01.11.2009ற்கு முன் அனுமதியை முன்பதிவு செய்து உறுதிப்படுத்திக் கொள்ளவும்
ஆசிரியர்: S.பிரணவன்
Softview Computer College
55, Arasady Road,
Jaffna. T.P: 021 2225170


## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோனேசிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் அவுஸ் திரேலிய சுங்கக் கப்பல் ஒன்றி னால் காப்பாற்றப்பட்ட மேற்படி அகதிகளின் விவ காரத்தினால், ஆட் சிக்கு வந்து ஒரு வருடம் பூர்த்தி அடைந்த அவுஸ்திரேலிய பிரதமர் கெவின் மீது அரசியல் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் அகதிகளை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்ல முடியா தென அவுஸ்திரேலியா கடந்த புதன் கிழமை வலியுறுத்திக் கூறியது. விசாரணைக்காக அகதிகள் இந்தோனேசியா வுக்கு அழைத்துச் செல்லப் படுவார்கள் என்றும் அது தொடர்பில் இந்தோனேசியாவு டன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட் டுள்ளதாகவும் அந்நாடு தெரிவித்துள்ளது.

இந்த காலக்கெடுவுக்குள் அவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காணவேண் டும். அல்லது இந்தோனேசிய கடற்பரப்பிலிருந்து வெளியேறிவிட வேண் டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தோனேசிய வெளிநாட்டமைச்சர் மார்டி நதலேகாவா வியாழக்கிழமை ரொயிற்றர் செய்தி சேவைக்கு அளித்த பேட்டி ஒன்றில், இலங்கைத் தமிழ் அகதிகளை என்ன செய்வது என்பதை தீர் மானிப்பது அவுஸ்திரேலியாவை பொறுத்த விடயம் என சுட்டிக்காட்டியிருந்தார்.

## மட்டக்களப்பில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கையிலேயே இந்த கைக்குண்டு வெடித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த சிறு வர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தி யாசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் உடன்பிறந்த சகோதரர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-சி)

## 1239 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 353 குடும்பங்களைச் சேர்ந்த 1,097 பேர் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் வைத்தும் -

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 178 குடும்பங் களைச் சேர்ந்த 676 பேர் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் வைத்தும் - நேற்றுப் பிற்பகல் மீளக் குடியமர அனுப்பப்பட்டனர்.

தீவகத்தில் நான்கு பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 165 குடும்பங் களைச் சேர்ந்த 466 பேர் நேற்றிரவு 12 மணியளவில் யாழ்.செயலகத்தை வந்தடைந்தனர். அவர்கள் பிரதேச செயலர்களிடம் கைய ளிக்கப்பட்டனர்.

பொதுமக்களை சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கும் நிகழ்வுகளில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரச அதிபர் கே.கணேஷ், திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் ஆகியோர் பிரசன்னமாகியி ருந்தனர்.

சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 1,300 பேர் இன்று யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படவிருப்பதாக பிரதித்திட்டப் பணிப்பாளர் எஸ்.சுதர்சன் தெரி வித்தார். (அ-1)

## மரண அறிவித்தல்கள்

### நாதன் கோதண்டபாணி (முருகையா - சித்த ஆயுள்வேத வைத்தியர்)

மறவன் புலோ, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், தும்பளை தெற்கு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நாதன் கோதண்டபாணி நேற்று (31.10.2009) சனிக்கிழமை காலமனார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2009) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 3 மணி யளவில் பூதவுடல் தகனக் கிரி யைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை தெற்கு,
பருத்தித்துறை.

தகவல்:
கோகுலரதன் (மகன்).

### செல்லப்பா செல்வரத்தினம்



வண்ணார்பண்ணையைச் சேர்ந்த செல்லப்பா செல்வரத்தினம் 29.10.2009 வியாழக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான செல்லப்பா - செல்லம் தம்பதியினரின் மகனும் இலட்சுமி யின் அன்புக் கணவரும் மதியழ கன், அன்பழகன், சொல்லழகன் (செல்லான்), செல்வழகன், இன்பழகன் (அழகேஸ்), மெய்யழகன், அமரர் அறிவழகன், ஜெயராணி, இந்தி ராணி, தமிழ்ச்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

100/14, லோட்டஸ் றோட்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

(90514)

தகவல்:
குடும்பத்தினர்.


Net Browsing 01-hour -40/= only
நேரடியாக முகம் பார்த்துக் கதைத்தல்
30.11.2009 இற்கு முன் அமெரிக்க லொத்தர் விசாவுக்கு இன்றே விண்ணப்பிக்கலாம்.
Pan Computer
College of Information Technology
(பழைய N.N.R. Communication)
Computer Course New Batch
MS Office
D. T. P
Hard ware
Video Editing
புதிய பிரிவுகள் ஆரம்பம் 05.11.2009, பி.ப 3.00 மணி
மாணவர்கள் உத்தியோகத்தர்களுக்கு சிங்கள வகுப்பு ஆரம்பம் 06.11.2009 பி.ப 4.00 மணி
(90514)



| ENTRY SERIES | DUAL SERIES | CORE 2 DUO SERIES |
|---|---|---|
| 1.6 Intel 945 MB | 2.6 Intel Dual Core | 2.93 Intel core2 dua |
| 1GB Kingston | ASUS M/B | ASUS M/B |
| 320 GB Samsung | 1GB Kingston | 2GB Kingston |
| ASUS DVD Writer | 500GB | 500GB |
| Power Logic Casing | ASUS/HP DVD writer | ASUS DVD Writer |
| 16 LCD Viewsonic/DELL | Power Logic Casing | Power Logic Casing |
| Key/Mouse/Speaker | 16/LCD Viewsonic | 19 LCD/HP |
| UPS East Auto Shut down | Key/Mouse/Speaker | Key/Mouse/Speaker |
| 44,800 | UPS East Auto Shut down | UPS East Auto Shut down |
| | 52,800 | 64,800 |

HP/LENOVA BRANDED PC , HP LAPTOPS
TP LINK(1YEAR WARRANTY) NET WORK PRODUCT(ROUTER,SWITCH, USB DONGLE,CABLE,NET WORK TESTER,TOOLS) WEB CAM, RECOVERY CARD, HEAD PHONE,PAP2,HDD,DVD WRITERS, RAM,MONITER,MOTHER BOARD,PRINTER,SCANNER,WOOFER, TONER,KEYBOARD,MOUSE,CASING,UPS,VGA CARDS.
அனைத்து கணனி உதிரிப்பாகங்களும் குறைந்த விலையில்...
உங்கள் இல்லங்கள் நாடி வந்து உங்கள் கணனிகளின் குறைகளை திருத்தி கொடுக்கப்படும்
அழையுங்கள் PH : 0777667974
NALIN Information Technologies Pvt Ltd





TP : 0212221166 , 0777667974 email : nitpvt@nalininfotech.com 44/3A மணல்தரை லேன், கந்தர்மடம், யாழ்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# டைனோசர் தோன்றி மறைந்த வரலாறு



ஆதிகாலத்திலே புவியில் இராட்சத நகருயிர்கள் அல்லது டைனோசர்கள் வாழ்ந்தமை பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்த இராட்சத நகருயிர்கள் 225 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே புவியில் வாழ்ந்தமைக்கு ஏறத்தாழ 65 மில்லியன் ஆண்டுகளுக்கும் முன்னர் அழிந்து போனமைக்கும் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. டைனோசர்கள் எங்ஙனம் அழிந்துபோயின? அக்காலத்திலே ஒருபெரிய வான் பொருள் புவியுடன் மோதியதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அம்மோதுகையின் விளைவாக உண்டாகிய தூசு, முகில் காரணமாக நெடுங்காலத்துக்குப் புவிக்குப் போதிய சூரிய ஒளி கிடைக்கவில்லையெனக் கூறப்படுகிறது. தாவரங்களுக்குச் சூரிய ஒளி கிடைக்காத போது அவை அழிந்தமையால் உணவுச் சங்கிலி வழியே டைனோசர்களுக்கும் உணவு கிடைக்காமல் அவையும் அழிந்ததாகக் கூறப்படுகிறது.

ஆக்கம்:
**மனோகரன் நிதுசன்,**
தரம் 6B,
யாழ்ப்பாணக் கல்லூரி

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? -38

01. உலகின் முதல் விண்வெளி வீரர் யார்?
02. செஞ்சிலுவைச் சின்னத்தைத் தனது தேசியக் கொடியில் கொண்டுள்ள நாடு எது?
03. உலகில் அதிக தீவுகளைக் கொண்ட நாடு எது?
04. ஐ.நாவின் பொதுச் சபையின் முதலாவது மாநாடு எப்போது, எங்கு நடைபெற்றது?
05. நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் யார்?

### விடை தெரியுமா?

**தெரிந்தால் 10.11.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.**

**விடை தெரியுமா? -36** சரியான விடைகள்

01. திலகரட்ண டில்சான்.
02. மாயக்கை.
03. நத்தை.
04. நவாலியூர் சோமசுந்தரப் புலவர்.
05. முஹம்மது எல்பாரடி.

### பரிசுபெறுவோர்

01. **தே.சியாமினி,** யா/இந்து மகளிர் கல்லூரி.
02. **ஜெ.துவாரகா,** தரம்-3C, யா/இந்து மகளிர் ஆரம்பப் பா...
03. **சூ.புனித்தா,** தரம்-7 A, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை.
04. **சி.நிரோஜன்,** தரம்-4B, யா/மாணிக்கவாசகர் வித்தி.

# தெனாலி ராமன் கதை

இந்தியாவிலே தெனாலி என்ற ஊரிலே இராமன் என்றொரு சிறுவன் இருந்தான். அவனைத் தெனாலிராமன் என்று அழைப்பர். இச் சிறுவன் ஒருநாள் வீதியில் விளையாடும் போது அவ்வழியாக ஒரு சந்நியாசி வந்தார். அவர் இராமன் விகடமாப் பேசுவதைக் கேட்டு மகிழ்ந்தார். அதனால் அவர் அவனுக்குக் காளியைத் துதிக்கும் மந்திரத்தை உபதேசித்துச் சென்றார்.

ஒருநாள் இராமன் அம்மந்திரத்தை உச்சரித்தான். உடனே காளி ஆயிரம் முகங்களுடனும் இரண்டு கைகளுடனும் அவன்முன் தோன்றினாள். இராமன் காளியைக் கண்டு சிரித்தான். அப்போது காளி "ஏன் சிரிக்கிறாய்?" என்று கோபத்தோடு கேட்டாள். அதற்கு அவன் "தேவி எனது ஒரு மூக்கில் சளி உண்டானால் அதை நீக்க எனக்கு இரண்டு கைகளும் போதவில்லையே. ஆயிரம் மூக்குகளை உடைய உமக்கு சளி உண்டானால் அதை நீக்க நீர் என்ன செய்வீர்? பாவம் என்பதை நினைத்தே சிரித்தேன்" என்றான். காளி "இராமா நீ என்னோடு



விகடமாகப் பேசியதால் நீ விகடகவி ஆவாய்" என்று சொல்லி மறைந்தாள். அக்காளி தேவியின் திருவருளால் விகடமாகப் பேசுவதிலும் விகடச் செய்கைகளாலும் சிறந்து விளங்கினான் இராமன். ***






அம்மா ஓநாய் மீண்டும் குட்டிகளுக்கிடையில் படுத்துக் கொண்டா. உன்னை மௌலி என்றுதான் அழைக்கப் போகிறேன். காலம் வரும் நீயும் வேட்டையாடப் போவாய். ஷேர்கான் உன்னை வேட்டையாடியது போல நீயும் அவனை வேட்டையாடுவாய் என்று பேசிக்கொண்டு போனா அம்மா ஓநாய்.

ஆனால் நம் கூட்டத்தார் இது பற்றி என்ன சொல்லப் போகிறார்களோ என்றுதான் எனக்கு யோசனையாக இருக்கிறது. என்றார் அப்பா ஓநாய்.

காட்டு விலங்குகள் சட்டத்தின் பிரகாரம் எந்த ஒரு ஓநாயும் திருமணம் செய்து கொண்டவுடன் கூட்டத்தாரிடமிருந்து பிரிந்து சென்றுவிடலாம். ஆனால் அதன் குட்டிகள் வளர்ந்து தமது சொந்தக் காலில் நிற்கக்கூடிய நிலமை வந்துவிட்டால் கூட்டத்தின் சபையார் முன் அவர்களைக் கொண்டுவந்து காட்ட வேண்டும் அப்பொழுது தான் மற்றவர்கள் அவர்களை அடையாளம் கண்டு கொள்வார்கள். சபையாரின் கூட்டம் மாதத்தின் ஒரு தடவை பூரணை நாட்களில் இரவில் நடைபெறும். இந்தப் பரிசோதனைக்குப் பிறகு குட்டிகள் தாம் விரும்பியபடி எந்த இடத்திலும் ஓடித்திரிய முடியும். அவை முதல் முதலாக ஒரு மிருகத்தைத் தன்னந்தனியாக அடித்து விழுத்துவதற்கு முன்பாக எந்த ஒரு வளர்ந்த ஓநாயாவது அவைகளில் ஒன்றை அடித்து கொன்று விட்டால் எந்தவித நியாயமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவ்வாறான குற்றம் புரியும் ஓநாய்க்கு மரணம்தான் தண்டனை. குட்டிகள் ஓடியாடித் திரியும் அளவுக்கு வளர்ந்தவுடன் ஒருநாள் அப்பா ஓநாய் தன் குட்டிகளையும் அம்மா ஓநாய் மற்றும் மனிதப் பிள்ளை மௌலியையும் கூட்டிக்கொண்டு கூட்டத்தாரின் சபை கூடும் இடத்திற்கு அழைத்துச் சென்றார். மலையின் உச்சியில் கற்களும் பாறைகளும் அடர்ந்த இடத்தில் ஒரு நூறு ஓநாய்கள் மறைந்து இருக்கக்கூடியதான இடம் அது.



ஓநாய்களின் தலைவர் அகீலா- ஒரு பாறையின் மீது மிக கம்பீரமாக முன்னங் கால்களை நீட்டிக்கொண்டு படுத்திருந்தார். அவர் இருந்த இடத்திற்கு கீழே மேலும் 40 ஓநாய்கள் அமர்ந்திருந்தன.

தலைமை ஓநாய் தன்னந்தனியாக இப்போது சுமார் ஒரு வருடத்திற்கு மேல் அவைகளை வழிநடத்திவிட்டார். அவர் இருமுறை ஓநாய்களுக்கு மனிதர்களால் வைக்கப்படும் பொறிகளில் சிக்கி தப்பியிருக்கிறார். ஒரு முறை அடித்து நொருக்கப்பட்டு சாகும் நிலையில் கிடந்து தப்பியிருக்கிறார். எனவே மனிதர்களின் நடத்தைகள், போக்குகள் பற்றியெல்லாம் அவர் அறிவார். [வளரும்]

# நீங்களும் எழுதலாம்



(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-........................................
தரம் :-........................................
பாடசாலை :-........................................
........................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

# சிட்டுக்குருவி




அழகிய பறவை சிட்டுக்குருவி
என் மனதைக் கவர்ந்த சிட்டுக்குருவி
சின்னஞ் சிறு சிட்டுக்குருவி
கூச்சல் இடும் சிட்டுக்குருவி

பூவை நோக்கி ஓடிவரும்
எம்மைப் போல பாடிவரும்
விமானம் போல பறந்துவந்து
எம் நெஞ்சை மயக்கும் சிட்டுக்குருவி

வல்லைநிறங்களில் பறந்து வரும்
பூவைக் கண்டு ஓடிவரும் - நாம்
தாய் இல்லாமல் தவிப்பது போல்
அது பூவில்லாமல் தவித்திடுமே.

வீ.சக்கானா, தரம்-8A,
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

# மாணவர் தூரிகை



ம.நிகேதன், தரம் - 1 B, யா/சாவகச்சேரி, இந்து ஆரம்பப் பாடசாலை.




ந.அஜித்குமார், தரம் -8A, யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.



க.கஜேனுரூந், தரம் -6D, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.



சீ.நிருத்திகா, தரம் - 6D, யா/இந்து மகளிர் கல்லூரி.



ற.சஞ்சீவ், தரம் - 7, யா/மத்திய கல்லூரி.



க.கீர்த்திகா, தரம் -8A, யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



க.யதுஜென், தரம் -9C, யா/மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**STUDY ABROAD**
(At recognize Universities and College)
UK, CANADA, MALAYSIA, NEW ZELAND
Bachelor, Master and HND COURSES
SPOT ADMISSION
நியாயமான கட்டணத்தில்
SPONSOR ஒழுங்கு செய்யப்படும்.
- Professional Visa Guidance
- Minimum Entry Requirement G.C.E. (O/L)
- Reasonable Course Fee Payable in Installments
ENROLLMENTS NOW IN PROGRESS
Merrill Lynch International
7452005, 2551148
16 B, E.S. FERNANDO MAWATHA, COLOMBO - 06
(Next to Sampath Bank)



**அறை/வீடு வாடகைக்கு**
கொழும்பு, வெள்ளவத்தையில் AC/NONAC அறைகள், 2 அல்லது 3 அறைகளுடன் கூடிய வீடுகள் நாள் அல்லது மாத வாடகைக்குண்டு. தொலைபேசி மூலம் பதிவுகள் மேற்கொள்ளலாம்.
Suriyan Rest,
18/3, Station Road, Wellawatta.
T.P: 0112581441, 0112556175.



**ORIENDAL AQUARIUM (Multy Farm)**
வளர்ப்புக் கலர் மீன்கள், மீன் தொட்டிகள், மீன் தொட்டி உபகரணங்கள், செல்லப் பிராணிகள், பூக்கன்றுகள், பூச்சாடிகள் என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
✱ வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு.
தொடர்புகளுக்கு: மல்டி பாம்,
61, இராமநாதன் வீதி
(நாச்சிமார் கோயில் முன் றோட்), யாழ்ப்பாணம்.
021 7912997, 077 5397035.
(90478)


## சண்டிலிப்பாய் இந்துவின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.1

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினவிழாவும், பரிசளிப்பு விழாவும் 'முகிழ்' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், அவரது பாரியார் திருமதி கௌரி சண்முகலிங்கன் ஆகியோர் பிரதம விருந்தினராகவும் சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிறுவுநர் நினைவுப் பேருரையினை கோப்பாய் கல்வியியற்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் பா. தனபாலனும், 'முகிழ்' சஞ்சிகையின் வெளியீட்டுரையினை கல்லூரியின் பிரதி அதிபர் அ. ஆனந்த நடராசாவும் நிகழ்த்தவுள்ளனர். (9-115)


**Study & Work**
UKல் கல்வி, வேலை வாய்ப்பு
திருப்தியான வீசா வழிகாட்டுதல்
நம்பிக்கையான ஆலோசனைகள்
தவணை முறையிலான கட்டண வசதி

50% Less with O/L or A/L
யாழ் மண்ணில் இலவச கருத்தரங்கு - உடனடி அனுமதி வழங்குதல்
Free Seminar & Spot Admissions
By Mr. Michael Hilton Director Marketing
St. Patrick's College London
On 2nd November - 10.00am to 5.00 pm
Yarl Paady Residency Nallur
☑ Hospitality & Tourism ☑ Healthcare Management
☑ Business Management ☑ IT & Computing
☑ Fashion & Textiles ☑ Many more subjects
011 573 7306 071 883 9415
THAMES INTERNATIONAL
Educational Consultancy (Pvt) Ltd.
136B 1/1, High Level Road, Nugegoda
Tel. 011 431 9027 or 011 281 2405
Thames INTERNATIONAL
www.thameslanka.com
Diadem DSM


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20.02.1958

**நடராஜா ரவீந்திரராணி**

மறைவு 04.11.2006

திதி: சதுர்த்தசி



அன்புடனும் பண்புடனும்
எமைப் பேணிக்காத்து
கல்வி கற்பித்து
எம்மையெல்லாம் ஆளாக்கி
அனைவருடனும் இன்சொல்
பேசி பாசத்துடனும்
நேசத்துடனும் இறக்கும் வரை
இன்முகத்தினராய்
வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும்
தெய்வமாகி விட்ட
எமது அன்புத் தாயின்
ஆத்ம சாந்திக்காய்
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கந்தரோடை,
சுன்னாகம்.

(90452)

என்றும் நினைவுடன்: **பிள்ளைகள்.**

## முதலாம் வருட நினைவு தினம்



தோற்றம்: 1927.09.09

மறைவு: 2008.11.12

திருமதி
**கந்தையா இரத்தினம்**

திதி: சதுர்த்தசி

பாசத்தின் உறைவிடமாய் அன்பின் திருவுருவாய்
குடும்பத்தின் குல விளக்காய்
எங்கள் அனைவரையும் வழி நடத்திய தெய்வமே!
ஆண்டு ஒன்று நகர்ந்தாலும் உங்கள் பாசம் விட்டகலா
எங்கள் கண்ணீர்ப் பூக்கள் மலர
ஆண்டவன் அடியில் உங்கள்
ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

(90456)

**உங்கள் பிரிவால் துயருறும்:**
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள்.

பலாலி வீதி,
உரும்பிராய் வடக்கு.

தகவல்: க.இராசதுரை (மகன்).

## நீங்கா நினைவுடன் ஈராண்டில்



தோற்றம் 11.10.1937

எம் இனிய அம்மா, அப்பா,
உங்கள் தங்க முகமெங்கே? சிம்மக் குரலெங்கே?
திக்கெங்கும் தேடுகின்றோம்
வஞ்சகரின் வஞ்சக வலையிலே வீழ்ந்து
மாண்டனையோ. உங்களுடன் கூடி
வாழும் பொற்காலம் இந்தப் பூமியிலே
இன்னொரு முறை எங்களுக்கு வாராதோ?
ஆண்டாண்டு தோறும் நாம் அழுது
புரண்டாலும் மாண்டார் வருவாரோ
இம் மானிலத்தில்
இருவரும் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவலைகள் என்றென்றும்
எங்கள் இதயக் கூட்டை விட்டுப் பிரியாது

உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்.
**குடும்பத்தினர்**



தோற்றம் 18.05.1942

அமரர்
**கணபதி நாகலிங்கம்**

மறைவு 01.11.2007

திருமதி
**நாகலிங்கம் இராசமணி**

மறைவு 05.02.2007

நாகம்மாள் கோயில் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

90463

## ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்
**வல்லிபுரம் மகேந்திரராஜா**

(இளைப்பாறிய பிரதம தபால் அதிபர், J.P)

திதி: (01.11.2009) சதுர்த்தசி

குடும்ப ஒளிவிளக்காகிய நீங்கள் எம்மோடு இல்லையே!
தாங்குமா எம் இதயம்- தினம் தினம்
ஏங்குகின்றோம் உங்களை நினைத்து

ஈராண்டுகள் சென்றாலும் ஆறாது எம் துயர்
நிலையற்ற இவ்வுலகில் எமக்கு நீங்கள் நிலையான செல்வம்
பலகோடி செல்வங்கள் எம்மைத் தேடி வந்தாலும்
உங்களின் அன்புக்கு ஈடாகுமா?
நினைவில் எம்முடனும் நிஜத்தில் இறைவனிடமும்
கலந்திருக்கும் உங்களின் ஆத்மா சாந்தியடைய மருதடி
விநாயகரை வேண்டுகின்றோம்

மேதர் ஒழுங்கை,
மானிப்பாய்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(90423)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
ஓம் சக்திமயம்

# லகு ஸ்ரீ சக்ர பூஜை

## கைலாசநாத பத்ததி

# நூல் வெளியீட்டு விழா



நூல் ஆக்கியோன் : நயினை " பிரதிஷ்டாபூஷணம் "
சிவஸ்ரீ. ஐ. கைலாசநாதக்குருக்கள்
இடம் : ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், நயினாதீவு.
காலம் : விரோதி வருஷம் ஐப்பசி மாதம் 16 ஆம் நாள் (பூரணை தினம் ) 02.11.2009 திங்கட்கிழமை
நேரம் : காலை 9.30 மணி

### நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணங்கள்
- வரவேற்புரை
- குருதேவாய சமர்ப்பணவுரை
  கிரியா கலாப முக்தாமணி
  சிவஸ்ரீ. ச. மகேஸ்வரக்குருக்கள்
  (ஆதின குரு, ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், நயினை)
- வாழ்த்துரை
  ஆகமப் பிரவீணா
  சிவஸ்ரீ. கைலை. வாமதேவக்குருக்கள்
  (ஆதின குரு, ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், நயினை)
- அருளுரை
  சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்
  (இரண்டாவது குரு மஹா சந்நிதானம், நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்)
- தலைமையுரை
  "திருமுருகமாமணி" ஆ.தியாகராஜா
  (அறங்காவல் சபைத் தலைவர், ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்- ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர், வேலணை)
- சிறப்புரைகள்
  சிவஸ்ரீ. ப. மனோகரக் குருக்கள்
  (தலைவர், சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம்)
  கலாநிதி. மா. வேதநாதன்
  (தலைவர்,இந்து நாகரிகத்துறை,யாழ்.பல்கலைக்கழகம்)
  திரு .ஆறு.திருமுருகன்
  (தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை- அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)
- கருத்துரை
  பேராசிரியர் வி.சிவசாமி (முன்னாள் தலைவர், சமஸ்கிருதத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்).
- பாராட்டுரை
  திரு.கு.சரவணபவானந்தன்
  (செயலாளர்,நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், நயினை-கல்விக்கோட்டப் பணிப்பாளர், வேலணை)
- நூல் அறிமுகவுரை
  பிரம்மஸ்ரீ. ப.-சிவானந்தசர்மா
  (கோப்பாய் சிவம்-அதிபர், ஸ்ரீ வித்யா அச்சகம், இணுவில்)
- நூல் வெளியீட்டுரை
  மேற்படிநூல் பதிப்பாசிரியர்
  பிரம்மஸ்ரீ.ம. பாலகைலாசநாதசர்மா
  (சமஸ்கிருத விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம் )
- நூல் வெளியீடு
  அதிவந்தனீய சர்வதேச இந்து மத குருபீடாதிபதி,
  கிரியா கலாப முக்தாமணி
  சிவஸ்ரீ. ச. மகேஸ்வரக் குருக்கள்
  (ஆதீன குரு, ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்-நயினை, பிரதமகுரு, ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், சுதுமலை)
- நூல் வெளியீட்டுக்கான அனுசரணையாளர்
  தேசகீர்த்தி, தொழிலதிபர்
  திரு.து. சேரன்குமார்.J.P (வவுனியா)
- முதற்பிரதி
  சிவாச்சார்ய சூடாமணி
  சிவஸ்ரீ. சுவாமிநாத பாலசுந்தரக் குருக்கள்
  (ஆதின குரு, ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், நயினை )
- சிறப்புப் பிரதி
  கிரியா தத்துவநிதி
  சிவஸ்ரீ ச.சோமஸ்கந்தக் குருக்கள்
  (பிரதமகுரு, பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்)
- கௌரவப்பிரதி
  சிவாகமானு சாரிதசார்துலர்
  சிவஸ்ரீ.சிவ. நித்தியானந்தக் குருக்கள்
  (பிரதம குரு இலுப்பத்தாள் முருகமூர்த்தி தேவஸ்தானம், சங்கானை)

தொடர்ந்து அனைத்து சிவாச்சார்யப் பெருமக்களுக்கும் நூல் வழங்கப்படும்.

- நன்றியுரை
  திரு. சி. தனபாலசிங்கம்
  (அறங்காவல் சபை உறுப்பினர் , ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், நயினை )

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள்,நயினாதீவு.

---

உ
சிவமயம்
வாழ்க வளமுடன்

# மங்களகரமான திறப்பு விழா



# சிவகணேஸ் களஞ்சியம்

விரோதி வருடம் ஐப்பசித் திங்கள் 15 ஆம் நாள் இன்று (01.11.2009 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.50 மணிமுதல் 11.20 மணிவரையுள்ள சுபவேளையில் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள 163 ஆம் இலக்க கட்டடத்தில் "சிவகணேஸ்" களஞ்சியம் என்னும் புதிய வணிக நிலையம் மங்களகரமாகத் திறந்து வைக்கப்படுகின்றது என்பதனை அன்பர்கள், ஆதரவாளர்கள் , வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

சி.பரமநாதன்
தொ.பே: 0777283811.

(90466)

---

## ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்.

தபால் மூல ஆங்கிலப் பாடநெறிகள் SPOKEN ENGLISH

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.

கிளாஸ் போகும் காலம், நேரம் மிகுதி
குறுகிய காலம் / வயது எல்லை இல்லை
வீண் கட்டணங்கள் செலுத்த வேண்டாம்

பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.

பாடநெறியில் இணையும் உங்களுக்கு

அழகிய பேக் ஒன்றும் Tigo Sim (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் இலவசமாக வழங்கப்படும்.

எமது Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்.

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.

**UNION EDUCATIONAL INSTITUTE**
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

---

## நகரசபை, சாவகச்சேரி
### கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் 12.11.2009ஆம் திகதி மு.ப. 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதேதினம் மு.ப. 11 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலையின் பொருட்டு, நிர்மாணப் பயிற்சி நிலையத்தில், 31.03.2010 வரை வலுவுள்ள (ICTAD) தரம் M8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர் மட்டுமே கேள்வி கோருவதற்குத் தகைமையுடையவராவர்.

| தொ. இல. | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (+VAT) |
|---|---|---|---|
| 01 | சாவகச்சேரி பேருந்துத் தரிப்பிடம் தாரிட்டுச் செப்பனிடல் | 36,000.00 | 560.00 |

கேள்விப்பத்திரங்கள் சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 09.11.2009 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை மேற்குறிப்பிட்ட கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி *விசேட ஆணையாளர், நகரசபை சாவகச்சேரி* என முகவரியிடப்பட்டு, நேரடியாகப் பெட்டியில் இடப்படவேண்டும். இணைப்பிரதி, *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், பண்ணை வீதி, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு *12.11.2009* ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நகரசபை அலுவலகம், சாவகச்சேரி.
31.10.2009

(சி/562037)

திருமதி [illegible] வசந்தகுமார்
விசேட ஆணையாளர், நகரசபை சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறவிடப்பட்டுள்ளது

NPJD 4068 என்னும் இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் ஆவணங்கள் மருதனார்மடச் சந்திக்கும் சீரணிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. இவ் ஆவணங்களைக் கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் விலாசத்தில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சா.ஜஸ்ரின்
திருக்குடும்ப ஆலயம்,
மல்வம், உடுவில்.

(90486)

## UK VISA

VISA APPLICATION & REVIEW
PERFECT GUIDANCE
FOR
STUDENT VISA

- Financial Assistance
- Low Tuition Fees
- Apply with O/L Or A/L
- IELTS not Compulsory

011 5737307

## FULL TIME WORK PERMIT IN JUST 180 DAYS

Apply now and be in Canada in January 2010

### Canadian Co-op programme

- One year diplomas ( with optional stay back of one more year)
- Two year Advance Diploma and P.G.Diploma ( with optional stay back of three more years)

In

Business Management, Marketing, IT,
International Trade,
Hospitality and Tourism Management
And get PR on course completion.

KINGSTON INSTITUTE OF OVERSEAS EDUCATION

KIOE

No 662 GALLE ROAD,
COLOMBO 03.

HOTLINE 0773400228 0723325466 0114342445

KINGSTON COLLEGE INTERNATIONAL

MUTWAL BRANCH :84, De La Salle Road,Mutwal.
WELLAWATTE BRANCH :40/8, Dharmarama Road,Wellawatte.
MOUNT LAVINIA BRANCH :31,Samudrasanna Road,Mount Lavinia.
MATALE BRANCH :Vihara Road,Matale.

Email: kingstonadmissions@yahoo.com

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1976 ஆம் ஆண்டு பூரம், 55 கிரக பாவம், அவுஸ்திரேலியா P.R. உள்ள எக்கவுண்டனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை. தொடர்பு: 021 222 9182 (90467)

## காணிகள் விற்பனைக்கு

சாவகச்சேரி நகர எல்லைக்குள் அமைந்துள்ள குடியிருப்புக் காணிகள், தென்னங்காணிகள், வயற்காணிகள் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு விளம்பரதாரர், V.M.கணபதிப்பிள்ளை வீடு, கண்டி வீதி, சாவகச்சேரி. (90451)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 41 வயது, 5'7" உயரமுள்ள பரணி 1 ஆம் பாதம், நட்சத்திரம் உதயத்தில் செவ்வாய்க் குற்றமுள்ள, கனடா பிரஜா வுரிமை பெற்ற மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
இலங்கை: சி.உதயசேகரன்,
இல.965, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 6846, 0714014304.
கனடா: பொ.கந்தசாமி,
(ஓய்வுபெற்ற அதிபர்)
T.P: 0014168200258,
0014164938354.

குறிப்பு:- Email முகவரி பிழையாக வந்ததன் காரணமாகத் தொடர்பு கொள்வோர் கீழ்வரும் Email முகவரிக்குத் தங்கள் குறிப்புக்களை அனுப்பி வைக்கவும்.
1) www paatia 2007@hotmail.com
2) www sivanammai@gmail.com
(90490)

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.
கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

## ஐங்கரன் திருமண சேவை

எங்களிடம் யாழ்.இந்து கௌரவ குடும்பம் UK Citizen 31, 35, 37 வயது, கனடா Citizen 33, 35 வயது, அமெரிக்கா கிறீன் காட் விசா 36 வயது, அவுஸ்ரேலியா Citizen 37 வயது கொலண்ட் Citizen 36 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக்கட்டணம் இல்லை.
லண்டன் தொடர்பு:
00447508295863, 00447535384166
Fax No: 00442086810707,00442086720673
(சி/562042)

தென்மராட்சி வரலாற்றில் முதன் முதலாக மக்களின் சேவையினை முழுதாகக் கொண்ட முற்றிலும் குளிரூட்டப்பட்ட நெற் கபே

## SATHANA CYBER NET CAFE

எமதுசேவைகள்

- இன்ரநெற் புறோசிங் (Internet Browsing) 1 Hour 60/=
- இன்ரநெற் Call அனைத்து நாட்டிற்கும் - 1min 6/=
- நேரடியாக முகம்பார்த்துக் கதைத்தல் 1 min 6/=
- ஈமெயில் (Email), பக்ஸ் (fax) மற்றும் இதர சேவைகள்
- அனைத்து விதமான டிசைனிங் (Designing), பிறின்ரிங் (Printing), ஸ்கானிங் (Scanning)
- Video mixing மற்றும் கணனி சம்பந்தமான திருத்த வேலைகள் (Hardware Repairing)
- அமெரிக்கன் Green card லொத்தர் விசா நடைமுறை

அனைத்துக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

சாதனா சைபர் நெற் கபே
இல,KUF 04, நவீனசந்தை,
மேல்மாடி, சாவகச்சேரி.
T.P:- 0777696771
(சி/562001)

IIS CITY CAMPUS

### விசேட ஆலோசனைக் காரியாலயம்

world Science day ஐ முன்னிட்டு Ministry of Science and Technology எதிர்வரும் 1ஆம் 2ஆம் திகதிகளில் யாழ் மத்திய கல்லூரியில் நடாத்தும் விஞ்ஞானக்கண்காட்சியில் எமது விசேட ஆலோசனைக் காரியாலயம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. உயர்கல்வி வேலைவாய்ப்பு தொடர்பான அனைத்துவிடயங்களையும் இக்காரியாலயத்திலே பெற்றுக் கொள்ள முடியும்.

IIS CITY CAMPUS
200, SIVAN PANNAI ROAD, JAFFNA.
Tel : 021 222 8060 Fax : 021 222 6933
Web : iiscitycampus.com Email : iiscc@sltnet.lk

சிவமயம்

# திருமண அழைப்பு

மஹா ராஜ ராஜ ஸ்ரீ...
அன்புடையீர்!
ஓம் ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விரோதி
வருடம் ஐப்பசித் திங்கள் 16ஆம் நாள்
திங்கட்கிழமை (02.11.2009) அஸ்வினி
நட்சத்திரமும் பூரணைத் திதியும் சித்தயோகமும் சுக்கிர ஹோரையும் கூடிய முற்பகல்11 மணி 04 நிமிடம் முதல்
12 மணி 16 நிமிடம் வரை உள்ள மகர லக்கின சுபமுகூர்த்த சுப நல்வேளையில்

வடமராட்சி துன்னாலை சாரதா பீட
சமஸ்கிருத வித்தியாசாலை காசிய கோத்திரம்
சிவஸ்ரீ இராமசந்திர ஐயர் இராஜலட்சுமி
அவர்களின் பௌத்திரியும்
சிவப்பிரம்மஸ்ரீ ராம்.கெங்காதரக் குருக்கள்
நந்தினிதேவி தம்பதியரின் ஏக புதல்வி
சௌபாக்கியவதி ஹம்ஸத்வனி
என்கின்ற வதுவையை

வடமராட்சி நவிண்டில் கரணவாய் மத்தி சாண்டில்ய
கோத்திரம்
சிவஸ்ரீ இராமலிங்கக் குருக்கள் சீதாலட்சுமி
அவர்களின் பௌத்திரனும்
சிவப்பிரம்மஸ்ரீ வேதநாயக சர்மா
ராஜேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட
குமாரனுமாகிய
சிரஞ்சீவி சிவராம சர்மா
வரனுக்கு

கன்னிகாதான திருமாங்கல்ய தாரண பாணிக்கிரஹணம் செய்வதாய் குலனை விநாயகர், அல்லையம்பதி முருகன் திருவருள் துணை கொண்டு மதிப்பிற்குரிய பெரியோர்களின் நல் ஆசியுடன் மேற்படி முகூர்த்தம் அல்லையம்பதி முருகப் பெருமான் ஆலய மண்டபத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் இஸ்டமித்து பந்துக்களுடன் வருகை தந்து மேற்படி முகூர்த்தத்தை நடத்தி வைத்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேற்படி அன்று காலை 6 மணிக்கு மணமகன் இல்லத்தில் சமாவர்த்தனம் நடைபெறும்.
பிற்பகல் 4 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

சிவப்பிரம்மஸ்ரீ ராம். கெங்காதரக் குருக்கள் (மயிலையா)
நந்தினிதேவி தம்பதியினர்,
அல்லையம்பதி தேவஸ்தானம்,
துன்னாலை, கரவெட்டி.
0212263378.

இங்ஙனம் தங்கள்
நல்வரவை நாடும்:

இருவீட்டார் அழைப்பு.
தயவுசெய்து தனிப்பட்ட
அழைப்பாக
ஏற்றுக்கொள்ளவும்.

சிவப்பிரம்மஸ்ரீ ரவேதநாயக சர்மா
ராஜேஸ்வரி தம்பதியர்,
நவிண்டில், கரணவாய் மத்தி,
கரவெட்டி.
0263204208.

(சி/561500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org